www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පිටු 20

දිනමුරසු වාරමලර්

ஜூலை.16–22,1995 ரூபா 11/00

பக்கம் 20

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 110

## கிழக்கில் கெரில்லாப் போர்

## வடக்கில் முற்றுகை யுத்தம்



எக்ஸ்ரே ரிப்போர்ட்

ராஜேஸ்குமாரின் திக் - திக் தொடர்

ராஜீவுக்கு பிரபா எழுதிய கடிதம்

புதிய தொடர்

மம்தா ஏன் மனமுடைந்தார்

இளமை எங்கே? -ஹலோ டாக்டர் பேசுகிறேன்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## கடலின் மடியில்.....

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

மீனவர்கள் நீலக் கடலை
'கடலம்மா' என்றுதான் அழைப்பார்கள்.
அந்தத் தாயின் மடியில்
பிணங்கள் விதைக்கும் அரக்கர்கள் யார்?

கடல்வலயத் தடை இருக்கிறது.
தடைமீறப்படாமல் இருக்க
படைத்தரப்பின் கண்காணிப்பும் இருக்கிறது.
அப்படியிருக்கும் போதும்
கடலின் மடியில் தொடராய் பிணங்கள்!

தனிப்பட்ட சிலர் கூடிச் செய்யும்
கொலைகளாக எண்ண முடியவில்லை.
அப்படியானால் விஷயம் எப்படியும்
வெளியே கசிந்திருக்கும்.

நிராயுதபாணிகளை கொல்வதற்கு
வீரம் தேவையில்லாமல் இருக்கலாம்.
ஆனால், வெளியே தெரியாமல்
காரியத்தைத் தொடர விவேகம் தேவை.
ஆள்-அம்பு-சேனை-வாகன
வசதிகள் தேவை!

அத்தனை வசதிகளும்
யாரோ சில தனிப்பட்ட நபர்களிடம்
இருப்பது சாத்தியமா? இல்லை!
என்பதே பதிலாக முடியும்!

நேற்று -இன்றல்ல
சுமார் ஒரு மாதகாலத்திற்கு
முன்பிருந்தே பிணங்கள்
கரை ஒதுங்கத் தொடங்கியிருந்தன.

அதிகமாக யாரும் அலட்டிக் கொள்ளவில்லை.
விசாரணைகள் துரிதப்படுத்தப்படவில்லை.
மேலும்-மேலும் பிணங்கள் மிதந்து
நிலமை தீவிரமான பின்னரே
விசாரணைகள் பற்றிப் பேசப்படுகிறது.

மிதக்கும் பிணங்கள் தொடர்பாக
தமிழ் பேசும் மக்கள் மத்தியில்
சந்தேகங்களும்-பீதியும் ஏற்பட்டுள்ளன.

இதேவேளையில் திருக்கோணமலையில்
எட்டுத் தமிழர்கள் காணாமல் போயுள்ளனர்.
அங்கே பிடித்து
இங்கே போடுகிறார்களா என்று
எவராவது சந்தேகப்பட்டால்
அதில் தவறு காண இடமில்லை.
சந்தேகங்களை தீர்க்க வேண்டிய
கடப்பாடு அரசுக்கு இருக்கிறது.
அரசுக்கு எதிரான சக்திகளின் வேலை
என்று அரச தரப்பில் கூறப்படுகிறது.
அதனை நிரூபிக்க வேண்டிய
பொறுப்பும் அரசையே சாரும்!

பெரும்பான்மை இனத்தை சேர்ந்தோர்
காணாமல் போயிருந்தால்
விபரங்கள் உடனே வெளிவந்திருக்கும்.

அரசுக்கு நெருக்கடி கொடுக்க
எதிர்க்கட்சியும் துள்ளிக் குதித்திருக்கும்.
ஒன்றா-இரண்டா எத்தனை பிணங்கள்?
அநேகமாக பலருக்கு
அவை யாருடைய பிணங்கள்
என்று புரிகிறது! அதுதான் தென்னிலங்கை
அரசியல் வாதிகள் ஆவேசப்படவில்லை.

வடக்கு-கிழக்கில் இருந்து
தமது பிள்ளைகளை
தலைநகருக்கு தனியே அனுப்ப
பெற்றோர்கள் தயங்கவே செய்வர்.

வடக்கு-கிழக்குக்கு வெளியே
தமிழ் மக்கள் உயிருக்கு உத்தரவாதம்
இல்லையென்ற நிலை உருவானால்
'நாமெல்லாம் ஒரு நாட்டுமக்கள்' என்று
பேசுவது ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடும்.

எனவே- குற்றவாளிகள் யார் என்று
துரிதமாகக் கண்டு பிடித்து
வெளிச்சமிட்டுக் காட்ட வேண்டியது
பொறுப்பில் உள்ளவர்களின் கடமை!

திரைமறைவில் கொலை செய்து
பிணங்களை திரைகடல் மடியில் வீசும்
கொலையாளிகள் யார் எவராக இருந்தாலும்
அவர்களுக்கு ஒரு வார்த்தை-
ஒரேயொரு வார்த்தை சொல்ல ஆசை;
வேரோடு அழிப்பதாக நினைத்துக் கொண்டு
விருட்சங்கள் உருவாக விதை போடுகிறீர்கள்!
வேறென்ன சொல்ல முடியும்.

□□

உங்கள் கரம் சேரும்
ஒவ்வொரு முரசும் பத்திரமாக்கப்படுவதை
நீங்கள் சொல்லித்தானா அறிய வேண்டும்?


அச்சு இயந்திரம் ஏதாவது தவறு செய்து
முரசில் எங்காவது சேதம் இருப்பின்
உங்கள் முகவரிடம்
திருப்பிக் கொடுத்து -
வேறொரு முரசு பெற்றுக் கொள்ளலாம்!
(என்ன, கோபம் தீர்ந்ததா ஹட்டன் உதுமான்)

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## கர்த்தர் என்னை சேர்த்துக் கொள்ளுவார்

**தா**வீது கர்த்தருக்கு பிரியமானவன். அவன் பல வழிகளில் நொருக்கப்பட்டான், துன்பப்பட்டான், தன் பகைவரினால் தேடப்பட்டவன். இத்தனை துன்பத்திலும் அவன் தன் தேவனை தூஷிக்கவும் இல்லை, குறை சொல்லவுமில்லை. இதற்கு மாறாக அவன் வாயில் எப்போதும் 'கர்த்தருடைய துதி இருந்தது. 'கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்' என்றான்.

(சங்கீதம் 34:1)

தாவீது எக்காலத்திலும் தன் பாரங்களை, தேவைகளை, கர்த்தர் மீது வைத்து வேண்டுதல் செய்த போது கர்த்தர் அவன் தேவைகளை பூர்த்திசெய்து அரவணைத்துக் கொண்டார்.

தாவீது சொன்னான் 'என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னை சேர்த்துக் கொள்ளுவார்' என்று.

(சங்கீதம் 27:10)

தாவீது கூறியது போல், தாவீது தேவனை அண்டிக் கொண்டது போல் நாமும் தேவனை நித்திய கன்மலையாக பற்றிக் கொள்வோம் என்றால் கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் சேர்த்துக் கொண்டு நம் அடைக்கலமாவார் என்பது உறுதி.

ஆர்.உதயசசி.
கல்லடி-மட்டக்களப்பு

## வீண் பயங்காட்டல்

ஓர் இரவு நபிகள் (ஸல்) அவர்கள் தோழர்களுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் தங்க வேண்டி நேரிட்டது. அப்பொழுது அங்கு ஒருவர் தூங்கி விட்டார். மற்றொருவர் ஒரு கயிற்றை எடுத்து தூங்குபவர் முன் எறியவும், தூங்கியவர் திடுக் கிட்டு எழுந்து தம்முடன் கிடந்த கயிற்றைக் கண்டு பயந்து நின்றார்.

இதனைக் கண்ணுற்ற பெருமானார் "ஒரு முஸ்லிமை பயங்காட்டுவது ஆகுமான காரியமல்ல; அது விலக்கப்பட்ட செயலாகும்." என கூறினார்கள்.

"உன்னை அப்படி செய்கிறேன்பார்; சந்தி சிரிக்கச் செய்கிறேன். கோட்டுக்கு இழுத்துவிடுகிறேன்." என்று சிலர் பயங்காட்டுவதுண்டு. அதற்கும் பெருமானாரின் தடை உத்தரவு பொருந்தும்.

மேலும் சிலர் பிறரை வீணாக பீதி கொள்ளச் செய்வதற்காக விளையாட்டுப் புத்தியாக சில வேடிக்கைகளை செய்வதுண்டு. அவை சில சமயம் ஆபத்துக்களில் கொண்டு விடும். உதாரணமாக; சிலர் பொய்ச் செய்திகளை உண்மையைப் போல் சோடித்து தாங்கள் வேடிக்கை செய்வதாக எண்ணிக் கொண்டு பிறரிடம் சொல்வார்கள். இதனால் அவற்றைக் கேட்பவர்கள் சில சமயம் பெரிதும் பாதிக்கப்படுவதுண்டு. இதனையும் நபி (ஸல்) அவர்களின் கூற்று தடை செய்கின்றது.

**மௌலவி அனீஸ் எம் ஷாகிர்- கும்புக்கந்துறை.**

## கவிதைப்போட்டி இல-106

### பரிசுக்குரிய கவிதை

### தீக்குளிப்பு

துப்பாக்கி துப்பிவிட்ட ரவைகளினால்
துடித்தழிந்து எம் கணவர் தொலைந்துபோனார்!
அப்பாவித் தமிழர்களின் அழிவை மாற்றி
அடுத்தடுத்த பரம்பரையும் எங்களைப்போல்
இப்பாரில் விதவைகளாய் வாழ்ந்திடாமல்
இருப்பதற்கே தீக்குளியில் இறங்குகின்றோம்!
துப்பாக்கிக் கலாசாரம் ஒழிக; நாட்டில்
திக்கெட்டும் சமாதானம் மலர்க தாயே!

செ.குணரத்தினம்-மட்டக்களப்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### கண்டது கண்ணீர்

குண்டுகள் வெடித்து
சந்ததி மடிந்ததால்
இந்த பெண்டிரின் வாழ்வும்
கண்டது கண்ணீர்.

தெ.லோஜனா-கொழும்பு-15.

### பெற்ற வயிறு.

பூவும் பொட்டும்
கருகி யுதிர்ந்தது
கண்களில்லாக்
குண்டுவீச்சில்!
பெற்ற வயிறு
பற்றியெரியுது
சுற்றிவளைப்பின்
சங்கதியாலே!

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்-06

### மலிவான பரிசாமோ?

தாய்க்குலங்கள் தரணியிலே
தலை விரித்துக் கூச்சலிடல்
தவறாத விதியாமோ?
தான் தோன்றித் தனமான
இனவாதப் போரதனின்
மலிவான பரிசாமோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு

### ஓடங்கள்

கோரப்போர் சாகரத்தில்
துடுப்பையிழந்த ஓடங்கள்.

ச.பிருந்தா-திருக்கோணமலை.

### நம் தேசம்

இறப்புகளிங்கே இலவசம்
இடுகாடாய் இத்தேசம்
உண்மைகளும் உபவாசம்
உணர்விக்கத்தான் உத்தேசம்
அமைதியும் அஞ்ஞாதவாசம்
அநீதியுமிங்கே அஞ்ஞாதவாசம்
பதவிகளின்று பலர்வசம்
பகற்கனவுகளில் பரவசம்
விரையுமா அந்த சமரசம்
விடையிங்கே விதியின்வசம்.

நீர்கொழும்பு நிலா ஸ்நேகி.

### தாய் மனசு

பழுதின்றிப் பெற்றெடுத்து
பாசமாய் வளர்த்த மகன்
பாழும் வன்முறையால்
பாரில் விழுந்ததனை
சூழும் விதியென்று
செகத்தோர் மொழிந்தாலும்
அழுகின்ற தாய் மனசு
ஆறாது ஆறாது.

சோ.அருளானந்தன்-மட்/கல்லடி.



### "மி(வி)தி வெடியில்!"

வீடுவிட்டு பிள்ளை
வெளியிலே வந்து
கால்பதித்த வேளை
வெடித்ததோ மிதிவெடி?!..

கோட்டைமுனை-முத்துமணி-அக்குறணை.

### நித்திரையோ?

வயலுக்குப் போனவரை வாளால் வெட்டினாங்க
தொழிலுக்குப் போனவரைத் துவக்கால சுட்டாங்க
பள்ளிக்குப் போனவனைப் படைக்காக பிடிச்சாங்க
ஆண் துணை யாருமில்லை, அபலைகளாய் ஆகிவிட்டோம்
யாரிடம் சொல்லிஅழ; ஆண்டவனும் நித்திரையோ?

சீ.தங்கவேல்-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-110



**கவனியுங்கள்**

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 22.07.1995.

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 110
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

### விடிவு எப்போது?

கடுந்துயர் வாழ்க்கையில் அடிக்கடி நுழையும்
கடுகென இருந்திட்ட நிம்மதி மறையும்
விடிவென ஓர்நாள் என்றுதான் மலரும்
விம்மலே குறைந்திடும் நிலையென்று மலரும்?

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### கண்ணீர் ஓடங்கள்


பாழும் வன்முறையில் பறிபோகும் தருமங்கள்
விழுதுகள் பறிகொடுத்து தள்ளாடும் விருட்சங்கள்
மாழும் வயதினிலே மடிதாவிய சோகங்கள்
நாளும் கண்ணீரில் நடமாடும் ஓடங்கள்.

மன்னனூர் ஆனந்தன்-மன்னம்பிட்டி.

### விதியும் இதுதானோ?

செந் நெல் வயலெல்லாம்,
செங்குருதி பாயும் வரை,
கண்ணீரும் கம்பலையும்,
விட்டேகும் நாளேதோ?
கதியும் இனி மாறாதோ
விதியும் இதுதானோ?

சி.பத்மினி-மட்டக்களப்பு



சிறுகதைகளில் தற்கால சூழ்நிலையை பிரதிபலிக்கும் கதைகள் வரத் தொடங்கியுள்ளமை நல்ல மாற்றம். சொன்னதையே திருப்பிச் சொல்லும் வழக்கமான சிறுகதைகளை தவிர்த்து விடுங்கள்.

எஸ்.பானுமதி-துறைநீலாவணை.

□□

அன்பு முரசே....

நித்தமும் எனை பித்தங் கொள்ள வைக்கும் உன் அமைப்போ அழகு. வாரம் தோறும் நீ படைக்கும் தாய், கடிஜோக்ஸ், தொடர்கதை ஆகியன தேன்மாரி பொழிகிறது. சபாஷ். உன்னை எத்தனை முறை பார்த்தாலும் சலிப்பதில்லை. என் இரு விழியோ ஒரு கணமும் உன்னை பாராமல் இமைப்பதில்லை.

செல்வி.கமல்நேசி-களுத்துறை (தெற்கு)

□□

எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் அலசல் இரண்டும் இருவேறு கோணம். கருத்து மோதலுக்கு களம் கொடுத்து முரசே நீ உண்மைகளை வெளிக்கொண்டு வந்து விடுகிறாயே!

எஸ்.கே.முகமட்-கல்முனை

□□

தாய்-நாவல் சூப்பராக தொடர்கிறது. தினம் நீ வரமாட்டாயா?

இரா.நாகராஜா-நானுஓயா

□□



முரசே! இலக்கிய நயம் சிறப்பா? அல்லது ரசிகன் தரும் உண்மைக் கதை அழகா என்று போட்டி வைத்தால் இலக்கிய நயத்திற்குத்தான் எமது வாக்கு!

ஆர்.சர்மிளா-ஏ.உஷா-கண்டி

□□

ஜிமிக்கிச்சிக்கான் முரசிற்கு,

லேடீஸ் ஸ்பெசலுடன், ஜென்ஸ் ஸ்பெசலும் ஆரம்பித்து விட்டீரோ? அதனை லேடீஸ் ஸ்பெசல் பகுதிக்குள் போட்டதை கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

ஏ.எச்.ராஸீன் மொகமட்-ஏத்தாளை.

□□

விளையாட்டுப் பகுதியை அடிக்கடி கைவிடலாமோ? ஒவ்வொரு முரசிலும் அது வேண்டும்!

மு.மு.முகமது ஸாஹிர்-சாய்ந்தமருது- 10

□□

நீ சுமந்து வரும் அம்சங்கள் அனைத்தும் சூப்பர் அதிலும் மெயினாக எக்ஸ்ரே ரிப்போர்ட், அரசியல் தொடர் பிரமாதம்.

எச்.எல்.பைசர்-புப்போகம

□□

'தாய்' தரமான தொடரால் எம் உள்ளங்களை கொள்ளை கொள்கிறாய் சபாஷ்! முரசே!

முரசு வாசகிகள்-கரைத்தீவு-பொன்பரப்பி

□□

அன்பின் முரசே!
"அஞ்சாமல் நீ தரும்
அறுசுவை அத்தனையும்
அளவில்லா அருஞ்சுவையே என
அன்புடன் வாழ்த்துகிறேன்"

எம்.லஷ்மி காந்த்-அக்கரைப்பற்று-7

□□

ரசிகன் தரும்
இலக்கிய நயம் இலக்கிய பிரியர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளது. லேடீஸ் ஸ்பெஷல் பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்-
மட்டக்களப்பு.

# ஆட்பலத்துக்கு ஏற்ப புலிகளது தாக்குதல் தொடரும்!

## கேந்திர நிலைகளை பாதுகாப்பதில் புலிகள் நாட்டம்!!

(நமது விசேட நிருபர்)

**யாழ் குடாநாட்டில் பாதுகாப்பு படையினர் ஆரம்பித்த 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் ஆரம்பத்தில் முதல் நாளன்று புலிகள் பெயரளவான எதிர்ப்பை மட்டுமே தெரிவித்தனர். உள்ளே வர அனுமதித்துவிட்டு பின்னர் தாக்குதல் நடத்தும் தந்திரத்தையே புலிகள் பிரயோகித்துள்ளனர் என்று இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இதே வேளை யாழில் மூண்ட பாரிய யுத்தத்தில் இரு தரப்புக்கும் ஏற்பட்ட இழப்பை விட பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்களே அதிகமாகும்.**

### புலிகள் மறுப்பு

தாக்குதல் தொடர்பாக முன்னெச்சரிக்கை பிரசுரங்களை விமானம் மூலமாக வீசியதாகவும், வானொலி மூலம் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவித்ததாகவும் அரசு தெரிவித்துள்ளது. போதிய அறிவித்தலின் பின்னரே தாக்குதல் நடத்தப்பட்டதால் பொதுமக்களின் இழப்பு தடுக்கப்பட்டதாக அரசு கூறியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் 'புலிகளின் குரல்' வானொலி அரசாங்கத்தின் கூற்றை மறுத்துள்ளது. விமானம் மூலமாக துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன என்று அரசு கூறுவது பொய்யாகும். வானொலி மூலம் ஊரடங்கு அறிவித்தல் தெரிவிக்கப்பட முன்னரே விடிந்தும் விடியாத அதிகாலை நேரத்தில் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று புலிகளின் குரல் தெரிவித்துள்ளது.

இதேவேளை பொதுமக்கள் பலியாகவில்லை என்றும், புலிகள் தமது உறுப்பினர்கள் பலியானதை பொதுமக்கள் என்றும் அறிவிக்கிறார்கள் என்று அரசாங்க வெகுஜன தொடர்பு சாதனங்கள் கூறிவருகின்றன.

### பலத்த இழப்புக்கள்.

முரசுக்கு கிடைத்துள்ள தகவலின்படி பொதுமக்கள் 200 பேர் வரை பலியானதாக தெரியவந்துள்ளது. நவாலியில் சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் குறைந்தது 75 பேர் பலியானதாக நம்பப்படுகிறது. வலிகாமம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் என்றும், நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்றும் சில பத்திரிகைகளில் இருவேறு தாக்குதல்கள்போல செய்திகள் வந்திருந்தன.

நவாலி சென் பீற்றர்ஸ் ஆலயம் வலிகாமம் பகுதியில்தான் இருக்கிறது. அங்கு நடத்தப்பட்ட தாக்குதலில்தான் பொது மக்கள் தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முதல் நாள் தாக்குதலில் தான் இழப்புக்கள் பாரியளவில் ஏற்பட்டன. இதேவேளை பலியானவர்களின் முழு எண்ணிக்கையை சரியாக அறியமுடியவில்லை. யாழ் பத்திரிகைகளும் வெவ்வேறான எண்ணிக்கைகளையே வெளியிட்டுள்ளன.

வடமராட்சியிலும் ஒரு இந்து ஆலயம் விமானத்தாக்குதலுக்கு இரையாகியது. வல்வெட்டித்துறை சிவன்கோயிலே தாக்குதலுக்கு உள்ளான ஆலயமாகும். சுப்பர்சோனிக் விமானத்தின் றொக்கற் தாக்குதலில் வடமராட்சி பொலிகண்டியில் ஆறு பேர் காயமடைந்தனர். பத்து வீடுகள் சேதமடைந்தன. இணுவில் முருகன் கோவிலும் விமானத்தாக்குதலுக்கு இலக்காகியது.

### 3 1/2 இலட்சம் அகதிகள்

புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' பத்திரிகையின் தகவலின்படி அடையாளம் காண முடியாத நிலையில் 150 சடலங்கள் யாழ் வைத்தியசாலையில் வைக்கப்பட்டன.

மூன்றரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள் என்றும் 'ஈழநாதம்' தெரிவித்துள்ளது. ஆனால் 'ஈழநாடு' பத்திரிகை ஒரு இலட்சம் மக்கள் அகதிகளாகி உள்ளதாக தெரிவித்துள்ளது. அகதிகள் தொகை மூன்று இலட்சம் என்று யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு.செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

### வெளிநாட்டில் பிரசாரம்

முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை மூலம் வடபுலப் போரில் படைகளது கைகள் மேலோங்கியுள்ளதாக இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அடுத்து புலிகள் மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகளை பொறுத்தே படையினரின் வெற்றி தற்காலிகமானதா இல்லையா என்பது தெரியவரும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இதே வேளை புலிகளது வெளிநாட்டுக் கிளைகளால் படையினரின் நடவடிக்கைகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

### இந்திய நிபுணர்களாம்

**"இந்திய இராணுவ நிபுணர்களும் இலங்கை படைகளுடன் களத்தில் இருக்கிறார்கள். இந்திய கடற்படை கப்பல்கள் வடபகுதிக் கடலில் தரித்து நிற்கின்றன. இந்திய உதவி இல்லாமல் இலங்கைப் படைகள் இப்படி முன்னேறி இருக்க முடியாது"** என்று வெளிநாடுகளில் உள்ள புலிகள் கூறிவருகின்றனர்.

இலங்கையில் தமிழீழம் உருவாகுவதற்கான சூழ்நிலை 99% ஏற்பட்டு விட்டது என்று 'அவ்ரோ' விமானங்கள் வீழ்த்தப்பட்டதை அடுத்து வெளிநாடுகளில் உள்ள புலிகளின் கிளைகள் கூறிவந்தன. பாரிய நிதி திரட்டலிலும் ஈடுபட்டுவந்தன. தற்போதைய தாக்குதல் புலிகளது வெளிநாட்டுக்கிளையினருக்கு சங்கடமான ஒரு நிலையை தோற்றுவித்துள்ளது என்று தெரியவருகிறது.

### இந்தியாவின் மௌனம்

இதே நேரம், வெளிநாடுகளின் கண்டனங்கள் எதுவும் ஏற்படப்போவதில்லை என்ற நம்பிக்கையோடுதான் அரசு பாரிய தாக்குதலை நடத்த முன்வந்தது.

இந்தியா உட்பட எந்தவொரு நாடும் பொது மக்கள் பலியானது குறித்து எவ்வித கருத்தையும் இதுவரை வெளியிடவில்லை.

1987ல் வடமராட்சியில் படைகள் மேற்கொண்ட பலத்த தாக்குதல் நடவடிக்கை இந்தியாவின் கண்டனத்திற்கு உள்ளானதோடு இந்திய நேரடித்தலையீட்டுக்கும் காரணமாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### புலிகளும் காரணம்

தற்போது வெளியுலகில், புலிகளைவிட அரசுக்கே சாதகமான நிலை இருப்பதையே உணரக்கூடியதாக இருக்கிறது. இந்த வகையில் புலிகளை தனிமைப்படுத்தும் தந்திரத்தில் அரசுக்கு இதுவரை வெற்றி கிடைத்துள்ளது. இதற்கு புலிகளும் ஒரு வகையில் காரணம் எனவும், இந்தியா தொடர்பான புலிகளது கொள்கை எத்தனை தவறானது என்பதை தற்போதைய நிலவரம் வெளிப்படுத்தியுள்ளது எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

### புலிகளின் நோக்கம்

தற்போது தம்மிடமுள்ள ஆட்பலத்துக்கு ஏற்ப, தமக்கு சாதகமான முறையிலான தாக்குதல்களையே புலிகள் மேற்கொள்ள நினைத்துள்ளதாக தெரிகிறது.

படையினர் முன்னேறிச் சென்றுள்ள பகுதிகளில் புலிகளது கேந்திர நிலைகள் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளது வானொலி நிலையம், பத்திரிகை நிறுவனம், மற்றும் இராணுவ தளபாட நிலைகள், பிரதான முகாம்கள் போன்றவை தற்போது படைகள் கைப்பற்றியுள்ள பகுதிகளில் இருந்து வெளியேதான் இருக்கின்றன.

தமது கேந்திர நிலைகளையும், தலைமைப்பீடத்தையும் பாதுகாக்கக்கூடிய தூரத்தில் வைத்தே படையின் முன்னேற்றத்தை புலிகள் தடுத்து நிறுத்தி மோதலை தீவிரப்படுத்தினார்கள்.

இதேவேளையில் படைகள் 10.07.95 அன்று யாழ் பலாலி தளத்தில் 16 கப்பல்கள் மூலமாக மேலும் படைகள் கொண்டு சென்று இறக்கப்பட்டுள்ளன.

தமது தரப்பில் ஏற்பட்ட இழப்பு விபரங்களை புலிகள் உடனடியாக தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கனடா கண்டனம்

கனடா வெளிநாட்டமைச்சர் தற்போதைய யுத்தத்தில் மனித உயிர்கள் பலியாவதையிட்டு வருத்தம் தெரிவித்துள்ளார். புலிகள் ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை மீறியிருந்தமை குறித்தும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

---

# உயிர்வாழ இடம்பெயரும் மக்கள்!

## இரவிலும் தொடரும் ஷெல் வீச்சு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியான வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து இராணுவம் முற்றாகவே வெளியேறியுள்ளனர். இப்பகுதி அடர்ந்த காட்டுப் பிரதேசமாகும். முன்னர் வாகரைப் பகுதியில் நடந்த தாக்குதல் ஒன்றில் ஒரே தடவையில் 27 படையினர் கொல்லப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

இதே வேளை முறக்கொட்டான்சேனை கிராமமக்களை படையினர் இரவில் கோயில் ஒன்றில் தொடர்ந்து பல நாட்கள் வந்து தங்குமாறு கேட்டிருந்தனர். அச்சந்தர்ப்பத்தில் ஒரு கர்ப்பிணித்தாய் குழந்தை பிரசவித்ததும் சிறுவன் ஒருவன் பாம்பு கடித்து இறந்ததும் அறிந்ததே.

சந்திவெளி, கிரான், சித்தாண்டி, வந்தாறுமூலை கிராமங்கள் மின் மாற்றிகள் தகர்க்கப்பட்டதால் இருளில் மூழ்கியுள்ளன. இதனாலும், தொடர்ந்து இரவு வேளையில் ஷெல் வீச்சு இடம்பெறுவதனாலும், மக்கள் துன்புறுத்தலுக்கு ஆளாவதாலும் இப்பகுதிகளில் உள்ள மக்கள் பயந்து தற்சமயம் மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடம்பெயர ஆரம்பித்துள்ளனர்.

வசதிவாய்ப்பு உள்ளவர்கள் மட்டுநகர் பகுதிக்கும் ஏழை எளியவர்கள் இரவு வேளையில் அண்மையில் உள்ள கடற்கரைப் பகுதிக்கும் செல்கின்றனர். இப்பகுதியில் உள்ள இராணுவ முகாம்கள் தாக்கப்படும் என்ற வதந்தியால் ஏற்படும் பய உணர்வும், மக்களை மனிதக் கேடயங்களாக படையினர் பயன்படுத்துவதுமே மக்களை கிலி கொள்ள வைக்கிறது.

இரவில் மக்களோடு மக்களாக இரு தரப்பினரும் நிற்பதாகவும் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிள் விசேட இராணுவ அணி முறக்கொட்டான்சேனையிலேயே உள்ளது.

இதே வேளை புலிகளின் மட்டு-அம்பாறை அரசியல் பிரிவு கிரான், சித்தாண்டி, வந்தாறுமூலை பகுதிகளில் விளக்க பிரசுரங்களை மக்களுக்கு பரவலாக வினியோகித்தும், ஒட்டியுமுள்ளது. இப்பிரசுரங்களின் சாராம்சம் ஆட்கள் திரட்டுவதாகவே உள்ளது.

இதே வேளையில் கிழக்குப் பகுதியில் புலிகள் நிதி வசூலிப்பிலும் தீவிரக் கவனம் செலுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் அரசாங்க ஊழியர் ஒருவர் இருந்தால் ரூபா 5000/- மும், இருவர் இருந்தால் 7000/- மும் நடுத்தர வசதியுள்ள ஒரு குடும்பத்தவர் ரூபா 3000/- மும் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதாக தெரியவருகிறது.

---

# கிழக்கில் புலிகள் ஆட்திரட்டல் பிரசாரம்

## களத்துக்கு வருமாறு தமிழ் மக்களுக்கு அழைப்பு!

கிழக்கு மாகாணத்தில் புலிகள் அமைப்பினர் துண்டுப் பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டுள்ளனர்.

இயக்கத்துக்கு புதிய உறுப்பினர்களை திரட்டுவதை நோக்கமாகக் கொண்டே அவை வெளியிடப்பட்டுள்ளன.

புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

"அடிமைகள் அல்ல நாங்கள் என்று அடக்கமாகக் கூறினோம். அடம்பிடித்துக் கூறினோம். அழுது கூறினோம். கேட்பாரில்லை. ஆயுதங்களைக் கைகளில் பிடித்துக் கூறுகிறோம். அன்று அனுதாபம் தெரிவிக்கத் தவறிய உலக அமைப்புக்கள் இன்று கண்டனக் கண்களுடன் கரிசனமாய் பார்க்கின்றன.

தமிழனுக்கு என்றோர் தாயகமிருந்தால் இன்று நம்மையும் நான்கு நாடுகள் ஆதரித்துப் பேசியிருக்கும். அறிக்கை எழுதியிருக்கும். நமக்கோ நாடுமில்லை, நாதியுமில்லை.

இந்த அநியாயங்கள் அடுத்த தலைமுறைக்கும் தொடரவேண்டுமா? இது புலிகளின் காலம். தியாகங்களும், இழப்புக்களும் வீண் போய்விடக்கூடாது. ஆகவே, தமிழ் மக்களே கடமையை உணர்ந்து கொண்டு களத்திடை புக வாருங்கள்" என்று அப்பிரசுரத்தில் புலிகள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள சில முஸ்லிம் கிராமங்களில் படையினருக்கு உதவ வேண்டாம் என்று புலிகள் கூறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

---

# அரிசி வாங்கவும் இராணுவ அனுமதி?

## மருத்துவ வசதியின்றி 15 ஆயிரம் மக்கள் அவதி!

(சஞ்சீவன்)

திருக்கோணமலை மாவட்டத்தில் பதினைந்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் போதிய உணவு, மருத்துவ வசதிகளின்றி அவதிப்பட்டு வருகின்றனர்.

மூதூர், ஈச்சிலம் பற்று பிரதேசங்களைச் சேர்ந்த கிராமங்களான கட்டைபறிச்சான், சம்பூர், கூனித்தீவு, இளக்கந்தை, சகாயபுரம், நல்லூர், பள்ளிக்குடியிருப்பு, மேன்காமம், கங்குவேலி, மணல்சேனை, கிளிவெட்டி, இலங்கைத்துறை முகத்து வாரம், பூநகர், கறுக்காமுனை, வெருகல், ஆகிய கிராமங்களில் வாழும் மக்களே பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அன்றாட அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, சீனி, பருப்பு போன்றவற்றைக்கூட தேவையான அளவு எடுத்துச் செல்வதை இராணுவத்தினர் கட்டுப்படுத்தியுள்ளனர்.

இந்த அத்தியாவசியப் பொருட்களை வாங்கிச் செல்ல வேண்டுமானால் கூட அதற்கு முன்னர் இராணுவத்திடம் அனுமதி பெற வேண்டியுள்ளது. குறைந்தளவான அத்தியாவசியப் பொருட்களை கொண்டு செல்லவே இராணுவத்தினர் அனுமதியளிக்கின்றனர்.

இதேவேளையில் கடந்த 6.07.95 அன்று திருக்கோணமலையில் செல்வநாயகபுரம் என்னுமிடத்தில் தொழிற் பயிற்சி கல்லூரி முன்பாகவும், யூ.என்.எச்.சி.ஆர். அகதிகள் முகாம் முன்பாகவும் நின்றுகொண்டிருந்த பொது மக்கள் மீது கடுமையாக நடந்து கொண்ட பொலிசார் அவர்களை கைது செய்து சென்றனர். இதனால் அப்பகுதியில் உள்ள மக்களிடையே பீதி நிலவுகிறது.

---

# மர்மக் கொலைகளின் சூத்திரதாரி கண்டுபிடிப்பு?

## கொழும்பு சிங்கள வார இதழ் தகவல்

பொல்கொட ஆறு, அளவ்வ ஆறு போன்றவற்றில் மிதந்து வந்த சடலங்கள் யாருடையவை, யாரால் கொலை செய்யப்பட்டவை என்ற சந்தேகங்களும், பல்வேறு ஊகங்களும் வெளியாகிவருகின்றன.

இதுவரை நாலு சடலங்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் நாலும் தமிழர்களுடையவை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'யுக்திய' என்னும் சிங்கள வாரப் பத்திரிகை சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒரு அதிகாரியின் தலைமையில் இயங்கி வரும் இராணுவக் குழுவொன்றே கொலைகளை செய்துள்ளதாக 'யுக்திய' தெரிவித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் வெளியிட்டுள்ள விபரங்கள் பின்வருமாறு:

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி தலைமையில் இயங்கிய குழுவே பொல்கொட ஆறு, அளவ்வ ஆறு ஆகியவற்றில் மிதந்த சடலங்களின் கொலைக்கு காரணமாகும். இந்தத் தகவல் மேற்படி கொலைகள் தொடர்பாக விசாரணை நடத்திவரும் இரகசியப் பொலிசாருக்குக் கிடைத்துள்ளது.

தென்னிலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக வெளியுலகிற்கு காட்டவே அக்கொலைகள் செய்யப்பட்டதாகவும் 'யுக்திய' தெரிவித்துள்ளது.

இராணுவத்துக்குள் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்த முனைந்து தற்போது இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றுள்ள இராணுவ அதிகாரியும், சில இராணுவத்தினரும் இணைந்தே கொலை நடவடிக்கையில் ஈடுபட்டதாக இரகசியப் பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

வவுனியாவில் இருந்து கடத்திவரப்பட்ட ஒரு தமிழ் இளைஞரை ஹங்வல்ல பகுதியில் சில நாட்கள் வைத்திருந்து விட்டு கொலை செய்துள்ளார்கள். குறிப்பிட்ட இளைஞர் வவுனியாவிலிருந்து வட பகுதிக்கு பொருட்களை எடுத்துச் சென்று விற்பனை செய்பவராவார் என்றும் 'யுக்திய' தகவல் வெளியிட்டுள்ளது.

---

# தனிமாகாணசபை கொள்கையில் மாற்றமில்லை

## இறுதிமுடிவாக ஏற்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பு

வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கு என்று தனி மாகாணசபையை ஏற்படுத்த வேண்டும். அதற்கு தென்கிழக்கு மாகாண சபை என்று பெயரிட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிவருகிறது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை கொழும்பில் துறைமுக வளவிலுள்ள கேட்போர் கூடத்தில் முஸ்லிம் காங்கிரஸ் நடத்தியது.

கலந்துரையாடலையடுத்து முஸ்லிம் காங்கிரஸ் சுவடிக்கூடப் பணிப்பாளர் ஏ.எம். அப்துல் அஸீஸ் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

"ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் ஆரம்ப நிலைப்பாடாக இருந்த மாகாண சபைக் கோரிக்கையின் வடிவமே 'தென் கிழக்கு மாகாணசபையாகும். அம்பாறைத் தொகுதி தவிர்ந்த திகாமடுல்ல மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களை உள்ளடக்கியதாகவே 'தென்கிழக்கு மாகாணசபை அமையும்.

தென்கிழக்கு மாகாணசபை ஒன்றை ஏற்படுத்திக் கொள்வது என்பதே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் கொள்கையாகவும், நிலைப்பாடாகவும் இருக்க வேண்டும் என்பது இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

---

# துணிகரமான துணிக் கொள்ளை!

## இது இரண்டாவது முறை!

ஏறாவூரில் செங்கலடியில் உள்ள கூட்டுறவு சங்கம் புலிகளால் கொள்ளையிடப்பட்டது. ஏறாவூர் வடக்கு-மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கமே கொள்ளைக்குள்ளாகியது. ஏற்கனவே 1992 இலும் இக்கூட்டுறவுச் சங்கம் புலிகளால் கொள்ளையிடப்பட்டது.

காற்சட்டைத் துணிகள், சாறிகள், பெனியன்கள் ஆகியவையே கொள்ளையிடப்பட்டுள்ளன. கொள்ளையிடப்பட்ட பொருட்களின் பெறுமதி நாலு இலட்சத்துக்கு மேல் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

10.07.95 அன்று இரவு 9.45 மணி முதல் 11.07.95 அதிகாலை நாலு மணி வரை சங்கத்திலிருந்து மாட்டு வண்டிகள் மூலமாக புலிகள் துணிகளை ஏற்றிக் காட்டுப் பகுதிக்கு அனுப்பிக்கொண்டிருந்தனர். இத்தனைக்கும் செங்கலடி பொலிஸ் காவலரணுக்கும் கொள்ளை நடந்த கூட்டுறவுச் சங்கத்துக்கும் இடைப்பட்ட தூரம் நூறு யார், மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. கொள்ளையில் ஈடுபட்ட புலிகள் அமைப்பினர் சீருடைகளில் காணப்பட்டனர். நூறு பேர் வரை இருந்தனர்.

# சுவிஸிலுள்ள முரசு வாசகரின் சோகம்

## திருமலையில் அவர் குடும்பம் கைது.

நான் யுத்த சூழலினால் நாட்டை விட்டு வெளியேறி சுவிசில் அகதிகள் தஞ்சம்கோரி வாழ்ந்து வருகிறேன். இந்நிலையில் குடும்பத் தலைவனாகிய எனது துணையின்றி எனது மனைவியும் மூன்று பிள்ளைகளும் திருமலை உமையாள் புரத்தில் வசித்து வந்தனர். ஆனிமாதம் 17ம் திகதி இரவு 9 மணியளவில் எனது மனைவி க.மகவதியும், எனது மூத்த மகன் கனகரட்ணம் துஷ்யந்தனும் திருமலை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக எனக்கு செய்தி கிடைத்துள்ளது. எனது மகன் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவராவார்.

கைது செய்யப்பட்ட என் குடும்பத்தவர்களுக்கு என்ன நடந்ததென்றே தெரியாத நிலையில் நான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளேன். அரசுக்கெதிரான நடவடிக்கைகளுக்குத் துணையானவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக நான் அறிந்தேன். ஆனால் திருமலையிலுள்ள எனது தூரத்து உறவினர்களுடன் நான் தொடர்பு கொண்டபோது எனது குடும்பத்தவர்களுக்கு அரசுக்கெதிரான நடவடிக்கைகளில் எந்தவித சம்பந்தமும் இருந்திருக்கவில்லை என்பதையும் நான் அறியக் கூடியதாயுள்ளது.

இது விடயமாக நான் சுவிஸிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம், அகதிகளுக்கான ஐ.நா.சபையின் உயர் ஸ்தானிகராலயம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டும் இதுவரை எவ்வித விமோசனமும் கிடைக்கவில்லை. எனது குடும்பத்தவர் தொடர்ந்தும் சிறைப்பட்டிருப்பார்களேயானால் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படவேண்டிய கவலைக்கிடமான நிலை ஏற்படலாம். ஆகவே இவ்விடயத்தில் மனித உரிமைகள் அமைப்புக்கள் தொடர்புகொண்டு ஆவன செய்ய வேண்டுமென்பது எனது மனிதாபமானரீதியான கோரிக்கையும், அடிமனதின் ஆதங்கமும் ஆகும். 'முரசு' இச்செய்தியினை வெளியிடுவதன் மூலம் பாதிக்கப்பட்டிருக்கும் எமக்கு விமோசனம் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கிறேன்.

பாதிக்கப்பட்டிருக்கும் முரசு வாசகர்
ஏ. கனகரட்ணம், சுவிஸ்

# காட்டூண் மூலை

நன்றி—ஐலண்ட்




# எங்களை புறக்கணிப்பது எதற்கு?

(திரு மலை நிருபர்)

"அவசரகால நிலைமைகளிலும் ஆபத்தான காலகட்டங்களிலும் முன் நின்று மக்களுக்கு உதவும் நாங்கள் எல்லா வகையிலும் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறோம். கூட்டுறவு வாரம் கொண்டாடும் இந்த நேரத்திலாவது எங்கள் துயரநிலை கவனத்தில் எடுக்கப்பட்டு ஆவன செய்யப்பட வேண்டும். அதற்கு தினமுரசுதான் உதவவேண்டும்" இவ்வாறு தினமுரசு நிருபரைச் சந்தித்த கூட்டுறவு ஊழியர்கள் பலர் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர்.


பாதிக்கப்பட்ட வேளைகளில் எங்களுக்கு எவ்வித நிவாரணங்களும் கிடைப்பதில்லை. கேட்டால் மாதச் சம்பளக்காரர் என்கிறார்கள். அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சொத்து இழப்புக்கான நஷ்டஈடும் எமக்கு இல்லை. அது கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்பட மாட்டாது என்கிறார்கள்.

மொத்தத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான சலுகைகளோ அல்லாதோருக்கான நிவாரணங்களோ எமக்குக் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கும் அவர்கள், அரச ஊழியர்களைப் போல் சம்பள அதிகரிப்புகள் கூட எமக்கு வழங்கப்படுவதில்லை. ஒரு பொது முகாமையாளரின் மாதச் சம்பளமே 4000/-க்குக் குறைவானதே எனத்தெரிவித்தார்கள்.

மாதம் ஆயிரத்திலோ இரண்டாயிரத்திலோ பட்டினியுடன் காலந்தள்ளும் கூட்டுறவு ஊழியர்களது துயரம் கூட்டுறவு வாரம் கொண்டாடுவதால் தீர்ந்து விடப்போவதில்லை.

# கல்முனையில் தமிழுக்கு அடி

(காரைதீவு நிருபர்)


வேண்டும்.
2.
3.
10 நிமிடங்கள் முன்வதாக இருக்கவேண்டும்.
4.

தமிழ் மொழி அமுலாக்கலில் அரசு காட்டும் அக்கறை வரவேற்கக்கூடியது. எனினும் நம்மவர் காட்டும் அசிரத்தை அதைவிட அதிகம். முற்று முழுதாக தமிழ் பேசும் சமூகம் வாழ்கின்ற கல்முனைப் பிரதேசத்திலுள்ள இ.போ.ச. சாலையிலிருந்து வழங்கப்பட்ட பற்றுச் சீட்டு ஒன்றின் மாதிரி இங்கு தரப்படுகின்றது. அதிலுள்ள தமிழ் படும் பாட்டை பாருங்கள்.

# "பாரிசில் ஒரு ஈயடிச்சான் கொப்பி"

## கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறியலாமா?

பாரிசிலிருந்து வெளியாகும் புதிய தமிழ் பத்திரிகை ஒன்று தினமுரசைப் பார்த்து அடியொற்றி வருகிறது. விற்பனையாகாத வருத்தத்தில் அந்த பத்திரிகை முரசுமீது விமர்சனம் வைத்திருக்கிறது.

குறிப்பிட்ட பத்திரிகை புலிகளின் பிரான்ஸ் கிளைப் பொறுப்பாளரால் வெளியிடப்படுகிறது. முன்னாள் மாவீரரான 'வேலும் மயிலும்' எனப்படும் அன்னார் 'தூள் கிளப்பி' சில காலம் பாரிஸ் பாதாளச் சிறையில் இருந்தவர். தற்போது 10,000 பிராங் மாதாந்த ஊதியமாக புலிகளுக்கு திரட்டப்படும் நிதியில் இருந்து எடுத்துக் கொள்கிறார் மயில்.

இவர் பொது நலம் பற்றிப் பேசலாமோ? மிஸ்டர் மயில்! கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறியலாமோ?

பத்திரிகைத் துறையில் மட்டுமல்ல எந்தவொரு துறையிலும் வித்தியாசமாக சிந்திப்பதே கம்பீரம். 'ஈயடிச்சான் கொப்பி' நிலையிலிருந்து முதலில் வெளியே வாருங்கள். புதிதாக என்ன செய்யலாம் என்று யோசியுங்கள். அப்படியானால் உங்களுக்கும் வாசகரிடம் வரவேற்பு கிடைக்கக்கூடும். வயிறெரியும் தேவை இருக்காது. அதை விடுத்து முரசிடம் கற்றுக் கொண்டு முரசிலேயே கூர்தீட்டிப் பார்க்க நினைத்தால் வாசகர்கள் ஏமாறமாட்டார்கள். தொடர்ந்தும் புலம்ப வேண்டித்தான் இருக்கும்.

முரசு வாசகர்
ஆர்.சத்தியேந்திரன்,பாரிஸ்.

# வீதியின் அவலநிலை

மட்டக்களப்பு கல்லடி. அரசாங்க விடுதி வீதி இன்று மிகவும் மோசமான தொருநிலையில் இருக்கின்றது. தார் வீதியாக இருக்கும் இவ் வீதியால் பொதுமக்களோ மற்றும் வாகனங்களோ செல்ல முடியாத நிலையில் கற்கள் சிதறுண்டும், பள்ளமும் மேடுமாக காட்சி கொடுத்த வண்ணம் இருக்கின்றன.

கடந்த பல வருடங்களாக இதே நிலையில்தான் இருக்கின்றது.

எனவே இப்பகுதி வாழ் மக்களின் போக்குவரத்து நலன் கருதி இவ்வீதியை திருத்தியமைக்க சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

மூர்த்தி, மட்டக்களப்பு.


## BRIGHT இன் 1995

### ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி

வெற்றிப்படிகளை எட்டிப்பிடிக்கும் BRIGHT மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குகிறது என்பது, மாணவர்கள் பெறும் சித்தியின் மூலம் (பரீட்சைப் பெறுபேறுகளினால்) நிரூபிக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியில் கலந்து கொண்ட300 மாணவர்களுள் 92 பேர் புலமைப் பரிசிலுக்கு தெரிவாகியுள்ளனர்.



எமது மாணவர்களுள் பதுளை தமிழ் மகளீர் வித்தியாலயத்தைச் சேர்ந்த *செல்வி. வித்யா கணேசன்* என்னும் மாணவி (BSE/188/94) மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று ஜப்பான் நாடு சென்று வரத் தெரிவாகியுள்ளார் என்பதை BRIGHTபெருமையுடன் அறியத் தருகின்றது. இவருக்கும் பரீட்சையில் சித்தியெய்திய ஏனையோருக்கும் BRIGHT வெகுமதியும் நற்சான்றிதழும் வழங்கி கௌரவித்துள்ளது. இத்தோடு இரு மாணவர்கள் றோயல் கல்லூரி அனுமதியும் பெற்றுள்ளனர்.

1995 புலமைப் பரிசில் முன்னோடிப் பயிற்சி, தபால் மூலம் நடைபெறுகின்றது.

**மிகச் சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்யவும், புலமைப் பரிசில் பெறவும் உகந்த வழி - BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியே.**

இதில் இணைய விரும்புவோர் பயிற்சிக்கட்டணம் 250/= ரூபா காசுக் கட்டளையை The Director-BTC எனும் பெயருக்கு Sea Srteet SPO இல் பெறக்கூடியதாக பெயர்,முகவரி கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி இணைந்து கொள்ளவும்.

இவற்றோடு BRIGHT இன் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| ★ பொது விவேகம் பாடநூல் | 75.00 | ★ பொது விவேகம் செயல் நூல் | 60.00 |
| ★ மாதிரி வினாவிடை ஆண்டு 5 | 100.00 | ★ மாதிரி வினாவிடை ஆண்டு 4 | 100.00 |

வெற்றிக்கனி


BRIGHT ன் கல்வி வெளியீடு

பிரதி மாதந்தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.

BRIGHT BOOK CENTRE (PVT) LTD
S-27, FIRST FLOOR, P. O. BOX 162,
COLOMBO CENTRAL SUPPER MARKET COMPLEX
COLOMBO-11 (T.P: 434770)



## விளம்பரப் பகுதி



### அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடனங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? • வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)**LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28


## எழுது வினைஞர் தேவை

தலைநகரில் பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு எழுது வினைஞர் தேவை. தகைமைகள்:

★ தமிழில் நல்லறிவும் பிறமொழியாற்றலும்,
★ தமிழ், ஆங்கிலம் தட்டச்சில் தேர்ச்சி,
★ கணக்கியல் தொடர்பான அறிவு.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா. தினமுரசு
வாரமலர்
த.பெ.எண்: 1772
கொழும்பு.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

17—07—1995

செல்வி றமீனா றவனேஸ்

சித்தன் கேணியைச் சேர்ந்த றவனேஸ் வதனி தம்பதிகளின் ஏக புத்திரி றமீனா தனது முதலாவது பிறந்த நாளை சுவிற்சர்லாந்தில் கொண்டாடுகிறார். சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன் அருளால் றமீனா சகல கலைகளையும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துபவர்கள் அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, சித்தப்பா, அம்மப்பா, அம்மம்மா, யோகுபாட்டா,தங்கா அன்ரி, கோபிகா அன்ரி, பாட்டி, பூட்டி, பிரான்ஸ் பாட்டிமார், மாமன்மார், மாலா அன்ரி, LONDON றஞ்சி, அன்ரிமார், கொக்குவில் கார்த்திகேசுபாட்டா, காந்தம் மாமா, சுந்தா மாமா, புளத்கோபிட்டிய சோமா அன்ரி, ஹட்டன் றஞ்சி அன்ரி ஆகியோர்.

தகவல்:-கந்தையா தருமலிங்கம்

## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# வடக்கில் முற்றுகை யுத்தம்

# கிழக்கில் கெரில்லாப் போர்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

முன்னேறித் தாக்கு அல்லது முற்றாக அழிக்கப்படுவாய்.

இது வடக்கே குறிப்பாக யாழ் குடாநாட்டில் முகாம்களில் இருக்கும் படைத்தரப்புக்கு ஏற்பட்ட நிர்ப்பந்தம்.

'போரில் வெற்றிகாண முடியாவிட்டால் தேசிய அரசாங்கம் அமைத்தால் என்ன?'

இது தென்னிலங்கையில் அரசு மீது பிரதான எதிர்க்கட்சிக்கு சார்பானவர்கள் மூலம் ஏற்பட்ட நெருக்கடி.

நிர்ப்பந்தமும், நெருக்கடியும் சேர்ந்து பாரிய ஒரு அதிரடித் தாக்குதலுக்கு அரசை உத்தரவிட வைத்துவிட்டது.

ஆனால், இத்தனை வேகமாக தாக்குதலை ஆரம்பிக்குமாறு அரசின் கழுத்தைப் பிடித்து தள்ளிவிட்டது புலிகள் நடத்திய மண்டைதீவுத் தாக்குதல்தான்.

மண்டைதீவு முகாம் பிரதான தளமாக இல்லாவிட்டாலும் பலியானவர்களின் எண்ணிக்கையும், பறிகொடுத்த ஆயுதங்களின் பட்டியலும் படைத்தரப்புக்கு பலத்த அவமானமாக அமைந்துவிட்டது.

மண்டைதீவு தாக்குதலையடுத்து தென்னிலங்கையில் சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் செய்த கண்டனங்கள் அரசுக்கும், படைத்தரப்புக்கும் ஒரு கௌரவப் பிரச்சனையாகிவிட்டன.

அது தவிர, இலங்கை அரசு தனது பிடியை வடக்கில் இழந்துவருகிறது. அதன் படைகள் தாக்குப்பிடிக்கும் வலிமையை தொலைத்துவிட்டன என்று வெளியுலகம் கருதுமானால் தாராளமான உதவிகள் கிடைப்பதும் குறையத் தொடங்கும்.

வெற்றிபெறும் குதிரைமீது பணம் கட்டத்தான் பலரும் முன்வருவார்கள் என்பது நாடுகளுக்கிடையிலான உறவுகளுக்கும் பொருந்தும்.

அது மட்டுமல்லாமல், மண்டைதீவுத் தாக்குதல் பலத்த இழப்பை கொடுத்திருந்தாலும் படைத்தரப்பு ஒரு விடயத்தை ஊகித்துக் கொண்டது.

புலிகளிடம் ஆட் பற்றாக்குறை இருக்கிறது. அப்படியில்லாவிட்டால் மண்டைதீவுக்குப் பதிலாக பாரிய இராணுவ தளம் ஒன்றை புலிகள் தாக்கியிருப்பார்கள்.

அதுதவிர, அவ்ரோ விமானங்கள் வீழ்த்தப்பட்ட பின்னரும் புலிகள் பிரதான முகாம்கள்மீது பாய்ச்சல் நடத்தாததும் படைகளுக்கு முதலில் ஆச்சரியம்.

பின்னர்தான் ஆட்பற்றாக்குறையும், புலிகளது அணிகள் கிழக்கு நோக்கி நகர்ந்திருப்பதும் புலிகளது பலவீனம் என்று படையின் உயர் மட்டம் உணர்ந்து கொண்டது.

மண்டைதீவு முகாம் தாக்கப்பட்டதை மட்டுமே பிரமிப்போடு நோக்கிய விமர்சகர்கள் பலர் அத்தாக்குதலின் மறுபக்கத்தை ஆராயத் தவறியிருந்தார்கள். (முரசு சுட்டிக்காட்டியிருந்தது.)

ஆனால், படைத்தரப்பின் உயர் மட்டம் அதனை ஆராய்ந்து புலிகளின் பலவீனத்தை கணிப்பிட்டு தாக்குதல் திட்டத்தை வகுத்திருக்கிறது.

வடக்கில் மழைக்காலத்திற்கு முன்பாக எப்படியாவது ஒரு தாக்குதலை நடத்தவே படைத்தரப்பு திட்டமிட்டிருந்தது.

அதனை இவ்வளவு விரைவாக மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமைக்கு மண்டைதீவுத் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட சூழ்நிலை நெருக்கடியே காரணம்.

மண்டைதீவு தாக்குதலை அடுத்து பாதுகாப்பு சபை கூட்டங்கள் நடந்தன.

பாதுகாப்பு சபைக்கூட்டத்தில் வடக்கே தாக்குதல் நடத்த ஜனாதிபதி பச்சைக் கொடி காட்டியதையடுத்து அமைச்சர் ரத்வத்தை வடக்கே சூறாவளி விசிட் அடித்தார்.

முகாம்களை பார்வையிடவும், படையினரை உற்சாகப்படுத்தவுமான வழக்கமான விஜயம் என்றே வெளியே கருதப்பட்டது.

புலிகளும் அவ்வாறுதான் கருதியிருந்தனர். 08.07.95 சனிக்கிழமை அன்று காலை புலிகளின் குரல் வானொலி பின்வருமாறு அறிவித்தது.

" அமைச்சர் ரத்வத்தை படையினருக்கு உற்சாகமூட்ட வடபகுதி முகாம்களுக்கு விஜயம்"

ஆனாலும் அரசாங்கத்தால் வடக்கில் படைகுவிக்கப்படுவது குறித்தும் புலிகள் அறிந்தே இருந்தனர்.

பலாலியிலுள்ள படைத்தளத்தில் கப்பல்கள் மூலம் படைகள் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி 08.07.95 அன்று புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

ஆனாலும், இத்தனை அவசரமாக படையினர் தாக்குதல் நடத்துவார்கள் என்று புலிகள் கூட எதிர்பார்க்கவில்லை.

மண்டைதீவுத் தாக்குதலையடுத்து மேலும் சில பலவீனமான முகாம்களை தாக்குதவற்கு புலிகள் திட்டமிட்டனர்.

குறைந்த இழப்புக்களோடு பெரிய வெற்றிகளைப் பெறும் தாக்குதல்களை முதலில் நடத்துவதே நல்லது, இராணுவ ரீதியில் இலாபகரமானது என்பது புலிகளின் திட்டம்.

இதனால், மண்டைதீவுத் தாக்குதலையடுத்து ஆனையிறவு, பூநகரி இராணுவத் தளங்களை அண்டியிருந்த புலிகளது காவலரண்களில் இருந்த உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் திரும்பப் பெறப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில தாக்குதலகளை மேற்கொள்ள புலிகளின் அணி ஒன்று நகர்த்தப்பட்டது.

இதன் மூலமும் யாழ் குடாநாட்டில் புலிகளது தாக்குதல் பிரிவின் உறுப்பினர்களது எண்ணிக்கை குறைந்தது.

பிரதான முகாம்களில் இருந்து முன்னேற முயலும் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்துவது. புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்று நினைத்து இராணுவத்தினர் முகாமுக்குள் சென்று விடுவார்கள்.

அத்தகைய தாக்குதல்களை நடத்தக்கூடிய எண்ணிக்கையில் மட்டுமே படை முகாம்களை அண்டிய புலிகளது காவலரண்களில் உறுப்பினர் தொகை இருந்தது.

இந்த நேரத்தில்தான் படைத்தரப்பு தனது காயை நகர்த்தியது.

புலிகளின் எதிர்ப்பைப் பொறுத்தே எந்தளவுக்கு முன்னேறுவது என்பதை தீர்மானிக்க வேண்டும் என்ற நிலையில்தான் படையினர் யுத்த முனையை திறந்தனர்.

படையினரின் எண்ணிக்கையும், உக்கிரமான பீரங்கித் தாக்குதல்களும், விமானத் தாக்குதலும் நேரடி மோதலை புலிகள் தவிர்த்துக் கொள்ள காரணமாயிற்று.

நேரடி மோதலை எதிர்கொள்வது என்றால் புலிகள் தமது தரப்பில் கணிசமான ஆட்பலத்தை பயன்படுத்த வேண்டியிருக்கும்.

தாக்குதலை முதலில் ஆரம்பித்தவர்கள் என்ற வகையில் படைத்தரப்பிடம் ஆரம்ப வேகமும், விழிப்பும், உக்கிரமும் இருக்கும்.

இவ்வாறான நிலையில் மோதலை உடனே ஆரம்பிப்பதோ, குறுக்கே நிற்பதோ தமது தரப்பில் இழப்புக்களை அதிகமாக்கும் என்று புலிகளுக்குத் தெரியும்.

பெரிய படையை சிறிய படை வெல்ல முடியும் என்பது யுத்த வரலாறு.

ஆனால், பெரிய படை பலத்தை திரட்டி முன்னேறும்போது பின்வாங்கிவிட்டு தாக்குதலுக்கு தயாராவதுதான் சிறிய படைகளது உத்திகளாக இருந்து வந்திருக்கிறது.

படைத்தரப்பு தனது பலத்தை திரட்டி பாரியளவில் முன்னேறிய ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் புலிகள் ஒரு குறிப்பிட்ட தூரம்வரை பின்வாங்கியே சென்றிருக்கிறார்கள்.

1987இல் வடமராட்சி தாக்குதலிலும் புலிகள் குறிப்பிட்ட தூரம்வரை பின்வாங்கிச் சென்றனர்.

1993இல் யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின்போதும் கிளாலிவரை படையினர் முன்னேறிச் சென்றனர். புலிகள் பின்வாங்கிச் சென்று பளைப் பகுதியில் பதுங்கி தாக்குதலுக்கு நிலை எடுத்தனர்.

சமீபத்தில் தொண்டமானாறு வரை படைகள் முன்னேறிச் சென்று முகாம் அமைத்தபோதும் புலிகள் பலத்த எதிர்ப்பை காட்டவில்லை.

அதன்பின்னர் பலாலி இராணுவம் அச்சுவேலிவரை நகர்ந்தபோதும் புலிகள் தரப்பிலிருந்து பெரிய எதிர்ப்பு எதுவும் கிடையாது.

இப்போது முன்னேறிப் பாயும் இராணுவ நடவடிக்கையின் ஆரம்பத்திலும் புலிகளிடமிருந்து சிறிதளவான எதிர்ப்பு மட்டுமே இருந்தது.

அதுவும் முதல் நாளன்று புலிகள் ஒரு அடையாள எதிர்ப்பை தெரிவிக்கும் வகையில் மட்டுமே போரிட்டார்கள்.

பெரியளவில் வந்தால் ஒரு குறிப்பிட்ட தூரம் வரை வர அனுமதிப்பது என்று புலிகள் முன்கூட்டியே தீர்மானித்துவிட்டதாகவே தோன்றுகிறது.

எதிரி அதிகளவில் தனது சக்திகள் அனைத்தையும் திரட்டிவரும் பகுதிகளில் இருந்து விலகிவிடு. எதிரி பலவீனமாக உள்ள பகுதிகளில் தாக்கு. எதிரி விழிப்பாயிருக்கும் போது தாக்காதே.

போன்றவை கெரில்லாப் போரின் அடிப்படை விதிகளாகும்.

இந்த விதிகள் பெரிய படை ஒன்றின் உக்கிரமான படையெடுப்பை எதிர்கொள்ளும் சிறிய படைக்கும் பொருந்தும்.

புலிகளது பலம்-பலவீனம் பற்றி மதிப்பிடாது ஒரேயடியாகப் புகழ்பவர்களுக்கு புலிகளது பின்வாங்குதல் ஏமாற்றம் தரும்.

புலிகளை ஒரேயடியில் எதிர்த்துப் பேசுபவர்களுக்கு புலிகளது பின்வாங்குதல் புலிகளின் கதை முடிந்ததோ என்று சந்தோசம் தரும்.

இவற்றுக்கு அப்பால் இராணுவ யுத்த தந்திர, நடைமுறைத் தந்திர விதிகளின்படி நோக்கினால் போரில் பின்வாங்குதல் என்பது தோல்வியைக் குறிக்காது.

ஆனால், வடபுலப் போர் முனையில் முற்றுகை நிலை புலிகளிடமிருந்து படைத்தரப்பின் கைகளுக்கு மாறியிருக்கிறது.

தற்காப்பு யுத்தக் கட்டத்திலிருந்து படைத்தரப்பு தாக்குதல் யுத்தத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

இப்போது வடபுலப் போரில் புலிகள் தற்காப்பு யுத்தக் கட்டத்தில் இருக்கிறார்கள்.

வடக்கில் குறிப்பாக யாழ் குடாநாட்டில் உள்ள பிரதான முகாம்கள் புலிகளால் தாக்கப்படலாம் என்ற அச்சுறுத்தலிலிருந்து படையினர் மீண்டுள்ளனர்.

உதாரணமாக, தற்போது பலாலி இராணுவத்தளத்தை புலிகள் தாக்க வேண்டுமானால் பல முன்னரங்க முகாம்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டியிருக்கும்.

ஆக, தாக்குதல் யுத்தக் கட்டத்திற்கு படைத்தரப்பு வந்து விட்டது. இனி படைத்தரப்பின் பக்கம் யோகம்தானா?

'ஆம்' என்று பதில் சொல்ல முடியாது. ஏனெனில், தாக்குதல் யுத்தம் என்பது அழித்தொழிப்பு யுத்தம் இல்லாமல் பூர்த்தியாக முடியாது.

படைகள்-புலிகள் என்னும் இரு தரப்புக்குமே அந்த விதி பொருந்தும்.

படைத்தரப்பினர் தாக்குதல் யுத்தம் மூலம் குறிப்பிட்ட பகுதிகளை பிடித்திருக்கிறார்கள்.

புலிகளது நிலைகளை-அதாவது காவலரண்கள், முகாம்கள் என்பவற்றை அழித்திருக்கிறார்கள். ஆனால் புலிகளை அழிக்கவில்லை.

புலிகள் உள்ளவரை தாக்குதல் யுத்தம் வெற்றி என்று படைத்தரப்பு முற்றுப் புள்ளியிட்டுக் கூற முடியாது.

ஏனென்றால், தற்போது படைத்தரப்பு கைப்பற்றியுள்ள பகுதிகள் புலிகளது கைகளுக்கு மாறும் சாத்தியம் இல்லை என்று சொல்ல முடியாது.

தற்போது பலாலி பிரதான தளத்திலிருந்து முன்னேறி கைப்பற்றிய பகுதிகளில் முகாம்களை அமைத்துள்ளது மூலம் பிரதான படைத்தளத்தின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தலாம்.

ஆனால், தற்போது அமைக்கப்பட்டுள்ள புதிய முகாம்களின் பாதுகாப்பை அந்தளவுக்கு உறுதிப்படுத்த இயலாது.

புலிகளது கெரில்லாத் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம். ஒரு வேளை நிலைமையைப் பார்த்து படைத்தரப்பு தாம்கைப்பற்றிய பகுதிகளில் இருந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை பின்நோக்கிச் சென்று இறுக்கமான ஒரு சில முகாம்களை மட்டும் புதிதாக வைத்திருக்கக்கூடும்.



எப்படியிருப்பினும் பாரிய பதிலடி நடவடிக்கையில் புலிகள் ஈடுபடவே செய்வர். இப்போது கௌரவப் பிரச்சனை புலிகளுக்கு.

புலிகளைப் பொறுத்தவரை பிரதேசங்களை இழந்திருக்கிறார்களே தவிர, தமது அணிகளையோ, ஆயுத தளபாடங்களையோ இழக்கவில்லை. ஆகவே, போர் தொடரும். போரின் குணாம்சங்கள் மட்டும் மாறுபடும். அதாவது கெரில்லாப் போர், தற்காப்பு யுத்தம், தாக்குதல் யுத்தம் என்று இருதரப்பின் பலம் பலவீனத்துக்கு ஏற்ப போரின் குணாம்சங்கள், கட்டங்கள் வேறுபடும்.

ஆனால், ஒரு விடயம் மிகத் தெளிவாகியுள்ளது. இரு தரப்புக்குமே இறுதி வெற்றியின்றி யுத்தம் மேலும் நீண்டகாலம் வாழப் போகிறது.

இதேவேளை கிழக்கில் புலிகளின் கெரில்லாப் போர் குறிப்பிட்டுச் சொல்லும் படியான வெற்றிகளை அறுவடை செய்திருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசம் முழுவதும் கெரில்லாக்களின் நடமாட்டத்துக்குரிய பகுதியாக மாறியிருக்கிறது.

வாகரையிலிருந்த படை முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டு விட்டன.

திருமலை கடற்பரப்பில் வைத்து கடற்படையின் ரோந்துப்படகொன்றையும் கடற்புலிகள் தாக்கியுள்ளார்கள். 07.07.95 அன்று இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச் செய்திகளை வடக்கில் புலிகள் தமது பிரசார சாதனங்கள் மூலம் வெளியிட்டுக் கொண்டிருந்தபோதுதான் வடக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதி படையின் கரங்களில் வீழ்ந்தது.

தரையிலும், கடலிலும் கிழக்கில் தமது பலத்தை விரிவுபடுத்தவும், வடக்கு-கிழக்கு தொடர்புக்கு கடல் பாதையை சுத்தமாக்கி வைத்திருக்கவுமே புலிகள் திட்டமிட்டு செயற்படுகின்றனர். இதுதான் கிழக்குப் போர் முனையில் புலிகளது தற்போதய நடைமுறைத் தந்திரமாக இருக்கிறது.

வடக்கில் தமது தலைமைப்பீடம் முற்றுகை நிலைக்கு உட்பட்டுள்ள நிலையில், அந்த முற்றுகையை உடைக்கும் பொறுப்பு வடக்குக்கு வெளியே உள்ள புலிகளது அணிகளின் கையிலும் இருக்கிறது.

கிழக்கில் படைத்தரப்புக்கு பாரிய இழப்பைக் கொடுப்பதன் மூலம் அங்கு படைகளது எண்ணிக்கையை அதிகரிக்கும் தேவை ஏற்படும். அதற்கு வடக்கிலிருந்தும் படைகளில் ஒரு பகுதியை அனுப்ப வேண்டி ஏற்படலாம்.

வடக்குக்கு வெளியே படைத்தரப்பின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலும், தலைநகரிலும் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த முனையலாம்.

சமீபத்தில் வெடித்த குண்டுகள் பொதுமக்களது உயிர் சேதங்களை தவிர்க்கும் முறையில்தான் வெடிக்க வைக்கப்பட்டன.

வெளியுலக கண்டனங்கள் அதிகமாகி விடக் கூடாதே என்னும் புலிகளது எண்ணமும் பொதுமக்களின் இழப்புக்களை தவிர்க்கும் வகையிலான குண்டு வெடிப்புக்களுக்கு காரணம் எனலாம்.

தமது தலைமைப்பீடம் நெருக்கடியில் மாட்டிக்கொண்டால் தலைநகரில் இருக்கும் புலிகள் உணர்ச்சிவசப்படக்கூடும்.

கொழும்பில் அங்குலத்துக்கு அங்குலம் பாதுகாப்பு படையினரும், பொலிஸாரும் நிறுத்தப்பட்டும் கூட முன் கூட்டியே அறிவித்துவிட்டு பரவலான குண்டு வெடிப்புக்களை (எல்லாளன்படை) புலிகள் நடத்தியிருக்கிறார்கள்.

சிறிய குண்டு வெடிப்பு என்று படைத்தரப்பு சொல்வது விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற கதைதான். சிறிதாக வெடித்தற்கு காரணம் படைத்தரப்பின் பாதுகாப்பு உஷார் அல்ல. கொழும்பில் குண்டை கொண்டுபோய் வைக்க முடிந்தது என்பது பாதுகாப்பு ஏற்பாடுகளில் உள்ள ஓட்டைகளையே குறிக்கிறது.

வைக்கப்பட்ட குண்டு சிறிதா பெரிதா என்பது புலிகளது நோக்கத்தை பொறுத்ததே தவிர, பாதுகாப்பு துறையின் திறமையைச் சார்ந்தது அல்ல. எனவே தலைநகருக்கு குண்டு வெடிப்பு அச்சுறுத்தல் இருந்து கொண்டேயிருக்கிறது.

ஆக, மொத்தத்தில் இனி வரும் காலம் இனிதாக இருக்கப்போவதில்லையோ என்று பயமாக இருக்கிறது எனக்கும் உங்களுக்கும்.

## அதிரடி அய்யாத்துரை



தாமரையின் பெயரில் நல்ல முயற்சிகள் செய்தா வரவேற்கத்தான் வேணும். சமாதானத்துக்கான முயற்சிக்கு தாமரையை சின்னமாக தெரிவு செய்த கலை நயமான புத்திசாலித்தனத்தை பாராட்டவும் வேணும். ஆனால் ஒரே ஒரு விசயம் உறுத்தலாய் இருக்கு. தாமரை மலருவது குளத்திலைதானே.அந்தக் குளத்திலை பிணங்கள் மிதக்காமலும் பார்த்துக் கொள்ள வேணுமல்லோ. தாமரை இயக்கம் அதிலும் கவனம் செலுத்த வேணும்.

வெளிநாட்டிலிருந்து வாற பயணிகளையும் பொதிகளையும் விமான நிலையத்திலை சோதனையிடுவது வழக்கம்தான். இப்ப தலைநகர ரயில் நிலையத்திலையும் விமான நிலையத்திலை நடக்கிற மாதிரியே சோதனை நடக்குது. குறிப்பாக கிழக்கிலிருந்தும், வவுனியாவிலை இருந்தும் வாற பயணிகள் எண்டால் விசேஷ கவனிப்பு. அதுக்காக வடக்கு -கிழக்கும் வேறு நாடோ எண்டு கேட்கப்படாது. எல்லாம் ஒரு பாதுகாப்புத்தான்.

பச்சை கட்சியில் முக்கியமான முனசிங்கரே சபையில் இனவாத வாடையோடு பேசியிருக்கிறார். ஜனநாயகக் கட்சி பிரதிநிதி ஒருவர் அதுக்கு பதிலடி கொடுத்துப் பேசினவராம். பச்சைக் கட்சியில் சிலரும் அவரை பாராட்டினவையாம். இனவாதத்தை சீராட்டி பட்ட அனுபவம் தெரிஞ்சவை விஷயத்தை விளங்கிக் கொள்ளுவினம்.

தெரிஞ்சும் தெரியாத மாதிரி தேவை கருதி நடிக்கிறவையை என்ன செய்யுறது? ஒண்டு மட்டும் தெரியுது யானைக் கட்சியில் பாகனுக்கு அடங்காத ஆட்களும் இருக்கினம். முனசிங்கர் பாகனுக்கு அடுத்த இடத்தைப் பிடிக்க ஒற்றைக் காலில் நிற்கிறாராம். அதுதானாம் ஒரு கையிலை இனவாதம்.

சகலகலா வல்லவ பதவியைக் கொண்டு வந்த கட்சி அதைக் கொண்டு போ இனி வேண்டாம் எண்டு சொல்லுது. முடிவு கட்ட சபதம் செய்தவையோ மெல்லப் பார்க்கலாம் அவசரமில்லை எண்டு சொல்லுகினம். அதிகாரமுள்ளவரை நேரடியாக வெகுஜன சபைக்கு வரவைக்கத்தான் சகலகலா பதவி ஒழிப்புக்கு பச்சைக் கட்சி பச்சைக் கொடி காட்ட துடியாய் துடிக்குதாம். அரசியல் வாதிகளின் விமர்சனங்கள் எல்லாம் 'நீ செய்தால் பிழை நான் செய்தால் சரி' எண்டுதான் போய்க்கொண்டிருக்கு. இந்த இடத்திலை நீங்கள் விரும்பினால் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக் கொள்ளுங்கோ.

கூட்டான கட்சி ரெண்டு எழுத்தார் காதிலை பூச்சுத்தப்பாக்குது. அது நடவாது எண்டு சொன்னனான் அல்லோ. யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தாரின் பிரமுகர் பால புத்திரர் கூட்டான கட்சி பற்றி விலாவாரியாக விளக்கியிருக்கிறாராம். பொதுக் கூட்டம் ஒண்டிலைதான் சனத்துக்கு விளக்கம் கொடுக்கப்பட்டதாம். அண்ணாச்சிமாரை நம்பி சூடுகண்ட தம்பிமாரல்லோ.


தீவுப்பகுதி தாக்குதலில் மாட்டின ஆயுதங்களில் ஒண்டு புத்தம் புதுசாம். "பெட்டி உடைக்காமல் வைச்சிருந்தவை நாங்கள் எடுத்துப் போட்டம். தட்டிவிட்டா நீண்ட தூரம் கிழிச்சுக் கொண்டு போகும்" எண்டு ரெண்டு எழுத்தார் சொல்லியிருக்கினமாம். அப்பிடி என்ன ஆயுதமோ அது? ஒண்டில் எடுத்தவை சொல்ல வேணும். அல்லது கொடுத்தவை சொல்ல வேணும். இல்லாட்டி சனத்துக்கெல்லோ சஸ்பென்ஸ்சிலை தலை வெடிக்கப்போகுது.அது சரி, அதையெல்லாம் பொறுத்த நேரத்திலை பயன்படுத்தேல்லையோ?

கிழக்கின் முன்னாள் தமிழ் வெகுஜன பிரதிநிதி தேனகக் கடலில் குளிப்பதில் பொழுதைக் கழிக்கிறாராம். அவரது உறுப்பினர்கள் பச்சை உடையினரோடு வேட்டைக்கு செல்கிறார்களாம். கருணையோடு நடந்தால் சரிதான்.

ஆறே ஆறு வரிகளில் காதலின் மலை உறுதியை நெஞ்சில் ஆணியடித்துமாட்டிவிடுவது போல சொல்ல முடியுமா. பதில் சொல்ல முன் கவிதையை படியுங்கோ.

"இறந்த பிறகும்
என் கண்கள்
திறந்தே இருந்தன.
எல்லாம் பழக்கம்தான்
இப்போதும் உனக்காக
க்காத்திருக்கிறேன்!"

முடியும் என்கிறீர்களா? அப்படியானால் நான் உங்கள் கட்சி. கவிதை தந்தது அனுாப்.



# ராஜீவுக்கு பிரபா எழுதிய கடிதம்



35

அரசியல் தொடர்



அற்புதன் எழுதுவது

## பரமதேவா

மட்டக்களப்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு விரைந்து கொண்டிருந்த புலிகள் அணிக்கு தலைமை தாங்கியவர் இரா.பரமதேவா.

கிழக்கு மாகாணத்திலிருந்து ஆயுதப் போருக்கு அணிதிரண்ட இளைஞர்களில் முதலிடம் வகிப்பவர்களில் முக்கியமான இடம் பரமதேவாவுக்கு உண்டு.

பரமதேவா பற்றி சுருக்கமாக சில விபரங்களை சொல்லிவிட்டு தாக்குதலுக்கு செல்லலாம்.

1975- அக் கால கட்டத்தில் இலங்கையின் சுதந்திர தினம் என்றாலும் சரி, குடியரசு தினம் என்றாலும் சரி தமிழர் விடுதலைக் கூட்டணி தீ உமிழும் வார்த்தைகளோடு போராட்டங்களை அறிவிக்கும்.

1975 மே மாதம் 22 ம் திகதி இலங்கையின் குடியரசு தினத்தை முன்னிட்டு வழக்கமான அஹிம்சை வழி எதிர்ப்பைத் தெரிவித்தது கூட்டணி.

பாடசாலை பகிஷ்கரிப்பும் அதில் ஒரு அங்கம். அப்போது பரமதேவாவும் மாணவன். பகிஷ்கரிப்பு போராட்டத்தின் முன் வரிசையில் நின்ற பரமதேவாவை பாடசாலையில் இருந்து வெளியேற்றி விட்டார்கள்.

கல்விக் கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டவன், கருவி ஏந்திப் போராடும் களத்துக்கு ஆயத்தம் செய்யத் தொடங்கினான்.

1977ம் ஆண்டு மட்டுநகரில் நடைபெற்ற ஒரு குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பரமதேவாவை தேடியது பொலிஸ்.

அத்தோடு வீட்டிலிருந்தும் அவன் வெளியேறினான்.தலைமறைவு வாழ்க்கை.

'நாகபடை' என்று ஒரு அமைப்பை உருவாக்கினான். கிழக்கு மாகாண இளைஞர்கள் பலரை திரட்டிச் சேர்த்தான்.

இயக்கத் தேவைகளுக்கு நிதி தேவை. 1978 இல் செங்கலடி மக்கள் வங்கிப் பணத்தை 'நாகபடை' பறித்தெடுத்தது.

துரத்திவந்த பொலிசார் 'நாகபடை'யினரை சுற்றிவளைத்துக் கொண்டனர். பொலிஸ் அதிகாரி ஒருவரும் பரமதேவாவும் வீதியில் கட்டிப் புரண்டு மோதினார்கள்.

பரமதேவாவின் கையின் மேற்பாகத்தில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. பொலிசார் பரமதேவாவைக் கைது செய்தனர்.

வழக்கு விசாரணை நடந்தது. 1981 இல் பரமதேவாவுக்கு எட்டுவருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டதது.

## நீண்டகால சிறை

1978 முதல் 1983 வரை பரமதேவாவுக்கு சிறைவாழ்க்கை. தமிழ் போராளிகளில் நீண்டகாலம் சிறையில் இருந்தவன் பரமதேவா என்றுதான் நினைக்கிறேன்.

1983 ஜுலையில் வெலிக்கடை சிறைப் படுகொலையின் பின்னர் 'மகர' சிறையில்



பரமதேவா

இருந்த பரமதேவாவும் மட்டக்களப்பு சிறைக்கு மாற்றப்பட்டான்.

1983 செப்டம்பர் 28ம் திகதி முதலாவது மட்டக்களப்பு சிறையுடைப்பின் போது தப்பிவந்த பரமதேவா புலிகள் அமைப்போடு இணைந்து கொண்டான்.

1984 ஆகஸ்ட் 5ம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒட்டிச்சுட்டான் பொலிஸ் நிலையம் புலிகளால் தாக்கப்பட்டது பற்றி முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

அத்தாக்குதலில் பிரதான பங்கு வகித்தான் பரமதேவா. அந்த நேரத்தில் தான் கிழக்கிலும் ஒரு பொலிஸ் நிலையத்தை தாக்க வேண்டும் என்ற சிந்தனை பரமதேவாவுக்கு ஏற்பட்டது.

1984 செப்டம்பர் 10ம் திகதி கொக்கிளாயில் இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதலிலும் பரமதேவா பங்குகொண்டிருந்தான்.

அத்தாக்குதல் முடிந்ததும் மட்டக்களப்புக்கு சென்று, களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு பரமதேவா ஆயத்தம் செய்தான்.

## தயார் நிலையில் பொலிசார்

இனி-களுவாஞ்சிக்குடித் தாக்குதலுக்கு செல்லலாம்.

தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் நிலையம் முன்பாக வேனை நிறுத்திவிட்டு குதிப்பதற்கு இடையில்,

முன்கூட்டியே தகவலறிந்து தயாராக இருந்த பொலிசாரின் இயந்திரத் துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின.

புலிகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர். மோதல் மூண்டு விட்டது.

முன்னரே பாதுகாப்பான இடங்களில் பொலிசார் தற்காப்பு நிலை எடுத்துக் கொண்டதால் புலிகளைவிட பொலிசாருக்குத்தான் நிலமை சாதகமாக இருந்தது.

ஒரு குண்டு பரமதேவாவின் மார்பில் பாய்ந்தது. அப்படியே சரிந்தான் பரமதேவா.

ரவி என்று அழைக்கப்படும் இன்னொரு புலி உறுப்பினரும் வீழ்த்தப்பட்டார்.

பொலிசாரின் கை மேலோங்கியதை உணர்ந்து கொண்ட புலிகள் தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பிவிட்டார்கள்.

இது கிழக்கில் புலிகளுக்கு ஏற்பட்ட முதலாவது பெரிய தோல்வி.

பரமதேவாவின் மரணம் புலிகளுக்கு பேரிழப்பு!

பரமதேவாவின் சகோதரர் இரா-வாசுதேவா. புளொட் அமைப்பில் அரசியல் துறை செயலாளராக இருந்த வாசுதேவா புலிகளால் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அன்னையின் மரணம்

1984 அக்டோபர் 31.

புதுடில்லி- இந்தியாவின் தலைநகரம்- இனிதாய் மலர்ந்த காலைப் பொழுது ஒரு கொடிய சம்பவத்தால் சோகமானது.

வேட்டுச் சத்தங்கள்-அந்தோ! பாரத நாட்டின் தவப்புதல்வியை அவரது பாதுகாவலர்களில் ஒருவரே சுட்டுக் கொலை செய்து விட்டார்.

இந்தியாவே ஸ்தம்பித்தது. அகில உலகமும் அதிர்ந்து போனது.

இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் விழிகளில் கண்ணீர் அருவி.

செய்தியறிந்த மறு நிமிடமே கறுப்பு வெள்ளைக் கொடிகள் வடக்கு-கிழக்கிலும் மலையகத்திலும் துக்கம் அறிவித்துக் கொண்டிருந்தன.

இந்தியா என்றால் இந்திரா என்று சொல்லப்படுமளவுக்கு சாதனைகள் படைத்த பெண் பிரமதர்.

1983 ஜுலையில் கலவரத்தீயில் தமிழர்கள் எரிந்து கொண்டிருந்தபோது இந்திராவின் கண்டனம் தமிழ் மக்கள் இதயங்களை வருடிக் கொடுத்ததை எப்படி மறக்கலாம்?.

மரணம் அவரை அணைத்த செய்தி கேட்ட போது தமது குடும்பத்தில் ஒருவரை இழந்து போனதாகவே இலங்கைத் தமிழ் மக்கள் சோகம் சுமந்தனர்.

அன்னை இந்திரா கொல்லப்பட்ட போது ஈழப் போராளி அமைப்புக்களின் முக்கிய தலைவர்கள் தமிழ் நாட்டில் தான் தங்கியிருந்தனர்.

கொலைக்கு கண்டனம் தெரிவித்து போராளி அமைப்புக்களின் தலைவர்கள் உடனே அறிக்கைகளை வெளியிட்டிருந்தனர்.

அன்னை இந்திரா மறைவையடுத்து அவரது மூத்த மகன் ராஜீவ் காந்தி பிரதமராக்கப்பட்டார்.

அன்னையின் மைந்தனும் அவரைப் போலவே எங்கள் பிரச்சனையில் அனுதாபம் உள்ளவராக இருப்பாரா? இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் கேள்வி அதுதான்.

## பிரபாவின் கடிதம்.

ஈழப்போராளி அமைப்புக்களின் தலைவர்கள் புதிய பிரதமர் ராஜீவ் காந்திக்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பிவைத்தனர்.

அந்த வாழ்த்துச் செய்திகளில் ஒன்று பிரபாகரனிடம் இருந்தும் சென்றது.

இந்திராவைக் கொன்றவர்களை கொடியவர்கள் என்று கூறியிருந்த பிரபாகரனின் கடிதத்தின் இறுதியில் பின்வரும் வாசகங்களும் இருந்தன.

**"எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திரா காந்தி வாழ்ந்து போராடி இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்துச் செல்வீர்கள் என்றே நாம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம். நீங்கள் வெற்றிபெற எமது வாழ்த்துக்கள்."**

## இந்திராவின் மறைவுக்கு புலிகளின் அஞ்சலி

மாண்புமிகு
ராஜீவ் காந்தி அவர்களுக்கு,
இல: 1, சப்தர்ஜங் ரோடு,
புதுடில்லி.

அன்புடையீர்,

அன்னை இந்திரா காந்தி கொடிய கொலைஞர்களால் அகால மரணமடைந்த செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரமும் பேரதிர்ச்சியுமுற்றோம். மனித சமூகத்திற்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகமான இக்கொலைபாதகச் செயலை நாம் வன்மையாகக் கண்டனம் செய்கிறோம்.

ஒடுக்கப்பட்ட மனுக்குலத்தின் ஒளி விளக்காகவும், பாரத தேசத்தின் உன்னத ஆத்மாவாகவும் திகழ்ந்த ஒரு ஒப்பற்ற பெரும் தலைவரை நாம் இழந்து நிற்கிறோம். தங்கள் குடும்பமும் இந்திய மக்களும் உலகமும் இந்த ஈடுசெய்யமுடியாத பேரிழப்பால் அடைந்திருக்கும் ஆழ்ந்த துயரத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்.

திருமதி இந்திரா காந்தி உலக சமாதானத்திற்காகவும் மனித சுதந்திரத்திற்காகவும் அயராது போராடிய வீராங்கனையாவார். ஒடுக்கப்பட்ட ஏழை மக்களின் ஏகோபித்த குரலாகத் திகழ்ந்தார். தீர்க்கதரிசனத்தோடும் பூரண அர்ப்பணிப்போடும் பாரத தேசத்தை சோசலிஸப் பாதையில் நிர்மாணம் செய்ய அயராதுழைத்தார். நவபாரதத்தின சிற்பியாகத் திகழ்ந்தார். இந்திய துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியத்தையும் அதன் பேராதிக்க சதிவலைப் பின்னலையும் அவர் முழுமூச்சாக எதிர்த்து வந்தார். தேசங்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலகமெங்கும் நடைபெற்ற தேசிய விடுதலைப் போராட்டங்களை அவர் முன்நின்று ஆதரித்து வந்தார்.

அநாதரவான நிலையில் துயருறும் தமிழீழ மக்களின் பால் அன்னை இந்திரா காந்தி எப்போதுமே அனுதாபமும் அக்கறையும் காட்டிவந்திருக்கிறார். ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து வருவதனை அவர் எப்போதுமே கண்டித்தார். தமிழ் மக்களின் மீதான இனப் படுகொலையை நிறுத்தியாக வேண்டும் என்று அரசியல் ராஜதந்திர வழிகளில் அவர் ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்தித்தார். இந்தியாவின் நல்லெண்ண அனுசரணையின் கீழ் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு தனிப்பட்ட முறையில் பெரும் அக்கறை செலுத்தினர். தமிழ் மக்களின் பெருங்காவலராகத் திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே அழிந்து போயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீகவலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்.

தமிழ் மக்கள் இந்திராவை என்றும் அன்புடனும், நன்றியுடனும் பெருமதிப்புடனும் நினைவுகூர்வார்கள். தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் தலைமைப்பொறுப்பை ஏற்றுள்ள நீங்கள், எந்த உன்னத இலட்சியங்களுக்காக அன்னை இந்திரா காந்தி வாழ்ந்து, போராடி இறந்தாரோ அந்த இலட்சியங்களை முன்னெடுத்து செல்வீர்கள் என்றே நாம் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

நீங்கள் வெற்றிபெற எமது நல்வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
வே. பிரபாகரன்
தலைவர், மத்திய குழு,
இராணுவத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

ராஜீவுக்கு பிரபா எழுதிய கடிதம்

இந்திரா காந்தி பற்றி பிரபா கூறியதில் மிக முக்கியமான கருத்து இது;

**"தமிழ் மக்களின் பெரும் காவலராக திகழ்ந்த அன்னை இந்திராவின் தனிப்பட்ட அக்கறை மட்டும் இல்லாது போயிருந்தால் எமது தேசமே இல்லாது அழிந்துபோயிருக்கும். தமிழ் விடுதலை இயக்கத்தின் ஆத்மீக வலிமையின் கோபுரமாக அவர் திகழ்ந்தார்."**

என்று கூறியிருந்தார் பிரபாகரன்.

## மதகுருமார் முயற்சி

மதகுருமார் தூதுக்குழுக்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாக தற்போதும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

1984 அக்டோபர் மாதத்தில்தான் மதகுருமார் குழுவொன்று முதன் முதலாக போராளி அமைப்புக்களை சந்திக்கப் போவதாக அறிவித்தது.

அறிவித்தது மட்டுமல்ல போராளி அமைப்பின் தலைவர்களைச் சந்திப்பதற்காக தமிழ் நாட்டிற்கும் சென்றது.

ஆனால், எந்தவொரு போராளி அமைப்பும் மதகுருமார்கள் தூதுக்குழுவை சந்திக்க முன்வரவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்தனா ஏதோவொரு தந்திரத்தோடு பௌத்த மதகுருமார்களை அனுப்பிவைக்கிறார் என்றே இயக்கங்கள் நினைத்தன.

ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கள் இணைந்து ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தன. "மதத்தலைவர்கள் தூதுக் குழுவொடு பேச்சு நடத்த மாட்டோம். இவர்கள் வந்து பேச்சு நடத்துவதால் அரசியல் தீர்வும் ஏற்படப்போவதில்லை." என்று மூன்று அமைப்புக்களும் தெரிவித்திருந்தன.

## ராகுலதேரோவின் அழைப்பு

இதேவேளை பௌத்த மதத் தலைவர்களில் ஒருவரான ராகுலதேரோவால் தமிழ் போராளிகளுக்கு ஒரு அழைப்பு விடுக்கப்பட்டது.

"போராளிகள் சமாதானப் பேச்சுக்கு வரவேண்டும், ஆனால் வன் செயல்களை நிறுத்திவிட்டு!"

என்பதுதான் ராகுலதேரோவின் அழைப்பு.

அழைப்பு விடுத்த ராகுலதேரோ குறித்து முன்னரே போராளிகள் நன்கு அறிவார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இனவாதத்துக்கு பெயர் போன அமைச்சராக இருந்தவர் சிறில் மத்தியு.

'ஹெளத ஹொட்டியா?' (யார் இந்த புலிகள்) என்ற நூலை எழுதிய தோடு 'சிங்கப்படை' என்ற அமைப்பை உருவாக் கியவர் சிறில் மத்தியு.

சிறில் மத்தியுவின் வலதுகரமாக இருந்தவர்தான் ராகுலதேரோ.

ராகுலதேரோவின் அழைப்பை அடுத்து புலிகள் ஒரு அறிக்கை வெளியிட்டார்கள்.

ராகுல தேரோவின் அழைப்புக்குப் பதிலாக அது அமைந்தது. அதிலிருந்த பிரதான வாசகங்கள் இவைதான்;

"தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு நீங்கள் ஒரு அழைப்பு விடுத்திருக்கிறீர்கள்.

சிறீலங்கா அரசின் பிரதிநிதியாக எம்மை சமாதானப் பேச்சுக்கு அழைத்திருக்கிறீர்கள்.

இந்த அழைப்பின் ஒரு முன் நிபந்தனையாக வன்முறைச் செயல்களை நிறுத்தி, சட்டமீறல்களை நிறுத்தி சமரசம் பேசுவோம் வாருங்கள் என்று கேட்டிருக்கிறீர்கள். உங்களது இந்த அழைப்பு வேடிக்கையாக இருக்கிறது.

நாம் வன்முறையாளர்கள் அல்லர். அராஜகவாதிகளும் அல்லர். நாம் அடிமைகளாக வாழ விரும்பவில்லை. நாம் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ விரும்புகிறோம். எம்மீது திணிக்கப்பட்டிருக்கும் ஆயுத பலாத்கார அடக்குமுறையிலிருந்து எம்மை விடுவித்துக் கொள்ளவே நாம் ஆயுதம் தரித்திருக்கிறோம்.

பௌத்த தர்மத்திற்கே அவமானச் சின்னமாக விளங்கும் ஒரு அதர்ம அரசின் பிரதிநிதியாக நீங்கள் எம்மோடு சமரசம் பேச விரும்புகிறீர்கள்.

பௌத்தத்தின் சார்பில், தர்மத்தின் சார்பில் சமாதானத்தை நீங்கள் விரும்புவதாயின் வன்முறைவாதிகளான உங்கள் ஆட்சியாளருடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள்.

அதர்மமான அடக்குமுறை நீங்கி எமது மக்கள் சுதந்திரமான வாழ்வைத் தழுவிக் கொள்ளும்வரை நாம் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லை.

அடிமைத்தளைகள் அகன்ற சுதந்திரமான, சமாதானமான, நிம்மதியான வாழ்வை இலட்சியமாகக் கொண்டே நாம் ஆயுதப் போரை வரித்துக் கொண்டோம்.

நாம் சமாதானத்தையே விரும்புகிறோம். சமாதானத்தை உங்களிடம் இரந்து கேட்டு ஏமாந்து போவதைவிட போராடிப் பெறுவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம்."

என்பதுதான் புலிகள் ராகுலதேரோவுக்கு கொடுத்த பதில்.

## குடியேற்றம் மீது தாக்குதல்

இதற்கிடையே புலிகள் நடத்திய ஒரு தாக்குதல் பெரும் சர்ச்சைகளையும், விமர்சனங்களையும் கிளப்பியிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய்-நாயாறு பகுதியில் அரசாங்கத்தால் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப் பட்டிருந்தன.

மீனவக் குடும்பங்களே அவ்வாறு குடியேற்றப்பட்டிருந்தனர். குடியிருப்புக்கள் மீது புலிகள் திடீர் தாக்குதல் நடத்தினார்கள்.

குடியேறியிருந்த குடும்பங்களில் 54 பேர்வரை புலிகளின் தாக்குதலால் பலியானார்கள்.

இத்தாக்குதல் மாத்தையாவின் (அப்போது புலிகளின் பிரதித் தலைவர்) தலைமையில்தான் நடத்தப்பட்டது.

சிங்களக் குடியேற்றம் மீது வேறு தமிழ் இயக்கம் எதுவும் அதற்கு முன்னர் இவ்வாறான பாரிய தாக்குதல் எதனையும் நடத்தியிருக்கவில்லை.

சாதாரண மக்கள் மீது தாக்குதல் நடத்துவது முறையல்ல என்று பலத்த கண்டனங்கள் எழுந்தன.

இவ்வாறு கண்டனங்கள் எழும் என்று முன்கூட்டியே உணர்ந்திருந்த புலிகள் அத்தாக்குதலுக்கு உரிமை கோராது இருந்து விட்டார்கள்.

இத்தாக்குதலையடுத்து அரசு வட பகுதிக் கடலில் கண்காணிப்பு வலயம் ஏற்படுத்தியது.



வடகடலில் கண்காணிப்பு வலயம்; மீறினால் சூடு

மன்னார் முதல் முல்லைத்தீவு வரையுள்ள கரையோரப் பகுதிகளை மனித நடமாட்டம் இல்லாத சூனியப் பிரதேசமாக மாற்றியது.

இதனால் அப்பகுதிகளில் இருந்த பல ஆயிரக்கணக்கான தமிழ் மீனவக் குடும்பங்கள் அகதிகளாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

1984 இல் யாழ்ப்பாணத்தில் நடந்த மற்றொரு தாக்குதல் அரசுக்கு பலத்த அதிர்ச்சியைக் கொடுத்தது. அது அடுத்த வாரம்.

(தொடர்ந்து வரும்...)

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை



அன்னை இந்திரா

# உரிமை கோராமல் புலிகள் நடத்திய தாக்குதல்

இனப்பிரச்னையின் தாக்கம் இரத்த வெறியாக மாறியுள்ள இத்தருணத்தில் 'இனந்தெரியாத சடலங்கள்' என்ற விடயம் பெரும் பீதியை உண்டுபண்ணியுள்ளது.

பொல்கொட எனப்படும் கொழும்புப் பிரதேச வாவி இன்று இந்த இனந்தெரியாத சடலங்கள் காரணமாக பிரபலமடைந்திருக்கின்றது.

கடந்த மே மாதம் இறுதிப்பகுதி முதல் இந்த வாவியில் மனித சடலங்கள் மிதந்து வர ஆரம்பித்தன.

பொல்கொட வாவியில் சுமார் பதினொருசடலங்கள் வரை மிதந்து வந்திருந்தன. இச்சடலங்கள் பற்றிய ... கொண்டிருந்தன என்று சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்திருந்தார்.

எனவே கொலைகள் செய்யப்படுவதிலும் கூட பல்வேறு ரகங்கள் உண்டு என்பதனையும், கொலையாளிகள் கூட கொலைகளை புரிவதில் விதவிதமான ரசனைகளைக் கொண்டுள்ளனர் என்பதனையுமே பொல்கொட வாவியில் மிதந்து வந்த சடலங்கள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கின்றது.

கொழும்பில் இராணுவத்தினரால் மாளிகாவத்தையில் வைத்து ஒரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டார். இன்று வரை அவர் வீடு திரும்ப வில்லை என்று சற்குணவதி பாஸ்கரன் என்பவரால் மனித உரிமைக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான தகவல்கள் மூலம் மிதக்கும் பிணங்கள் குறித்து தமிழர்கள் மத்தியில் பல்வேறான சந்தேகங்கள் எழுந்துள்ளன. அனைத்து சடலங்களும் தமிழர்களுடையவையாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சடலங்கள் எந்த இனத்தைச் ...

## அலசுவது – இராஜதந்திரி

# பொல்கொட, அளவ்வை மரணங்கள்: இனங்காணப்பட முடியாத சடலங்கள்!



# இனங்காணப்பட வேண்டிய கொலையாளிகள்!!



மனித சடலங்கள் வீதிஓரங்களில் போடப்பட்டுக் கொளுத்தப்பட்டிருந்தன. இவையாவற்றுக்கும் மேலாக பாரிய புதைகுழிகள் தோண்டப்பட்டும் மனித சடலங்கள் புதைக்கப்பட்டிருந்தன. (Mass burial)

இத்தகைய கர்ண கடூரமான மனிதப்படுகொலைகள் ஐ.தே.க ஆட்சியில் கண்மூடித்தனமாகவும், சர்வசாதாரணமாகவும் இடம்பெற்றிருந்தன.

சாதாரண மக்கள் மட்டும் இவ்வாறு கொலைசெய்யப்பட்டிருக்கவில்லை.

இலங்கையின் பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவரான ரிச்சர்ட் டி சொய்ஸாவும் மிகவும் மோசமான முறையில் கொலை செய்யப்பட்டு கடற்கரையோரமாக அவரது சடலம் போடப்பட்டிருக்கக் காணப்பட்டது.

ஆனால் இன்றுவரை பத்திரிகையாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவையும், அவரைப் போன்று ஆயிரக்கணக்கானவர்களையும் கடந்த ஆட்சிக் காலத்தில் கொலை செய்தவர்கள் யார் என்பதனை பொலிஸாரோ அல்லது விசேட துப்பறியும் பிரிவினரோ கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தவில்லை.

இந்நிலையில் அன்று ஆயிரமாயிரம் மனித உயிர்களைப் பலியெடுத்த கொலையாளிகள் இனங்காணப்படாத நிலையிலேயே தற்போது சந்திரிகா ஆட்சியிலும் சடலங்கள் இனங்காணப்பட முடியாத ஆறுகளிலும் கடலிலும் மிதக்கத் தொடங்கியுள்ளன.

தென்னிலங்கையில் குளங்கள், ஆறுகள், கடற்கரையோரங்களில் கடந்த ஆட்சிக் காலத்தில் மனித சடலங்கள் காணப்பட்டதன் தொடர்ச்சியாகவே தற்போது பொல்கொட, அளவ்வை பகுதிகளிலும் சடலங்கள் தென்பட்டுள்ளன.

ஐ.தே.க. ஆட்சியின் ஆரம்ப காலகட்டத்திலும் சடலங்கள் வீதியோரங்கள், கடற்கரைப்பகுதிகளில் கொலை செய்யப்பட்டுப் போடப்பட்டிருந்தன.

தமிழ் தீவிரவாதத்தை அடக்கப் போவதாகக் கூறி ஐ.தே.க. ஆட்சியாளர்களால் இக்கொலைகள் வடக்கே யாழ் குடாநாட்டுப்பகுதியில் இடம்பெற்றிருந்தன.

இளைஞர்கள் பலர் இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் அரசியல் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்த இன்பம் போன்ற இளைஞர்களும் அடங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாட்டில் மர்மமான முறையில் இடம் பெற்றிருந்த இக்கொலைகளே அன்று வடக்கே தமிழ் தீவிரவாதத்தையும் கூர்மையடையச்செய்வதாக அமைந்திருந்தது.

கண், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அச்சடலங்கள் மிதந்து வந்திருந்தன.

பொல்கொட வாவி தலைநகரை அண்டிய மொரட்டுவ, பாணந்துறை, பிலியந்தல என்ற பிரதேசங்களை இணைத்திருக்கும் விரிவான ஒரு நீர்நிலையாக இருக்கின்றது.

இங்கே போடப்பட்ட மனித ... மர்மம் துலங்காத நிலையில் குருநாகல் பிரதேசத்துக்கு அருகே அளவ்வை என்ற இடத்தில் மேலும் ஐந்து சடலங்கள் கடந்த வாரங்களில் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுப் போடப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் பிரதேசத்தை அண்டிய அளவ்வை பகுதியில் காணப்பட்ட ... சேர்ந்தவருடையது என்பது பிரச்னையல்ல. ஆனால் மனித உயிர்கள் இன்று எவ்வளவு தூரம் பெறுமதி இழந்து போயுள்ளன என்பதனையே இச்சடலங்கள் புலப்படுத்துகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியினர் கடந்த ஆண்டில் தாம் மேற்கொண்டிருந்த பாராளுமன்ற ...

# ரிச்சர்ட் டி சொய்ஸா மரணம் உட்பட ஆயிரமாயிரம் மரணங்களின் சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படாத நிலை!



சடலங்கள் இனங்காணப்பட முடியாத நிலையில் உருக்குலைந்து போயுள்ளன.

பொல்கொட வாவியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தன.

அப்போது அச்சடலங்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கான அல்லது வெட்டியோ, அடித்தோ கொல்லப்பட்டதற்கான அடையாளங்கள் எதனையும் கொண்டிருக்க வில்லை என்று பிரேத பரிசோதனை செய்த கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இருந்தபோதிலும் உணவு கொடுக்கப்படாது, பட்டினி போடப்பட்ட பின்னர் நீரில் மூழ்கடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டதற்கான அறிகுறிகளையே அச்சடலங்கள் ...

சடலங்களில் ஒன்று நரேஷ் ராஜதுரை என்ற தமிழ் இளைஞருடையது என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனையடுத்து ஏனைய சடலங்களும் தமிழ் நபர்களுடையதாகவே இருக்க வேண்டுமென்ற ஊகம் வலுவடைந்துள்ளது.

இதுதவிர பொல்கொட வாவியில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் பற்றி பொலிஸ் மா அதிபர் பிராங்.டி.சில்வாவிடம் பத்திரிகையாளர்கள் அண்மையில் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அப்போது அவர் அச்சடலங்களைப் பற்றிய மர்மத்தைத் துலக்கும் விசாரணைகள் இடம் பெறுவதாகத் தெரிவித்ததுடன், ஒரு சடலத்தில் மலர் என்று தமிழில் 'பச்சை' குத்தப்பட்டிருந்ததாகவும், இதன்மூலம் அச்சடலம் ஒரு தமிழருடையதாக இருக்கலாமென ஊகிக்கக் கூடியதாக இருக்கின்றதெனவும் தெரிவித்திருந்தார்.

மற்றும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களை அசை போட வேண்டியது இன்று மிகவும் இன்றியமையாததாகின்றது. கடந்த 17 வருட காலமாக ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டைப் பரிபாலனம் செய்து வந்தது. இப்பதினேழுவருட ஆட்சிக் காலம் மிகவும் பயங்கரமான சூழ்நிலைகளையும், அனுபவங்களையுமே நாடுமுழுவதிலும் ஏற்படுத்தி இருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் இராணுவ அணுகுமுறைகள் மனித உரிமைகள், உயிர்கள், உடமைகளைப் பந்தாடிய அதே வேளை, தென்னிலங்கையிலும் பாரிய அளவில் படுபாதக நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

ஆறுகள், குளங்கள், கடற்கரையோரங்களில் மனித சடலங்கள் எண்ணிலடங்காதவையாக மிதந்து சென்றன. இதுதவிர தென்னிலங்கையின் பல பாகங்களிலும் ...

## ஜனாதிபதி தேர்தல்– தோண்டப்பட்ட சூரியக்கந்த புதைகுழி

ஜனாதிபதி சந்திரிகா கடந்த ஆண்டில் தமது தேர்தல் பிரசாரத்தை எவ்வாறு ஆரம்பித்து இருந்தார் என்பதை முழு நாடுமே நன்கறியும்.

இரத்தினபுரியை அண்டிய சூரியக்கந்த பிரதேசத்துக்கு விஜயம் செய்து அங்கே பாரிய புதைகுழியொன்றை தோண்டி அதனுள்ளிருந்த மனித எலும்புக்கூடுகள், மண்டை ஓடுகள் என்பனவற்றை வெளியுலகுக்கு காட்டியே ஜனாதிபதி சந்திரிகா தமது தேர்தல் பிரசாரத்துக்கு அத்திவாரமிட்டிருந்தார்.

சந்திரிகாவே நேரடியாக சூரியகந்த புதைகுழிக்குச் சென்று அங்கே எலும்புக் கூடுகள், மண்டைஓடுகள் தோண்டி எடுக்கப்பட்டதை நேரில் கண்டார்.

இதனையடுத்து சந்திரிகாவின் தேர்தல் பிரசாரம் காணாமல் போனவர்கள், கொலையுண்டவர்கள், தடுத்துவைக்கப்பட்டவர்கள், விதவைகள், அபலைகள், அநாதைகள் என்போரை மையமாக வைத்தே முழு அளவில் முடுக்கிவிடப்பட்டிருந்தது.

ஐ.தே.க.வின் ஆட்சி ஒரு கொலைகார ஆட்சி என்ற முறையில் சந்திரிகாவும், அவரது கட்சிக்காரர்களும் தமது பிரசாரங்களை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இன்று மனிதாபிமானம், அடிப்படை உரிமைகள் பற்றி எவரும் பேசியிருக்காதளவுக்குப் பேசியவரான ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியிலேயே மர்மமான முறையில் மனித சடலங்கள் வெளிப்பட ஆரம்பித்துள்ளமை அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஒருங்கே தருவதாக இருக்கின்றது.

இந்நிலையில் இன்று ஜனாதிபதி சந்திரிகாவினது ஆட்சியின் ஆரம்பக்கட்டத்திலும் தென்னிலங்கையில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டவர்களின் சடலங்கள் தென்பட ஆரம்பித்துள்ளமை புதிய ஆட்சியாளர்களும், முன்னையவர்களைப் போன்று நடந்து கொள்ள முற்படுகின்றனரோவென்று மக்களை நினைக்க வைத்து விடுகின்றது.

மனித உரிமைகள் செயலணி (Human Right Task Force) என்ற பிரிவை ஜனாதிபதி சந்திரிகா உருவாக்கியுள்ளார்.

இப்பிரிவின் மூலம் கைது செய்யப்படுவோர், தடுத்து வைக்கப்படுவோர் பற்றிய தகவல்கள் மற்றும் அவர்களது உரிமைகள், நலன்களைப் பாதுகாப்பதற்கான பணிப்புரைகளையும் ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

ஆனால் இவற்றை மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் என்று ஆட்சியாளர்கள் பிரஸ்தாபித்துவரும் இத்தருணத்தில்-மறுபுறத்தே அதிர்ச்சிதரும் வகையில் மனித உயிர்கள் பறிக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் இனங்காணப்பட முடியாத முறையில் மோசமாகக் கொலை செய்யப்பட்டவர்களின் கொலையாளிகள் யார் என்பதனை இனங்காணுவதே இன்று இன்றியமையாததாகின்றது.

இதன்மூலமே இலங்கையில் இன்று ஒரு தொடர் கதையாகியுள்ள இந்த மர்மமரணங்களுக்கும் முற்றுப் புள்ளியிட முடியும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# லைலா 3 காலித்

## ஆயுதப் போரில் ஒரு பெண்புறா

இரண்டாவது விமானக் கடத்தலுக்கு லைலா காலித் தலைமையில் நால்வர் குழு தயாரானது. மூவர் ஆண்கள்.

விமானக் கடத்தல் திட்டத்தை பாலஸ்தீன விடுதலை முன்னணி (PFLP) தயாரித்துக் கொண்டிருந்தபோது,

உலக தினசரிகளில் எல்லாம் ஒரு செய்தி பிரபலமாக அடிபட்டுக் கொண்டிருந்தது.

1970 ஆகஸ்ட் 08ம் திகதி எகிப்திய அதிபர் கமால் அப்துல் நாஸரும், இஸ்ரேலியர்களும் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொண்டனர். மத்திய கிழக்கில் சமாதானம் உருவாகப் போகிறது. போர் நிறுத்த ஒப்பந்தம் அதற்கு அடித்தளமிட்டிருக்கிறது என்று பேசப்பட்டது.

விமானக் கடத்தலுக்கு புறப்பட்ட குழுவினரை வழியனுப்பி வைக்கும்போது பாலஸ்தீன விடுதலை முன்னணித் தலைவர் ஜோர்ஜ் கபாஸ் உறுதியான தொனியில் சொன்னார்;

"தோழர்களே! நம் புனித பூமி அடிமைப்பட்டுக் கிடக்கிறது. கொட்டமடிக்கிறார்கள் இஸ்ரேலிய சியோனிஸ்டுக்கள்! எகிப்தின் அதிபர் போர் நிறுத்தம் செய்து கையொப்பமிட்டிருக்கிறார். அவர் கையொப்பம் இட்ட மையின் ஈரம் உலரும் முன்பாகவே நம் எதிர்ப்பைக் காட்டப் போகிறோம்! காரியத்தை கச்சிதமாக முடித்து நம் எதிர்ப்பை அழுத்தம் திருத்தமாக வெளிப்படுத்தும் பொறுப்பை உங்கள் நால்வரிடமும் ஒப்படைக்கிறேன். சென்று வாருங்கள். என்றும் நாம் வெற்றிக்காக!"

□□

**1970** செப்டம்பர் 10ம் திகதி.

இஸ்ரேலிய பயணிகள் விமானம் எல்.அல்.219.

இஸ்ரேலிய தலைநகரான டெல் அவிவ் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு நெதர்லாந்தின் தலைநகரான அம்ஸ்டர்டாம் விமான நிலையத்தில் தரித்துவிட்டு அமெரிக்காவின் நியூயோர்க் விமான நிலையம் நோக்கிச் செல்லும். அதுதான் பயணப்பாதை.

அம்ஸ்டர்டாம் விமான நிலையத்திற்கு முன்கூட்டியே வேறு வழியில் சென்று நியூயோர்க் செல்லும் பயணிகள் போல காத்திருந்தனர் லைலா காலித்தும் அருயேலோவும்.

இன்னும் இருவர் வந்து சேர வேண்டும். லைலாவும், அருயேலோவும் விமான நிலைய இருக்கைகளில் இளம் தம்பதிபோல் மிக நெருக்கமாக அமர்ந்திருந்தனர்.

எல்.அல்.219 தரையிறங்கிவிட்டது. என்று விமான நிலைய அறிவிப்பாளினியின் கொஞ்சும் குரல் பயணிகளுக்கு அறிவித்தது.

லைலா காலித்தும் அருயேலோவும் கைகோர்த்துக்கொண்டு விமானத்தை நோக்கிச் சென்றனர்.

விமானநிலைய சோதனைகளை ஏமாற்றும் வகையில் இருவரிடமும் ஆயுதங்கள் பத்திரமாக இருந்தன.

விமானப் படிக்கட்டுக்களில் விமானப் பணிப்பெண்களின் வழக்கமான புன்னகைகளை வாங்கிக் கொண்டு உள்ளே சென்ற லைலா காலித் தனது சகாவின் காதருகே கிசுகிசுத்தாள்.

"அவர்கள் இருவருக்கும் என்ன நடந்திருக்கும். காணோமே?"

அருயேலோவும் அதைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் இல்லாமல் கூட காரியத்தை முடித்துவிடலாம். சிரமம் இல்லை. ஆனால் அவர்கள் இருவரும் இசகு பிசகாக மாட்டிக்கொண்டு உளறிவிட்டால் எல்லாம் கெட்டு, குட்டிச்சுவராகிவிடும்! என்பதுதான் லைலா காலித்தின் கவலை.

விமானம் புறப்பட்டு ஓடு பாதையில் ஓடி மெல்ல எழுந்து பறக்கத்தொடங்கியது.

லைலா காலித் இருக்கையில் இருந்து எழுந்து நின்றாள். இரு கைகளிலும் இரண்டு கைக்குண்டுகள் வைத்திருந்தாள்.

அருயேலோவும் எழுந்துகொண்டான். அவன் கரத்தில் பளபளத்துக்கொண்டிருந்த துப்பாக்கி பயணிகளின் வயிறுகளைக் கலக்கிக் கொண்டிருந்தது.

லைலா காலித் 'கொக்பிற்'றை நோக்கி ஓடிப்போய் அதன் கதவை இழுத்தாள். கதவு உட்புறமாக நன்றாக பூட்டப்பட்டு இருந்தது.

விமானிகள் இருக்கும் விமான முன் முனைப்பகுதிதான் 'கொக்பிற்' என்று அழைக்கப்படும்.

முதலாவது விமானத்தை கடத்தும்போது லைலா காலித் மிகச் சுலபமாக 'கொக்பிற்'றுக்குள் புகுந்துகொண்டாள்.

'கொக்பிற்' கதவு பூட்டப்படாமல் இருந்ததுதான் சுலபமாக உள்ளே சென்று விமானிகளை மிரட்டி பணியவைக்க அப்போதுதான் வசதியாக இருந்தது.


ஆனால்...இப்போது...

'கொக்பிற்' கதவு திறக்கப்படமுடியாதவாறு பூட்டப்பட்டிருந்தது.

இது இஸ்ரேலிய விமானம்.

விமானக் கடத்தல்களை முறியடிக்க இஸ்ரேலியர்கள் சில பாதுகாப்பு ஏற்பாடுகளை இரகசியமாகச் செய்திருந்தனர்.

'கொக்பிற்' கதவை மூடியே வைத்திருப்பது. கடத்தல்காரர்கள் என்ன



செய்தாலும் திறக்கவே கூடாது.

விமானப் பயணிகளோடு பயணிகளாக பாதுகாப்பு அதிகாரிகளும் பயணம் செய்வது என்பவைதான் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள். இவற்றை கடத்தல்காரர்கள் அறிந்திருக்கவில்லை.

லைலா காலித் உரத்த குரலில் பேசினாள்;

'கொக்பிற்' கதவை உடனே திற! திறக்காவிட்டால் என் கைக்குண்டுகள் இரண்டும் விமானத்தோடு சேர்ந்து பயணிகளுக்கும் சமாதி கட்டிவிடும்! திற!"

பயணிகள் பயத்தில் கூச்சலிட ஆரம்பித்தனர். குழந்தைக்ள் எதுவும் புரியாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன. வயதான சிலர் தமது நெஞ்சை பிடித்துகொண்டு இதயத்துடிப்பு நின்றுவிடுமோ என்று பயந்துகொண்டிருந்தார்கள்.

தருவது-ரசிகன்

பயணிகளோடு பயணியாய் இருந்த பாதுகாப்பு அதிகாரி ஷொல்மோவிடர் அருயேலோவின் பக்கமாக நகர்ந்தார்.

அருயேலோ அவரைக் கவனித்துவிட்டான்.

"வராதே நில்! வந்தால் சுடப்படுவாய்!"

பாதுகாப்பு அதிகாரிஷ்யநோக்கி கைத்துப்பாக்கியை நீட்டினான். மிரட்டல் பயன்தரவில்லை. அதிகாரி நெருங்கிவந்தார்.

"வா...வா..சாகலாம்...வா!"

அருயேலோ சுட்டான்.

டுமீல்!

அதிகாரியின் காலில்தான் சுட்டான். இரத்தம் பாய்ந்தது. வலியைப் பொருட்படுத்தாமல், அருயேலோவை நோக்கி அதிகாரி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, துப்பாக்கி வைத்திருந்த கரத்தின் மணிக்கட்டில் காலால் உதைத்தார்.

அருயேலோ பின்னால் நகர்ந்து உதையில் இருந்து தப்பித்துக் கொண்டான்.

நகர்ந்தவனின் கைக்கெட்டும் தூரத்தில் விமானப் பணிப்பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள்.

அவளை மடக்கி, கழுத்தில் கைத்துப்பாக்கி முனையால் அழுத்திக் கொண்ட அருயேலோ,

"முட்டாள் அதிகாரியே! இப்போது இந்த அழகான பெண் சாகவேண்டுமா என்று யோசி! பாவம், இஸ்ரேலிய அழகிக்கு விமானத்தில் தான் மரணம் நேர வேண்டுமா?"

அதிகாரி பதட்டத்தோடு,

"வேண்டாம், அவளை எதுவும் செய்யாதே."

"அப்படியா? நல்லது, கொக்பிற்' கதவை திறக்கச் சொல்லு. இவளை பத்திரமாக தந்துவிடுகிறேன்."

அதிகாரி ஓடிச்சென்று விமானத்தில் இருந்த 'இன்டர்கோம்' வழியாக கொக்பிற்றில் இருந்த விமானிகளோடு பேசினான்.

யூதர்களின் 'ஹீப்ரு' மொழியில் அவர் பேசியதால், என்ன பேசினார் என்று அருயேலோவுக்கும் புரியவில்லை. லைலாவுக்கும் விளங்கவில்லை.

"ம்ஹும்... விமானி மசியமாட்டார். கொஞ்சம் பொறு" பாதுகாப்பு அதிகாரி அருயேலோவிடம் சொல்லிக்கொண்டிருந்தபோது, விமானம் அப்படியும் இப்படியுமாக அசைந்துகொண்டு பறக்கத் தொடங்கியது. அது விமானி செய்த தந்திரம். விமானம் ஆடியதால் அருயேலோ நிலை தடுமாறினான்.

அதுதான் தருணம் பாதுகாப்பு அதிகாரி அவன் மீது பாய்ந்தார். இந்த முறை உதை ஏமாற்றவில்லை.

அருயேலோவின் துப்பாக்கி அவனிடமிருந்து விலகித் தூரப்போய் விழுந்தது.

அவனது தலையைப் பிடித்து 'கொக்பிற்' கதவுடன் மோதி அடித்தார்.

அருயேலோவுக்கு மண்டை பிளந்து இரத்தம் கொட்டியது.

மின்னல் வேகத்தில் இத்தனையும் நடந்து கொண்டிருக்கும்போது லைலா காலித் தன் தோழனைக் காப்பாற்றும் வேகத்தோடு முன்னேறினாள்.

அவள் முன்னேறிச் செல்லும்போது விமானம் மீண்டும் ஆட்டம் போட்டது. தடுமாறியவளை ஹரி கிளார்க் என்னும் பயணி எட்டிப்பிடித்து இழுத்தான்.

கைக்குண்டுகளை பறிக்கவும் முயற்சித்தான்.

"பறிக்காதே! வெடிக்கவைத்து விடுவேன்"

லைலா கோபமாய்க் கத்தினாள்.

ஹரிக் கிளார்க் சிரித்தான்.

"வெடித்தால் நான் மட்டுமல்ல நீயும் செத்துப்போவாய். நான் செத்துப் போனால் என் குடும்பம் மட்டும்தான் கண்ணீர் விடும். ஆனால் நீ செத்துப் போனால் உன் தாய் நாடே கதறும். தவிர, இன்னும் நீ நிறைய சாதிக்க வேண்டி இருக்கிறது."

எதிர்பாராத அதிர்ச்சிகள், தன் சகாவும் வீழ்த்தப்பட்டு விட்டதால் ஏற்பட்ட பலவீனம், அதுதவிர விமானத்தை பயணிகளோடும் சிதறடிக்க முடியாது மிரட்டலாம். செய்யமுடியாது.

லைலா யோசித்த நொடிகளில் அவளது கைக்குண்டுகள் ஹரிகிளார்க்கின் கையில் சென்றுவிட்டன.

இத்தனை சம்பவங்களும் 18 நிமிடங்களில் நடந்துமுடிந்தன.

இலண்டன் 'ஹீதுறு' விமான நிலையத்தில் இஸ்ரேலிய விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. அருயேலோ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

கடத்தல் முயற்சி தமது வான் பகுதியில் நடந்தமையால் லைலா காலித்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு பிரிட்டிஷ் பொலிஸ் கேட்டது.

லைலா காலித் பிரிட்டிஷ் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டாள்.

லைலா காலித் கலங்கவில்லை. கைது செய்த பொலிஸ் அதிகாரியிடம் கேட்டாள்.

"அருயேலோ எங்கே?"

அதிகாரி சற்றுத் தாமதித்து அனுதாபமான குரலில்

"காப்பாற்ற முயன்றோம். சிகிச்சைக்கு முன்னரே வழியில் இறந்துபோனார்!"

லைலாவின் விழிகளில் இப்போதுதான் கண்ணீர் திரண்டது.

(முற்றும்)

**பி.கு.** லைலா காலித்தை மற்றுமொரு விமானக்கடத்தல் மூலம் பி.எஃப்.எல்.பி பிரிட்டனிடமிருந்து மீட்டெடுத்தது.

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்


# மருத்துவ + விந்தைகள்

## ஹலோ டாக்டர்

**"ஹலோ டாக்டர்! எப்படி இருக்கிறீர்கள். அறுக்க வந்தவனை பார்ப்பது போல பார்க்கிறீர்களே. ஹி..ஹி.. அமரலாமா? இதென்ன புது சோபாவா மெத்து...மெத்தென்று இருக்கு?"**

"அமருங்கள் முதலில். சென்ற முறை பார்த்ததை விட ஒரு சுற்று மெலிந்து இருக்கிறீர்களே என்றுதான் பார்த்தேன். சோபா புதுசுதான் ஏன் திடீரென்று மெலிந்து விட்டீர்கள்?"

முட்டையால் மாரடைப்பு



**"மெலிந்து விட்டேன் என்பதற்காக ஏதாவது மருந்தை எழுதி என் தலையில் கட்டிவிடலாம் என்று நினைக்காதீர்கள் டாக்டர், இருக்கவே இருக்கிறது முட்டை, கோழி முட்டை. சுத்தமான நாட்டுக்கோழி முட்டை. ஜமீன் சைவமுட்டை தினமும் 4 சாப்பிட்டால் புஸ்டி தானாக வந்துவிடும்."**

"ஒரு நாளைக்கு 4 முட்டை!"

**"ஆமாம் அதிகமாகுமே தவிர குறையாது. பொறாமையாக இதுக்கிறதா டாக்டர்?"**

"பொறாமை இல்லை. பொசுக்கென்று போய்விடுவீர்களோ என்று வருத்தமாக இருக்கிறது. முட்டை அதிகம் சாப்பிட்டால் மாரடைப்பு வரும்! தெரியாதா உங்களுக்கு?"

**"எ...என்ன..மா...மாரடைப்பா ஏன் டாக்டர்?"**

"அளவோடு முட்டை சாப்பிட்டால் அது உடலுக்கு நல்லது. வாரத்திற்கு மூன்று நாட்கள் சாப்பிடலாம். தவறு கிடையாது."

**"சரி டாக்டர் மரடைப்பு வருமென்று மிரட்டினீர்களே சும்மாதானே!"**

"உண்மைதான். முட்டையின் மஞ்சட் கருவில் கொலஸ்டிரோல் என்னும் கொழுப்புப் பொருள் அதிமாக இருக்கிறது. அளவுக்கு மீறி முட்டை சாப்பிடுகிறீர்கள் என்றால் இரத்தத்தில் கொழுப்பு அதிகரிக்கும். அந்தக் கொழுப்பு இரத்தக் குழாய்களின் உட்சுவரில் படிந்துவிடும். சுவரில் இடம்பிடித்த கொழுப்பு மெல்ல மெல்ல வளர்ந்து இரத்த ஓட்டத்துக்கு குறுக்கே நிற்கும்."

**"அடடே.."**

"அது மட்டுமல்ல, இருதயத்திற்கு இரத்தம் செலுத்தும் மிகச் சிறிய இரத்தக்குழாய்களான கொரோனரித் தமனிகளில் கொழுப்பு சேர்ந்தால் இருதயத் தசைகளுக்கு இரத்தம் செல்வதும் தடைபடும். இதனால் இருதயம் இயங்க மறுக்கும். மாரடைப்பு அப்படித்தான் ஏற்படுகிறது"

**"ஓஹோ.. இப்போதுதான் ஞாபகம் வருகிறது. முட்டை சாப்பிட்டால் புற்றுநோயும் வருமென்று சொல்வார்களே. அது உண்மையா டாக்டர்?"**

"பொய்! புற்றுநோய் வராது!"

**"அப்பாடா தப்பித்தேன், டாக்டர்!"**

**"அதென்ன உங்கள் தலை முடியில் ந..நரை, ஏன் டாக்டர் தேன் தடவுகிறீர்களா தலை முடிக்கு?" ஏன் சிரிக்கிறீர்கள்?"**

"சிரிக்காமல் என்ன செய்வது. தேன் பட்டாலோ அல்லது தடவினாலோ முடி நரைக்கும் என்பது முழுப்பொய்.

**"எனக்கு ஒரு பிரதான பிரச்சனை இருக்கிறது. எது சாப்பிட்டாலும் சரி, சாப்பிடாவிட்டாலும் சரி ஏப்பம் வந்து தொலைக்கிறது. ஏப்பம் விடுகிறாய் ராஜா ஆபத்து ஜாக்கிரதை என்கிறான் என் நண்பன் உண்மையா டாக்டர்?"**

"தான் சிரிக்காமல் ஜோக் விடுவார் போலிருக்கிறது உங்கள் நண்பர். ஏப்பம் விடும்போது வயிற்றிலுள்ள காற்று வெளியேறுகிறது. உணவு அல்லது தண்ணீர் அருந்தும் போது காற்றையும் சேர்த்து விழுங்கி விட்டோம் என்றால் ஏப்பம் வரும். அது தவிர, அதிக உடலுழைப்பில் ஈடுபடுவோருக்கும் ஏப்பம் வரக்கூடும். ஏப்பம் விடுவதால் எந்த ஆபத்தும் இல்லை பயப்படதேவையில்லை; அதற்காக நாலு பேர் மத்தியில் பெரிதாக சத்தம் போட்டு ஏப்பம் விடாதீர்கள். அது நாகரீகம் இல்லை."

**"அடுத்து அழகோடு தொடர்பான ஒரு கேள்வி. இப்போதே அழகாய்த் தானே இருக்கிறான் என்று நினைப்பீர்கள். உண்மைதான். ஆனாலும் கேட்கிறேன், தேமல் ஏன் வருகிறது டாக்டர்?"**

"தேமல் ஒருவித காளான் தொற்றினால் ஏற்படுகிறது. சுகாதாரமாக இல்லாதவர்களுக்கும், உடலில் நோய் எதிர்ப்புத் திறன் குறைந்தவர்களுக்கும் தேமல் ஏற்படலாம்.

பொதுவாகச் சொல்வதானால் உடல் சுத்தமாக இருந்தால் நூற்றுக்கு தொண்ணூறு வீதம் தேமல் வர சான்ஸ்சே இல்லை.

காளான் தொற்றை தடுக்கும் மருந்துகள் இருக்கின்றன. மருத்துவரின் ஆலோசனையுடன் பயன்படுத்தி தேமலை விரட்டலாம்.

**"அப்பாடா சளைக்காமல் பதில் சொல்கிறீர்கள். உங்கள் இளமையின் இரகசியம் என்ன டாக்டர்?"**

"சொன்னால் பின்பற்றவா போகிறீர்கள். புகை பிடிப்பதில்லை. மதுபானம் அருந்துவதில்லை."



**"வயதில் செஞ்சரி போட்டு விட்டு செத்துப்போனாரே இந்தியாவின் முன்னாள் பிரதமர் மொராஜி: அவர் மாதிரி என்று சொல்லுங்கள்."**

"நான் சிறுநீர் அருந்துவதில்லையே. எங்கே விட்டேன். ஆ...உடல் எடையை சீராக வைத்திருக்கிறேன். இதனால் என் மனைவிக்கும் சந்தோசம். ஏன் என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். தினமும் ஒரு மணி நேரம் தோட்ட வேலை செய்கிறேன். ஒரு குறிப்பிட்ட தூரம் நடக்கிறேன். வெளியே நடக்க விருப்பப்படாவிட்டால் கயிறு அடிக்கலாம். (ஸ்கிப்பிங்) தினமும் குறைந்தது நூறு தடவை ஆணோ, பெண்ணோ கயிறு அடித்து வந்தால் உடல் கட்டாக இருக்கும். எடை கட்டுக்குள் இருக்கும். உடல் உங்கள் கட்டுப்பாட்டில் இருந்தால் மனமும் தினமும் தெம்பாக இருக்கும். ஐம்பதிலும் ஆசை வரும். ஐம்பதிலும் அசத்த முடியும். அலுப்பு வராது களைப்பும் இருக்காது."



**"அப்படியா...நாளை முதல் கயிறடிப்பேன்.சத்தியம் டாக்டர். சிரிப்பும் கூட நல்ல மருந்துதானே. ஒரு ஜோக் சொல்லுங்கள் டாக்டர் சிரித்துக் கொண்டே கழன்று கொள்கிறேன்."**

"டாக்டர் ஒருவர் பரிசோதனைக் கூடத்தில் இருந்தார். அவரது ஆராய்ச்சியில் வெற்றி கண்டுவிட்டார். அதே நேரத்தில் அவரது மனைவிக்கும் குழந்தை பிறந்துவிட்டது. அந்த செய்தியை டாக்டரிடம் சொல்ல ஓடி வந்தவர் "வாழ்த்துக்கள்" என்றார். அதற்கு டாக்டர் அமைதியாகப் பதில் சொன்னார், "எனது மாணவர்கள் இருவரும் ஒத்துழைத்திருக்காவிட்டால் நான் இந்தச் சாதனையை படைத்திருக்க முடியாது."

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்


# கப்பென்று பிடிக்கும் மூன்றாம் கை

இரண்டு கைகளை வைத்துக்கொண்டே நம்மில் பலர் என்ன பாடு படுத்துகிறார்கள். மூன்று கைகள் இருந்தால் என்ன நிலமை? என்று யோசிக்கத் தோன்றுகிறதா. ஆனால் படத்தில் இருக்கும் மூன்றுகை மனிதர் பரம சாது. பெயர் முஸ்தபா ஷாரீப். அமெரிக்காவில் பொசினிக்கன் குடியரசில் உள்ள சான்கோ டோமிங்கோ என்னுமிடத்தில்தான் பிறந்தது. மூன்றுகையோடு வளர்ந்தது எல்லாம்! ஆரம்பத்தில் முதுகில் சிறிதாக இருந்த கை வளர்ந்து நீண்டுவிட்டது. கண்டவர்கள் அனுதாபப்பட்டார்கள். முஸ்தபா தன்னம்பிக்கையோடு மூன்றாம் கைக்கும் வேலை கொடுத்தார். தற்போது 'பேஸ்போல்' விளையாட்டில் அசத்துகிறார். இரண்டு கையில் இருந்து தப்பினால் மூன்றாம் கை பந்தை கப்பென்று அமுக்கிவிடும். →





சிறுவயதில் பிடிக்கப்பட்ட போட்டோ. முஸ்தபாவின் மூன்றாவது கரம்! இது வளரும் பருவநிலை. இப்போது நீண்டு வளர்ந்து விட்டது.



# ↑ ருசியான நீளம்

என்ன இது, அனுமார் வால் மாதிரி நீண்டிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? வால் அல்ல வாய்க்கு ருசியான 'சான்விச்' தான் இது. பத்தாயிரம் இறாத்தல் பாண், பதின்மூவாயிரத்து இருநூறு இறாத்தல் கறிவகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது. தயாரித்து முடித்தவர்கள் 1500 பேர். அடுக்கிப் பார்த்தபோது 2 3/4 மைல் நீளம் இருந்தது. இது ஒரு உலக சாதனையாக 'கின்னஸ்' புத்தகத்தில் பதியப்பட்டுவிட்டது. சரி, சாதனை முடிந்தபின் இதையெல்லாம் என்ன செய்தார்கள் என்கிறீர்களா? அநாதைக் குழந்தைகளுக்கு கொடுத்து விட்டார்கள்.

## தகவல் பெட்டி

# அசுர பலம்

→ வயது 28. உடலில் அசுரபலம். உள்ளத்திலும் அதே.....அதே! ஒவ்வொன்றும் 50 கிலோ கொண்ட மலைப்பாம்புகள் உடலை சுற்றி இறுக்கி நசுக்கியும் மூச்சு பிடித்து நிற்கிறார்பாருங்கள். யப்பா- என்ன பலம்!



# தொண்டனும் கரடியும்

← உண்ட களை தொண்டனுக்கும் உண்டு என்று கேள்விப் பட்டிருப் பீர்கள். கரடிக்கும் உண்டு உண்ட களை என்று இனி நம்புவீர்கள் தானே. தூங்குவதிலும் தூக்கலான அழகு காட்டலாம் என்று கரடியார் தூங்குவதன் மூலம் நிரூபிக்கப் படுகிறது. டும்..டும்....டும்.



www.padippakam.com

# மம்தா ஏன் மனமுடைந்தார்

மம்தா குல்கர்னி- (முகப்பில் இருக்கிறாரே அவர்தான்) இந்திப்படவுலகில் தாராள மனப்பான்மை கொண்ட நடிகைகளில் ஒருவர்.

மம்தாவைக் காதலித்தார் சல்மான்கான். இருவரும் நீபாதி நான் பாதியாக இருந்தது பரகசியமான சமாச்சாரம்.

இப்போது நீ வேறு நான் வேறு ஆகிவிட்டனர். "மம்தாவைக் காதலித்தேனா, யார் நானா? மம்தா போதையில் உளறியிருப்பார்" என்கிறார் சல்மான்கான்.

மம்தா என்ன சொல்கிறார்?

"சல்மான் கானின் உருவத்தைப் பார்த்து அவரை எடை போட்டது தப்பாகிவிட்டது. அவரது மனப்பாங்கால் நான் உடைக்கப்பட்டேன். தெளிவாகச் சொல்வதென்றால் அற்புதமாக ஏமாந்துபோனேன்"

என்கிறார் மம்தா.

மனமுடைந்த மம்தா சற்றே அதிகமாக மதுவை நேசிப்பதாக ஒரு தகவல்.

# ஐந்தடி மணமகள்

நடிகர் குள்ளமணியைத் தெரியுமல்லவா. மூன்றே மூன்று அடி உயரம் ரொம்ப காலமாக மணமகள் தேடிய குள்ளமணிக்கு இப்போதுதான் மணமகள் கிடைத்திருக்கிறாள். பெயர்- லட்சுமி. அவரது அக்கா மகள். உயரம் 5 அடி.

தன் மனைவியை கண்கலங்க விடமாட்டேன் என்று நண்பர்கள் உறவினர்கள் அனைவரிடமும் சொல்லிக் கொண்டிருக்கிறார் குள்ளமணி. (வெங்காயம் உரிக்கும்போது என்ன செய்வார்)

# திபு திபு... தபுதபு

பம்பாயிலிருந்து வந்த நக்மாவை வைத்து கலக்கலான 'காதலன்' படத்தை தயாரித்தவர் குஞ்சுமோன். 'காதலன்' பட வெற்றிக்கு பின்னர் குஞ்சுமோன் தயாரித்து தரப்போகும் சூப்பர் மசாலாப்படம் 'காதல் தேசம்.'

கதாநாயகர்கள் இருவர். ஒருவர் வினீத், மற்றவர் புதுமுகம் அப்பாஸ்.

கதாநாயகி யார் தெரியுமா? இந்தியில் தூள்கிளப்பிவரும் தபு. பெயரும் இரண்டெழுத்து. எப்படி நடிக்கச் சொன்னாலும் அவர் சொல்லும் ஓ.கே. என்பதும் இரண்டெழுத்து. நக்மாவின் இடத்தை திபு திபுவென்று புகுந்து பிடிப்பாரா தபு? பார்க்கலாம்.



கார்த்திக்-மீனா
படம்-மருமகன்

# சங்கீதா சமாச்சாரம்

'புள்ள குட்டிக்காரன்' படம் திரைக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. ஆனாலும் படப்பிடிப்பில் நடந்த சம்பவங்கள் பார்த்திபன்-சீதா தம்பதியினருக்குள் மினிப் புயலை தக்கவைத்துக் கொண்டு இருக்கின்றன.

'புதிய பாதை' படத்தில் நடிக்கும் போது சீதாவை காதல் பண்ணி கல்யாணம் செய்தவர் பார்த்திபன். 'புள்ள குட்டிக்காரன்' படப்பிடிப்பில் சங்கீதாவோடு நெருக்கமாக பழகிவிட்டாராம்.

வேறு இயக்குநர்கள் நடிக்க அழைத்தபோதும் சங்கீதா மறுப்புச் சொல்லிவிட்டார். மறுப்புச் சொன்னதோடு மட்டும் நின்றிருந்தால் வம்பே இல்லையே. ஆனால், சங்கீதாக் குட்டி என்ன சொன்னார் தெரியுமோ? "நான் நடிக்க வேண்டுமானால் பார்த்திபன் சம்மதிக்க வேண்டும். ஆகவே நீங்கள் அவரையே கேளுங்கள்" என்றுவிட்டார்.

அதுவும் ஆர்.வி.உதயகுமார், கே.எஸ்.ரவிக்குமார் போன்ற இயக்குநர்களின் அழைப்பைக்கூட உதறிவிட்டார் சங்கீதா என்றால் சும்மாவா.

பெரிய குடும்பம் படத்தில் பிரபுவோடு நடிக்கும் வாய்ப்பையும் 'ப்பூ' என்று ஊதித்தள்ளியிருந்தார். இவையெல்லாம் சேர்த்துதான் 'சங்கீதாவின் மனதில் என்ன இருக்கு?' என்று தூருவியந்து கிசு-கிசு பெரிதாகியது.

கிசு-கிசுவை சங்கீதா மறுக்கிறார். மறுப்பது மட்டும் நூறுவீத உண்மையாகிவிடுமோ?

சினிமா விமர்சனம்

# வில்லாதி வில்லன்

பெரிதாக புரட்சி என்று ஆரவாரம் காட்டி கையைச் சுட்டுக்கொள்ளாமல் படம் சுட்டுத் தந்திருக்கிறார் சத்யராஜ்.

ஒன்று சத்தியராஜ். ஒற்றைக் கண் சத்யராஜ் வித்தியாசமான மேக்கப். அப்பாவித்தனமான வஞ்சக வில்லன். இரண்டாவது சத்யராஜ். அமைதிப்படை வில்லன் சத்யராஜ் போலவே மேக்கப். வசன உச்சரிப்பில் வித்தியாசம் காட்டியிருக்கிறார். மூன்றாவது சத்யராஜ் அவர்தான் எடிசன். கம்பீர இளைஞனாக வந்து நக்மாவை உருட்டி புரட்டிக் காதலிக்கிறார். சண்டைக் காட்சிகளில் ஆவேசராஜ். அந்த சிலம்பாட்டம் தூள்!

தன்னைப் பெண்பார்க்க வருபவரிடம், உங்களுக்கு கராத்தே தெரியுமா? சிலம்பம் தெரியுமா? என்று நக்மா கேட்பதும், பாடத் தெரியுமா? சமைக்கத் தெரியுமா? என்று நீங்கள் கேட்கலாம் நாங்கள் கேட்கக்கூடாதா? என்று நக்மா விளக்கம் சொல்வதும் சத்யராஜின் அசத்தலான வசனங்கள் பளிச்சிடும் இடங்கள். நாட்டுக்காக மசாலா கலந்து சில செய்திகளை தெரிவித்திருக்கிறார் சத்யராஜ். அரசியலைச் கிண்டலடிப்பதும் உறைப்புச் சுவை.

நக்மா விடயத்தில் சத்யராஜ் சத்தியமாக் கோழி உரிப்பதுபோல உரித்து தள்ளிவிட்டார். யப்பா-என்ன கவர்ச்சி! நக்மா இனிமேலும் இதைவிடக் கவர்ச்சி காட்ட முடியுமோ? போதாக்குறைக்கு சில்க் சுமிதா நடனம், விசித்ரா அமைச்சர். வக்கீல் சத்யராஜின் மனைவியாக வரும் ராதிகாவுக்குத்தான் வேலை அதிகம் இல்லை.

கவுண்டமணி இருக்கிறார். உதை வாங்கும் செந்திலைக் காணவில்லை.

'வில்லன் இமேஜ்' தக்கவைத்துள்ளதோடு, சூப்பர் மசாலா இயக்குநராகவும் தேறியிருக்கிறார் சத்யராஜ். தமிழ் நாட்டில் இதுவரை (மூன்று வாரங்கள்) வசூல் நிலவரம் நன்றாக இருக்கிறது.



# ராஜேந்தரின் அடுத்த படம்

டி.ராஜேந்தரின் 'தாய் தங்கை-பாசம்' வெளிவந்து நூறுநாட்களை தொடப்போகிறது. இந்த நேரத்தில் டி.ராஜேந்தருக்கு ஒரு அதிஷ்டம். பிரபல படத் தயாரிப்பாளர் நாகிரெட்டியாரின் படம் ஒன்றை நடித்து இயக்கி, இசையமைத்து, திரைக்கதை-வசனம் ஒப்பேற்றி முடிக்கும் பொறுப்பை டி.ராஜேந்தர் பெறப் போகிறாராம்.

எதுகை-மோனை சகிதம் டி.ராஜேந்தர் சொன்ன கதை நாகிரெட்டியாருக்குப் பிடித்துவிட்டதாம். நீயே பண்ணிக்கொடு ராஜா என்றுவிட்டாராம். "நான் யாருக்கும் தூக்க மாட்டேன் கூஜா உமக்கு மட்டுமே செய்தேன் தாஜா." என்றிருப்பாரோ டி.ராஜேந்தர்.

# ஜோசியம்

'டேக் இட் ஈஸி ஊர்வசி' படத்தில் நடித்துள்ள நாயகி அமிர்தாவும் எதையுமே 'டேக் இட் ஈஸியாக' எடுத்துக் கொள்பவர்தான். அதனால் தயாரிப்பாளர்கள் மற்றும் இயக்குநர்களின் பேராதரவு அமிர்தாவுக்கு கிடைக்கும். நல்ல வாய்ப்புக்கள் வந்து சேரும். ஒரு கொஞ்சக் காலத்திற்கு என்றாலும் எதிர்காலம் பளிச்சென்று இருக்கும் என்று ஜோசியம் போலப் பேசிக்கொள்கிறார்கள். அமிர்தா பிழைக்கத் தெரிந்தவர்.



வானில் உலாவும்
வண்ண நிலவும்
நாணம் கொள்ளும்
நங்கையாள்-
ஆடல் வினோத
ஆனந்த கீத
பாடம் சொல்லும்
மங்கையாள்!
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

ஷில்பா ஷெட்டி
மிஸ்டர் ரோமியோ

சத்யராஜ்-ராதிகா
படம் வில்லாதி வில்லன்

# தொடர் ஆட்டம்!

சத்யராஜுடன் நக்மா நடித்த 'வில்லாதி வில்லன்' வந்து ஓடிக் கொண்டிருக்கிறது. இப்போது சரத்குமாரோடு வெளிநாடுகளுக்கு பறந்து பாடல்காட்சிகளில் நடித்துக் கொண்டிருக்கிறார் நக்மா.

'ரகசிய போலீஸ்' படத்துக்காக பிரான்ஸ், இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகளில் சரத்குமார், நக்மா பாடல்காட்சிகள் மற்றும் கிளு-கிளு காதல் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. சமீபத்தில்தான் வெளிநாடுகளுக்குப் பறந்து 'லவ் பேர்ட்ஸ்' படத்துக்காக பாடி ஆடி களைத்து போய் வந்தார் நக்மா. இப்போது மீண்டும் இன்னொரு ரவுண்ட் போய்விட்டு வந்திருக்கிறார். (உடம்புக்கு என்ன ஆகுமோ?)



ரோஜா
படம்-ராசய்யா

# ராஜாவின் ராஜா

இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா 'பாண்டியன்' படத்தில் ஒரு பாடலுக்கு இசையமைத்து இருந்தார். இப்போது ஒரு படத்திற்கு முழுதாக இசையமைக்கப் போகிறார். வாய்ப்புக் கொடுப்பது இளையராஜாவை 'அன்னக்கிளி' படத்தின் மூலம் அறிமுகம் செய்தாரே அவர்தான். அவர் பெயர்: பஞ்சு அருணாசலம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## ராம்கி புதிய படம்

அதிக சலசலப்பு இல்லாமல் போனாலும் ராம்கியும் நடித்துக் கொண்டுதான் இருக்கிறார். விரைவில் ராம்கி நடித்த 'புதல்வன்' படம் திரைக்கு வரவிருக்கிறது.

புதிதாக ராம்கி நடிக்க ஒப்பந்தமாகியுள்ள படத்தின் பெயர் 'நந்தா'. ஜோடியாக யாரை நடிக்க வைக்கலாம் என்று தேர்வு நடத்துவருகிறது.

கவுண்டமணி, செந்தில், மலேசியா வாசுதேவன், அலெக்ஸ், ரேஷ்மா ஆகியோரும் நடிக்கிறார்கள். ஆர்.டி. ராஜசேகர் இயக்குகிறார். குறுகிய காலத்தில் தயாரித்து வெளியிட உத்தேசமாம்.

## ஆ....

'காதல் தேசம்' படம் பற்றிய ஒரு 'ஆ...'ரகச் செய்தி இது. படத்தின் தயாரிப்புச் செலவு எவ்வளவு என்கிறீர்கள்? ஒரு கோடி... இரண்டு கோடி... அல்ல, அல்ல, ஆறு கோடி! இது மேலும் அதிகமாகக்கூடும். அதிகமானாலும் அசர மாட்டாராம் தயாரிப்பாளர் குஞ்சுமோன்.



ரவீனா டாண்டன்-அக்ஷய்குமார்

## ரவீனா பிஸி!

ரவீனா டாண்டன் 'சாது' படத்தில் அர்ஜுனுடன் நடித்தவர். தற்போது இந்தியில் படு பிஸியாக இருக்கிறார். அவரை மீண்டும் தமிழ் படத்திற்காக அணுகியிருக்கிறார்கள். இப்போது பிஸி. பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார். அக்ஷய் குமாரோடு ஏற்பட்டுள்ள நெருக்கமும் பிஸியாக இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாம்!

## அறிய ஆவல்

மீனாவுக்கு ஒரு ராசி. தானாகவே வாய்ப்புகள் தேடி வந்து விழுகிறதாம். அதனால் சக நடிகைகள் எப்படி வாய்ப்புகள் தேடிக் கொள்கிறார்கள், அதிலுள்ள அனுபவங்கள் எப்படி என்று அறிய ஆவலாக இருக்கிறாராம். படப்பிடிப்புக்களுக்குச் சென்றால் சக நடிகைகளின் அனுபவங்களை அறிவதிலேயே மீனாவின் பொழுது போய்விடுகிறதாம்.

## ருசிபார்க்கும் வினிதா

தமிழ் நாட்டின் தலைநகரான சிங்காரச் சென்னையில் உள்ள பெரிய உணவு விடுதிகள் அனைத்திலும் ருசிபார்த்துவிட்டார் வினிதா. ஹோட்டல் சாப்பாடு என்றால் அவருக்கு அவ்வளவு பிரியம். ஹோட்டல் திறப்பு விழாக்களுக்கு அழைத்தால் மறுப்பு சொல்லாமல் ஆஜராகிவிடுகிறார். இதனால் பிரியாணி படத் திறப்பு விழாவுக்கெல்லாம் வினிதாவை அழைக்க வேண்டும் என்று அழைக்கத் தொடங்கி [illegible]

## கலர் சட்டை

'கருத்தம்மா' படத்தில் நடித்து நல்ல பெயர் [illegible] பெரியார்தாசன் [illegible] சட்டை அணிந்து முன்பெல்லாம் [illegible] கூட்டங்களுக்குப் [illegible] பிரகாரத்தில் [illegible] வண்ணங்களில் தான் தினமும் [illegible] விட்டார். பேராசிரியருக்கு [illegible] சட்டை [illegible] தோற்றம் கொடுத்துவிட்டதாகவும் [illegible]



தபு
படம்: காதல் தேசம்

# மினி சினி

* மலையாளப் படம் ஒன்றை இயக்கிக் கொண்டிருக்கும் சுரேஷ் கிருஷ்ணா, விரைவில் பிரபு கதாநாயகனாக நடிக்கும் தமிழ்ப்படம் ஒன்றை இயக்கவுள்ளார். சுரேஷ்கிருஷ்ணா ஏற்கனவே பிரபு நடித்த 'ராஜா கைய வச்சா' என்ற படத்தை இயக்கியுள்ளார்.

* 'தமிழச்சி' படத்தை தயாரித்த கே.பி.எஸ். இண்டர்நேஷனல் நிறுவனம் அடுத்து, 'திவ்யா' என்ற படத்தைத் தயாரிக்கிறது. இப்படத்தில் ரகுவரன் - சுகன்யா இணைந்து நடிக்கின்றனர்.

* தற்போது ஏழு படங்களில் பிஸியாக நடித்து வருகிறார் பாண்டியராஜன். அவற்றில் நாலு படங்களில் இரண்டு கதாநாயகிகள்.

* 'ரகசியப் போலீஸ்' படத்தின் மூலம் திரையுலகில் காலடி எடுத்து வைத்துள்ள முன்னாள் கவர்ச்சி நடிகை ஜோதிலட்சுமியின் மகள் ஜோதிமீனா, அந்தப்படம் வெளிவரு வதற்கு முன்னரே 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* மணிரத்தினத்திடம் உதவியாளராகப் பணியாற்றி வரும் பாரதிராஜாவின் மகன் மனோஜ், விரைவில் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். மனோஜ் நடிக்கும் படத்தை பாரதிராஜாவே இயக்குகிறார்.

* இந்தியில் இருந்து நக்மா, மனிஷா போன்றவர்கள் தமிழுக்கு வந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மலையால முன்னணி நடிகை ஒருவர் தமிழுக்கு வருகிறார். பெயர்-ஆனி.

* 'சின்னப்பறவைகள்' என்ற படத்தை இயக்கியுள்ள பி.கே.எஸ் மணிராஜ், இப்பொழுது 'கைரேகை' என்ற படத்தை இயக்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளார்.


* வி.சி.குகநாதன் இயக்கிவரும் 'மைனர் மோசஸ்' படத்தில் இசைவாணன் என்னும் புதியவர் இசையமைப்பாளராக அறிமுகமாகிறார். இந்தப் படத்தில் கவிஞர் மு.மேத்தா ஒரு பாடலை எழுதியுள்ளார்.

* தான் இயக்கும் படங்களில் முக்கிய வேடத்தில் நடிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர் விசு. ஆனால் விசு இப்போது இயக்கி வரும் 'மீண்டும் சாவித்திரி' படத்தில் நடிக்கவில்லை.

* கார்த்திக்-கனகா ஜோடியாக நடிக்கும் 'கட்டப்பஞ்சாயத்துக்காரன்' படத்தில் கனகாவுக்குத் தங்கைவேடத்தில், இரண்டாவது கதாநாயகியாக நடிக்கிறார் அனுஷா.

* பாரதிராஜாவின் உதவியாளர் ஜெயபிரகாஷ் தற்போது இயக்கி வரும் 'சாதிசனம்' படத்தில் ஒவியா என்னும் புதுமுகத்தைக் கதாநாயகியாக்கியுள்ளார்.

* 'கலியுகம்' படத்தில் வில்லனாக அறிமுகமாகி 'வால்டர் வெற்றிவேல்', 'நாட்டாமை' ஆகிய படங்களின் மூலம் பிரபலமான பொன்னம்பலம் இப்போது ரஜினியின் 'முத்து' படத்தில் வில்லனாக நடிக்கிறார்.



## முகப்பில்

மம்தா குல்கர்னி
பிரசாந்த்
படம்:-கிருஷ்ணா

## என்ன விசேஷம் மோகனா?

பாக்யராஜின் மோதிரக் கையால் குட்டுப்பட்டவர் மோகனா. 'வீட்ல விசேஷங்க' படத்தில் அறிமுகமான மோகனாவுக்கு பட வாய்ப்புக்களில் விசேஷம் இல்லை.

பொறுத்தார்-பொங்கி எழுந்தார். மலையாளத்தில் போய் கவர்ச்சி விசேஷம் காட்டினார். இப்போது மலையாளப் படவுலகில் மோகனா பிஸி. 'மோகனா விசேஷங்க' என்கிறார்களாம் மலையாளப் பட ரசிகர்கள்.

நடிகை.
அவரை மெல்ல மறந்து
தரிசனம் தந்துகொண்டுதான்
தரப்போகும் படமொன்றை விரைவில்
படத்தின் பெயர் 'விட்னஸ்'. ரகுவரனுக்கு
ஜோதமி.

## ...தியிலே தகராறு

கொண்டிருந்தபோது இடையிலே தகராறு செய்தாராம். ...சென்ற இடத்தில் இடை நடுவில் மூட்டை ...திரும்பிவிட்டாராம். பின்னர் ஒரு மாதிரியாக அழைத்துச் சென்றார்களாம். உள்ள வாய்ப்புக்களையும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அழகாகமாற செலவில்லாத யோசனை!



இதுவரையில் சொன்ன சின்ன சின்ன 'டிப்ஸ்'ஸை பயன்படுத்தி எல்லாரும் 'அழகி'யாயிட்டு வர்றீங்க இல்லையா?

ஆனாலும் எழுதின குறிப்புகளையே அதாவது, முகப்பரு போவதற்கு, சிகப்பாவதற்கு... இப்படி எழுதின விஷயத்தையே திரும்பத்...திரும்ப எழுதச் சொல்லி, வாசகீஸ் கேட்கின்றனர். ஆனால், இது மற்றவர்களுக்கு ஒரே 'ரம்பமா' இருக்குமே... அதனால...நம் வீட்ல கிடைக்கிற...சின்ன சின்ன பொருட்களை வைச்சிகிட்டு, எப்படி நாம அழகியாவதுன்னு பார்ப்போமா?

**கறிவேப்பிலை:** தினமும் உணவில் சேர்த்துக்கொண்டால் தலைமுடி வளரும். தேங்காய் எண்ணையில் கறிவேப்பிலையைக் காய்ச்சித் தினமும் தலைக்குத் தடவினால் முடி அடர்த்தியாக வளரும்.

**எலுமிச்சை:** முகம், முழுங்கைகள், கைவிரல் நகங்கள் ஆகியவற்றில் எலுமிச்சம் பழ ஜூஸைத் தடவினால் கருமை மறையும்.

**உருளைக்கிழங்கு:** இதனை மைய அரைத்து கண்களைச் சுற்றியுள்ள பகுதியில் தடவினால், கருவளையங்கள் மறையும்.

**தேன்:** தேனுடன் ஒரு துளி மஞ்சள் பொடியைக் குழைத்து முகத்தில் தடவினால், முகத்தில் உள்ள கருப்புப் புள்ளிகள், வடுக்கள் மறையும்.

**தயிர்:** தயிருடன் கடலை மாவு அல்லது பாசிப் பயறு மாவு சேர்த்துக் குளித்தால், சருமம் மிருதுவாக இருப்பதோடு முகச் சுருக்கங்கள் மறையும்.

**பால்:** பாலேட்டை முகம், கழுத்து ஆகிய பகுதிகளில் தடவிக் கொள்ளவும். பத்து நிமிடத்திற்குப் பின் பஞ்சினால் முகத்தை அழுத்தி துடைத்தால் அழுக்குகள் வெளியேறி விடும்.

என்னது... இந்த சி.சி., ஆசையைப் படிச்சிட்டு வீட்ல ஒரு சமையல் பொருளைக் கூட விட்டு வைப்பதில்லையா உங்கள் அருமை மகள்! என்ன விட்டுருங்கப்பா!

# நீ சிரித்தால் தீபாவளி

ஹலோ...

இந்த வாரம் பற்களைக் கொஞ்சம் கவனிப்போமா?

ஹீரா போன்று பளீர்..பளீச் பற்களை பார்த்ததும் ஆச...ஆசயா இருக்குல்ல..என்ன தான் அழுத்தி அழுத்தி பல்துலக்கினாலும்



இந்த நடிகைகளின் பற்கள் போன்ற வெண்மை நம் பற்களில் இல்லையே என்று நினைக்கத் தோன்றுகிறதுதானே.....

இனி கவலையை விடுங்கள்....!

பல்லழகுக்கு உடல் ஆரோக்கியம்தான் முதல் காரணம், எனவே, 'அழகு' பற்கள் வேண்டுமானால் உடல் ஆரோக்கியம் தேவை!

சும்மா எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருந்தால் பற்களில் அழுக்கு சேர்ந்து ஈறுகள் பாதிக்கப்பட்டு இடைவெளி விழுந்துவிடும். எனவே, முதலில் 'நொறுக்ஸ்' தின்பதை நிறுத்துங்கள்.

சிலர் பற்களை குச்சியால் குத்திக் கொண்டே இருப்பர். இதனால் பற்களின் இடையே இடைவெளி விழுந்து அடிக்கடி உணவுப் பொருட்கள் மாட்டிக்கொள்ள ஆரம்பிக்கும்.

எனவே இத்தகைய பழக்கத்யையும் விட்டுவிடுங்க.

**பற்கள் பளிச்சிட...**

- ⋆ தினமும் டூத் பேஸ்ட்டுடன் சாப்பாட்டு உப்பைத் தொட்டு பற்களை சுத்தம் செய்யலாம்.
- ⋆ வாரம் ஒருமுறை எலுமிச்சைசாறு பிழிந்து, அதில் உப்பு போட்டு, இக்கலவையை பிரஷ்ஷால் தொட்டு தேய்த்து சுத்தம் செய்தால் பற்கள் 'பளிச்'...
- ⋆ அப்படியும் உங்கள் பற்கள் மஞ்சள் நிறமாகவே காட்சிதருகிறதா..... நல்ல டார்க்கலர் லிப்ஸ்டிக்... அதாங்க ரெட் அல்லது ஒரேஞ்சு கலர் லிப்ஸ்டிக்கை சொட்ட.... சொட்ட.... லிப்ஸ்சில் தீட்டிக்கிங்க..இப்போ கண்ணாடி முன்னின்று ஒரு சிரிப்பு சிரிங்க..!

ஆ..என்ன ஒரு 'பளிச்' என்று உங்கள் கண்களையே நம்ப முடியவில்லையா?

# நக நயம்



அழகாக நகம் வளர்த்து பொலிஷ் போட்டிருப்பவர்களைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறதா? கவலைப்படாதீர்கள். விரல் நகங்களை எப்படி அழகாக, ஆரோக்கியமாகப் பாதுகாப்பது என்று பார்ப்போமா?

**நகம் செழித்து வளர...**

பாலைக் கொதிக்க வைத்து இறக்கி, பொறுக்கும் சூடாக இருக்கும் போது, நகங்கள் அதில் படுமாறு நனைத்து, பிறகு சுத்தமான பஞ்சைக் கொண்டு சுத்தம் செய்யுங்கள்.

**நகங்கள் பிரகாசமாக இருக்க.**

விரல் நகங்களில் பாதாம் எண்ணையைப் பூசி அரைமணி நேரத்திற்குப் பிறகு, கடலை மாவைக் கொண்டு நகங்களைச் சுத்தம் செய்தால் நகங்கள் பிரகாசமாக இருக்கும்.

நீண்ட விரல்களைப் பெற்றவர்கள் நகங்களை நீள் வட்டமாக வெட்டுவது நல்லது. குட்டையான விரல்களை உடையவர்கள் கொஞ்சம் நீளமாக வளர்த்து ஷேப் பண்ணினால் விரல்கள் அழகாகத் தெரியும்.

எந்த வண்ணத்தில் நகத்திற்கு பொலிஷ் போட வேண்டும் தெரியுமா?

- ⋆ சிவந்த நிறமுடையவர்கள் கருமையான வண்ணங்களைப் போடலாம்.
- ⋆ கறுப்பழகிகள், மெல்லிய நிறத்தில் நகப் பொலிஷ் போட வேண்டும்.
- ⋆ பொதுவாக மெல்லிய நிற பொலிஷ்களை யார் வேண்டுமானாலும் போடலாம்.
- ⋆ விசேஷ தினங்களில் கருமையான நிறங்களில் நகப்பொலிஷ் போடுவது நல்லது.
- ⋆ வீட்டிலிருக்கும் சமயங்களில் நகப் பொலிஷ் போடாமல் இயற்கை நகங்களுடன் இருப்பது நல்லது.

உங்கள் நகங்களின் அழகைப்பார்த்து உங்கள் அம்மா, உங்களைப் பாத்திரம் கழுவச் சொல்வதில்லையா?

# இது-ஆண்கள் சமாச்சாரம்

என்ன இந்த வாரமும் ஆண்களுக்குத் தானா எனக்கண்ணைக் கசக்கும் வாசகிகளே...ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள். அவர்களையும் ஆணழகர்களாக்கி, அழகிகளாகியுள்ள உங்களுக்குப் பொருத்தமாக மாற்ற வேண்டாமா?

ஓ.கே.வாசகர்களே..ரெடியா? எப்படி அழகாக மற்றவர்களைக் கவரும் விதத்தில் ஆடைகளை அணிவது என்று பார்ப்போமா?

முதலில் உங்கள் நிறத்திற்கு ஏற்ற வண்ணம் எதுவென்று கண்டுபிடித்து ஆடைகளைத் தெரிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு அந்த நிறம் அழகாக இருக்குமென்று நினைத்து, அவர்கள் நிறத்தை மறந்து விட்டு, அதே நிறத்தில் ஆடைகளை அணிந்து நின்றால், பார்க்கிறவர்கள், கண்ணைப் பறிக்கிறது என்று முகத்தைத் திருப்பிக் கொள்வார்கள்.

**கறுப்பானவர்கள்.**

வெள்ளை உடையைத் தவிர வேறு எதையும் அணியக்கூடாது. வேட்டி அணிபவராக இருந்தால் கரை கூட அதே நிறத்தில் இருக்க வேண்டும். கைக்குட்டை கூட வெள்ளையாக இருந்தால் நல்லது.

**மாநிறமாய் இருப்பவர்கள்**

இவர்கள் மெல்லிய நீலம், மெல்லிய பச்சை, மெல்லிய மஞ்சள் நிற உடைகளை அணிய வேண்டும். மாலை, இரவு விருந்தானால், கிறீம் கலர் உடைகளை அணிய வேண்டும். அப்போதுதான் பார்ப்பதற்கு 'பளிச்' என்று அழகாக இருக்கும்.

**சிவப்பாய் இருப்பவர்கள்**

கரும் சிவப்பு, கரும் ஒரேஞ்ச், கரும் ரோஸ், கரும் மஞ்சள், கரும் நீலம் போன்ற



கருமையான உடைகளை அணியலாம். இரவு நேர விருந்துகளில் கலந்து கொள்ளச் செல்வதானால் மஞ்சள் நிறம் நல்லது.

**பொதுவான டிப்ஸ்**

பொதுவாக ஆண்கள் ஒரே நிற உடைகளை அணிவது பிறரை கவரச் செய்யும். உதாரணமாக வெள்ளை ஜீன்ஸ், நீல நிற புஷ்சேட், வெள்ளை ஜீன்ஸ்-ஒரேஞ்ச் புஷ்சேட், வேட்டி-மஞ்சள் நிற பட்டுச் சட்டையும் அணியலாம்.

அதிக பளபளா துணிகளை எடுத்து, மற்றவர் கண்களுக்குக் கஷ்டத்தைக் கொடுத்து விடாதீர்கள்.

இப்போதெல்லாம்,ஸ்டைலு ஸ்டைலுதான் சூப்பர் ஸ்டைலுதான் இந்த ஸ்டைலுக்கேற்ற மயிலு தானுதான்னு உங்களைப் பார்த்து யாராவது பாடுகிறார்களா?

# சத்தம் கேட்காத அழகி

இந்தியாவில் அழகிப் போட்டிகள் நடப்பது தெரிந்த சமாச்சாரம்தான்.



நீத்து தீட்சித்

இந்தியாவில் நடக்கும் மற்றொரு அழகிப்போட்டி தொடர்பாக நீங்கள் அதிகம் அறிந்திருக்க மாட்டீர்கள்.

அதுவும் வழக்கமான அழகிப்போட்டிகள் மாதிரிதான். ஒவ்வொரு அழகியும் ஒவ்வொரு விதமான அழகு.

இறுதியாக நடுவர்கள் ஒரு முத்தை தெரிவு செய்தார்கள்.

நீத்து தீட்சித். வயது 19. 5 அடி 4 அங்குலம் உயரம். அவர்தான் அழகியாக முடி சூட்டப்பட்டார்.

கரகோஷம் அரங்கை அதிரவைத்தது. அழகிக்கு மட்டும் கரகோஷம் காதில் விழவில்லை. ஏன்? அவருக்குத்தான் காது கேளாதே!

காது கேளாத அழகிகளுக்காக நடத்தப்படும் அழகிப் போட்டிதான் அது.

அழகை அமோகமாக கொடுத்துவிட்டு செவியில் மட்டும் ஒரு குறையை வைத்துப் படைத்தவனை பார்வையாளர்கள் மனதுக்குள் திட்டியிருப்பார்கள்தானே.

# வரம்பு

இனிப்பான வாழ்க்கையையும் வரம் போடுதான் அனுபவிக்க வேண்டும். இனிப்பான கரும்பில்கூட கணுக்கள் இருப்பது ஏன் என்கிறீர்கள். வரம்போடு சுவைக்கத்தான்.

# தற்காப்பு

தற்காப்பு உணர்வு மிக நல்லது. சைக்கிளில் செல்லும் போதும் கண்ணாடி அணிவதும் ஒரு தற்காப்புத்தான். பூச்சிகள் தூசிகள் கண்களில் விழாது அல்லவா.

பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 21

மகளிர் மட்டும்
–பரிசுப் போட்டி–

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

# புதிய பகுதி கருத்தரங்கம்

இனி-வாரா வாரம் கருத்தரங்கம் இடம்பெறும். சிறந்த சிந்தனையாளர்கள்-கவிஞர்கள்-கலைஞர்கள் கருத்தரங்கில் தோன்றுவார்கள். என்ன சந்தோசம்தானே? இன்று கவிஞர் தாகூர் வருகிறார். மறைந்தும் புகழ் மறையாத அமரகவி. இந்தியாவின் சிறப்புக்களில் ஒன்று கூறுக? கவிஞர் தாகூர் என்று விடையளிக்கலாம். எத்தனை அற்புதமான கவிஞர். மரணம் பற்றி தாகூர் எழுதியதில் இருந்து...

## மரணம்

மரணம் உன் வாழ்வின் கதவைத் தட்டும் அந்த நாளில் நீ அதற்கு என்ன நல்குவாய்?

ஆ! என் விருந்தாளியாக வந்த மரணத்திற்கு முன் என் வாழ்வு என்னும் நிறை குடத்தையே வைத்துவிடுவேன்; வந்த விருந்தாளி வெறுங்கையுடன் திரும்பிப் போக விடமாட்டேன்.

ஓ...மரணமே...!, வாழ்வின் இறுதிப் பேறே வருக. வந்து என் செவியருகே மெல்லச் சொல்லுக.

உன்னை எதிர்பார்த்து ஒவ்வொரு நாளும் நான் காத்து வந்தேன்; ஏன் எனில், உன் பொருட்டாகவே நான் வாழ்வின் இன்ப துன்பங்களைப் பொறுத்து வந்தேன்.

நான் விடைபெற்றுக் கொண்டேன். என் சகோதரர்களே, விடை கொடுங்கள். எல்லோருக்கும் வணக்கம் செலுத்தி விடைபெற்றுப் புறப்படுகிறேன்.

இதோ என் இல்லத்தின் சாவிகளை எல்லாம் திரும்பக் கொடுத்து விடுகிறேன். என் வீடு பற்றிய உரிமைகளையெல்லாம் விட்டு விடுகிறேன்.

உங்களிடமிருந்து இறுதியான அன்பு மொழிகளே வேண்டுமென்று கேட்கின்றேன்.

நாம் நெடுங்காலம் அடுத்து வாழ்வோராக இருந்தோம். ஆனால் நான் கொடுக்கக் கூடியதைவிட மிகுதியாகப் பெற்றுக்கொண்டேன்.

இப்போதோ பொழுது விடிந்துவிட்டது. என் இருண்ட வீட்டை ஒளிபெறச் செய்திருந்த விளக்கோ அணைந்துவிட்டது; புறப்பட ஆணை பிறந்துவிட்டது. யானும் பயணத்திற்கு ஆயத்தமாக இருக்கின்றேன்.

.....யான் இங்கு கண்டது ஒப்புயர்வற்ற மிகச் சிறந்த காட்சி; யான் இங்கிருந்து



செல்லும்போது இது என் பிரிவு மொழியாக இருக்கக்கூடும்.

பேரொளிக் கடலில் மலரும் இந்தத் தாமரையில் பொதிந்துள்ள தேனை யான் நுகர்ந்தேன். ஆகவே பேறு பெற்றேன். இது என் பிரிவு மொழியாக இருக்கட்டும்.

கணக்கற்ற உருவங்கள் நிரம்பிய இந்த ஆடலரங்கில் என் ஆடலை ஆடி முடித்தேன்; உருவம் ஒன்றும் அற்ற ஒருவனையும் நான் கண்டுவிட்டேன்.

உற்று உணர முடியாத அவனுடைய உணர்த்துததால் என் உடம்பு முழுவதும் எல்லா உறுப்புக்களும் இன்ப உணர்வு பெற்றுவிட்டன.

இங்கு முடிவு எய்துமானால் அது எய்துவதாக. இது என் பிரிவு மொழியாக இருக்கட்டும்!

(நன்றி–கீதாஞ்சலி)

# சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

## உருளைக் கிழங்கு கேக்

**தேவையான பொருட்கள்:**

உருளைக்கிழங்கு -4 பெரியது
சோள மாவு (கோன் ஃபிளவர்) -2 மேசைக்கரண்டி
உப்பு - தேவையான அளவு
தேங்காய் துருவல் -1/2 கப்
கச்சான் ( தூளாக்கியது) - 2 மேசைக்கரண்டி
சீனி -1/2 தேக்கரண்டி
எலுமிச்சம்பழச்சாறு - 1/2 தேக்கரண்டி
மிளகுத்தூள் -1/2 தேக்கரண்டி
எண்ணெய் - தேவையான அளவு.

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேக வைத்து தோலுரித்துக் கொள்ளவும். இத்துடன் உப்பு, சோளமாவு சேர்த்து நன்கு பிசைந்து சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, கிண்ணம் போல் செய்து வைத்துக்கொள்ளவும். பிறகு தேங்காய்த் துருவல், கச்சான் தூள், சீனி, உப்பு, எலுமிச்சம் பழச்சாறு, மிளகுத்தூள் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து பூர்ணம் போல் செய்து கொள்ளவும். இந்த பூர்ணத்தை ஏற்கெனவே பிசைந்து வைத்துள்ள உருளைக் கிழங்கு உருண்டைக்குள் வைத்து மூடி, உங்களுக்கு விருப்பமான வடிவத்தில் செய்து கொள்ளவும். (பூர்ண கொழுக்கட்டை செய்வது போல்.) இப்போது, வாணலியில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைக்கவும். எண்ணெய் கொதித்ததும், பூர்ணம் அடைத்த உருளைக் கிழங்கு உருண்டைகளை எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுக்கவும்.

இதைச் சுடச்சுட, தக்காளி சோஸுடன் சாப்பிட சுவையாக இருக்கும்.

# கைமேல் பலன்

சில குழந்தைகளுக்கு எப்போ பார்த்தாலும் சொறி, சிரங்கு, கரப்பான் இப்படி எதாவது வந்து கொண்டேயிருக்கும். அதற்கு வீட்டிலேயே வைத்தியம் செய்யலாம்.

மஞ்சளுடன் வேப்பிலையை வைத்து அரைத்து பூசி வந்தால் கைமேல் பலன் அல்லது உடல் மேல் பலன் காணலாம்.




## இன்றைய வானிலை

அடுத்ததாக.....
இன்றைய வானிலை
நாட்டின் வடதிசையில்
மையம் கொண்டுள்ள
போர்ச் சூறாவளி
கிழக்குத் திசை நோக்கி
நகரத் தொடங்கியுள்ளது
▫▫
கிழக்கின் சில பகுதிகளில்
இன்று வானம்
வேட்டும் வெளிச்சமுமாகக்
காணப்படும்
▫▫
நாட்டின் வடக்கு
மற்றும் கிழக்கு
ஆகிய பகுதிகளில்
ஆங்காங்கே சில
இடங்களில் மட்டும்
லேசான...
இடியுடன் கூடிய
ஷெல் வீழ்ச்சு இடம்பெறும்.
▫▫
நாட்டின் ஏனைய
கரையோர மலைநாட்டுப்
பிரதேசங்களில் பரவலாக
வதந்திக் காற்று
பலமாக வீசும்.
இத்தோடு இன்றைய
செய்திகள் முடிவடைந்தன.
வணக்கம்.

நீர்கொழும்பு-நிலா ஸ்நேகி.

## விலையேற்றம்

நேற்று முன்தினத்தில்
நியாயமாய் விலைகூறி
நிறுத்துத் தந்த பொருள்
ஓரிருநாள் கடந்தவுடன்
ஒளித்தொழித்து
வெளிவந்தது-
ஒரு ரூபாய் ஏற்றத்துடன்....
'ஒல்செல்' வியாபாரி
அரசியலைச் சாடுகிறார்....
ஓட்டுக்கடை 'ஹாமினே'
வடக்குப் பிரச்சனை
வரத்து இல்லை என்கின்றார்....
பெட்டிக்கடை வியாபாரி
பெரிசாய்ப் புழுகினாரே
இறக்குமதி இல்லையென்று...
பொருள் வேண்டும்- அவசியம்
என்பதற்காய் - நாம்
பொழுதெல்லாம் உழைத்த பணம்
பொய் மூட்டை
பேர்வளிபேர் சொல்லி
பிரிந்து போவதை தான்
தினமும் காண்கிறோமே!

லோரி செல்வா.

## ஓலம்

தேசத்திலிருந்து அமைதி
மறைந்து விட்டது;
யுத்த வீரனை விட்டகலும்
காருண்யம் போல....
▫▫
எங்கும் குருதிப்பேராறு
குருஷேத்திர மண்போல
சந்தோஷித்திருந்த தேசம்
துக்கித்துப் புலம்புகிறது
இழவு வீடு போல....
▫▫
பார்க்குமிடமெல்லாம்
துப்பாக்கியின் ரெட்டைக்குழல்கள்
வெள்ளாட்டுக்கு காத்திருக்கும்
ஓநாயின் விழிகள் போல.....
▫▫
இதோ....
அந்த இரும்புக் குழல்கள்
சமூகச் சமுத்திரத் துளிகளின்
சாரத்தை உறிஞ்சிவிட,
சக்கைகள் மட்டும்
நிர்வாணமாய்....,
அருவருப்பாய்...,
நடுத்தெரு வாசல்களில்
நாய்களாகவும்
பேய்களாகவும்
சதிராடப்படுகிறது,
▫▫
நீதியும் தருமமும்
நிலைதடுமாறி...
விதியில் குப்புறக் கிடக்கிறது,
இலக்குத் தெரியாத இருளில்
ஜீவிதம் நசுங்கிப் போய்....
உணர்வுகள்
விறைத்து விட்டன
கண்ணீரூற்று
வற்றிவிட்டது.

ஆத்மராஜா நூத்சந்திரிக்கா-
கோட்டைக்கல்லாறு.

## இளைப்பாறும் கவிதைகள்

முட்கள்
நெஞ்சக்குள்;
குற்றுவாள் இறங்கி
இதயம் பிளந்திற்று
அவள் பார்த்தாள் என்னை.

மாதுளம் சுளையாய்
பற்களின் வரிசையில்
என் கவிதைகள் நடந்து
இளைப் பாறிக் கொள்ளும்.

விழிகளில் கிடக்கும்
மின்சார அதிர்வில்
தேகம் எரிந்து
பின்-கனவுகளும் பொசுங்கிற்று.


நீண்டபிரிவின்
நெருப்புக் கொடுமையில்
அவள் கையெழுத்து மட்டும்
அடிக்கடி பேசும்.

'ஆட்டோகிரா'பில்
முத்தமிடுகையில்
அவள் தடித்த எழுத்துக்கள்
என்னை தள்ளி நகைக்கும்.

இரவுகளில் ஒலிக்கும்
செருமல் ஒலியும்
தெம்மாங்கு பாடி
தூங்கவைக்கும் என்னை.

இன்று-
தூரத்தில் இருந்து
துடிக்கும் எனக்கு
அவள் நினைவுகள் ஒன்றே
கைக் குழந்தையாயிற்று.

கன்ஸியா





## இளங்குமரி

"வான வெளித்திடலில்-
கண்சிமிட்டும் மின்னல் ராணி!!
காதின் பாசறைக்குள்-
சுருதியோடு இடிமுழக்கம்!!
மேகமழைத் தேவியர்கள்-
பூமியிடம் ஆடிவரும் நர்த்தனங்கள்!!
▫▫
தூறல் மழை "இடை"யினிலே-
கதிரவன் கரம்பட்டு பேரின்ப வர்ணங்கள்!!
மண் மணமகள் மேல்
துளித் துளியாய் விழுந்தணைக்கும் வெண்மணிகள்!!
▫▫
நில மங்கை மடியினிலே
புதைத்து வைத்த உயிர் விதைகள்-
குளிர்பெற்று, சுகம் பெற்று, மொட்டவிழ்ந்து-
முளைத் தவைகள் தான் ஜனனம்!!
▫▫
தென்றல் மிதந்து வந்து
சுகசேதி கேட்டு நிற்கும்
வசந்த முத்தம் தினம் கொடுக்கும்!!
▫▫
இளங்குமராய், இளந்தளிர்கள்-
நாணமுடன் தலையசைக்கும்!!
இயற்கையவள் இளையகன்னி-
வடிவழகைக் காண்பதற்கு-
காணக் கண்கோடி வேண்டும்!!

வ.வதனகோபாலன்-நோர்வே

## "மீண்டும் ஒரு வசந்தகாலம்"

உன்
உடம்பு
எட்ட முடியாத
தூரத்தில்
இருக்கின்றது....
எனது
உயிர்
அதன் சுவாசத்தில்
ஒட்சிஷனாயிருக்கின்றது!

உன்னை
தழுவிய பின்னர்
தான்
பூக்கள்
மென்மையற்றவை
என்பதை
தெரிந்து கொண்டேன்!

உனக்கு
எழுத நினைக்கும்
போதெல்லாம்
என் பேனா
எனக்கு முன்னே
மேசையில்
காத்திருக்கின்றது!

உன்
அன்பின் அரவணைப்பில்
கைதியாகி
என் வாழ்நாட்களின்
கடைசி
மூச்சையும்
சுவாசிக்கவேண்டும்.

"ஹெந்தளை நவா"

## இது போர்க்காலம்

காதல் புரவி
கால் இடறியது.
நெஞ்சில் போர் மூண்டது.

எண்ணத்தில்
இரத்தக் கசிவுகள்
விழி வேல்கள்
வேதனையில் குத்தியதால்
கூர் இழந்தது
கண் மை
கண்ணீரில் கழுவப்பட்டது.

ஆசை வெட்டி வீழ்த்தப்பட்டதால்
அரை உயிரில் துடிக்கின்றது
எத்தனை படை முன் வரினும்
நினைவுப் படை வேகம் கொண்டு
முன்னேறியது.

காதல் களத்தில்
நேச நினைவுகளின்
உடல்களில்
தலைகள் துண்டிக்கப்பட்டதால்
முண்டமாயின.

பேச்சு மூச்சையற்றதால்
காற்றும் சூடாகியது.

பாவம்-
முறம் கொண்டு
புலி விரட்டிய
வீரப் பெண் மரபில் -இவள்
காதல் விலங்கில்
கால்கள் மாட்டியதால்
கலங்குகின்றாள்

ஜெயந்தி ஜெய்சங்கர்
கொழும்பு-13

## ★நட்சத்திரம்★





வான தேவனும்
பூமி தேவியும்
காணப்போகும்
முதலிரவு மஞ்சத்தில்
தூவப்பட்ட
மல்லிகை பூக்கள்.

## குழந்தை

அம்மா அப்பா
செய்யும் தப்புக்காய்
பத்து மாத
சிறை தண்டனை

நேபட தவமணி-குலைத்.







## இந்த வாரம் உங்கள் பலன்

(16.07.95 முதல் 22.07.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரியத்தடை, மனக்கவலை. | காலை 6 மணி |
| திங்கள்- | வீண் குறைகேட்டல், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, வாக்கு வசீகரம். | காலை 7 மணி |
| புதன்- | பயனற்ற செயல், காரியக் கேடு. | காலை 6 மணி |
| வியாழன்- | இனசன மகிழ்ச்சி, பணவிரயம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | துன்ப நிலைமாறும், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், பணவிரயம். | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| புதன்- | இனசன மகிழ்ச்சி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 6 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், தேகசுக நன்மை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, செய் தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- | புதிய முயற்சி, பணச் செலவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | காலை 6 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, காரியானுகூலம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | துன்பமதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | இனசன விரோதம், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | காரிய் சித்தி, பணவரவு. | காலை 9 மணி |
| வெள்ளி- | பயனுள்ள செயல், செல்வாக்கு மேன்மை. | காலை 6 மணி |
| சனி- | துயர் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, காரிய சித்தி. | காலை 9 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பநிலை மாறும், மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள் புதன், அதிஷ்ட இலக்கம்-5

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன், வெள்ளி |
| கன்னி | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்-கும்பம், மீனம், மேடம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் விரயம், அந்நியர் நட்பு | காலை 7 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி. | காலை 8 மணி |
| புதன்- | மனக்கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், கௌரவம். | காலை 9 மணி |
| வெள்ளி- | துயர் அதிகம், செலவு மிகுதி. | மு.ப. 10 மணி |
| சனி- | வீண்குறை நீங்கும், எதிர்பார்த்த நன்மை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 6 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பணச் செலவு, கௌரவக் கேடு. | காலை 9 மணி |
| புதன்- | துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | காலை 9 மணி |
| வெள்ளி- | காரிய சித்தி, பொருள் வரவு. | மு.ப. 10 மணி |
| சனி- | துன்பநிலை மாறும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -8

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | துன்ப நிலை மாறும், மனமகிழ்ச்சி. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, உத்தியோக மேன்மை. | காலை 7 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| வியாழன்- | காரியக் கேடு, வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| வெள்ளி- | துன்பநிலை மாறும், பெரியோர் உதவி. | பி.ப. 1 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| புதன்- | இனசன மகிழ்ச்சி, துன்பநிலை மாறும். | பகல் 11 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பணச் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | காரியத்தடை, மனக்கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், எதிர்பார்த்த நன்மை. | காலை 9 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | துன்பம் நீங்கும், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வியாழன்- | பயனுள்ள செயல், பெரியோர் உதவி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- | புதிய முயற்சி, பணச்செலவு. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட்ட இலக்கம்-2

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துன்ப நிலை மாறும், செலவு மகுதி. | காலை 9 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணவிரயம். | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், ஏமாற்றம். | பகல் 11 மணி |
| சனி- | பெரியோர் உதவி, மனமகிழ்வு. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி அதிஷ்ட இலக்கம்- 6


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 11 மணி |
| திங்கள்- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | வெளியிட வாழ்க்கை, இனசன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 10 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை 8 மணி |
| சனி- | துக்க நிகழ்ச்சி, செலவு மிகுதி. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3





## பாரதியும் சாரதியும்

பாரதி; பாரதி; பாரதி
பாட்டுத் திறனால் அவரே நமது
சாரதி; சாரதி; சாரதி!

ஆசை; ஆசை; ஆசை
ஆசை தீர வாங்கியுண்டேன்
தோசை; தோசை; தோசை!

அப்பன்; அப்பன்; அப்பன்
அப்பன்போல தப்பாமலிருந்தான்
சுப்பன்; சுப்பன்; சுப்பன்!

மாலை; மாலை; மாலை
மாலை நேரம் மகிழ்ச்சியான
வேளை; வேளை; வேளை!

சினம்; சினம்; சினம்
சினம் ஆற்றி நிறைகாண்பதே-
குணம்; குணம்; குணம்!

கடை; கடை; கடை
கடைக்குச் சென்று வாங்கிவந்தேன்
குடை; குடை; குடை!

செல்வி. திரின்சிபாயா முகமட்-ஏறாவூர்.

அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்;
மிச்சத்தை பின் சொல்வேன், சினத்தை முன்னே
வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை;

சுப்பிரமணிய பாரதியார்

## பாப்பா முரசு சிறு கதை

# வாயை அடக்கு



ராஜா மார்த்தாண்டனின் அரண் மனையில் விதூஷகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் நகைமுகன். சிரிக்க சிரிக்கப் பேசுவதில் கெட்டிக்காரன். அத்தோடு மற்றவர்களைச் சிரிக்க வைப்பதிலும் வல்லவன். அதனால் ராஜா மார்த்தாண்டன் அவனிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்.

ஆனால் நகைமுகனுக்கு வாய் சும்மா இருக்காது. எதையாவது சொல்லிக் கொண்டே இருப்பான். அவனுக்குத் தேவையில்லாததைக்கூடப் பேசுவான். அதனால் அரசவையினர் "வாயை அடக்கு.! அளவோடு பேசு! அவசியத்தோடு பேசு!" என்றெல்லாம் புத்திமதிகள் சொல்லுவார்கள். அது, அவனுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று.

ஒரு நாள் நகைமுகன் ஆற்றோரமாகச் சென்று கொண்டிருந்தான். அந்த ஆற்றுக்குப் பக்கத்தில் இறந்தவர்களை எரிக்கும் மயானம் ஒன்று இருந்தது.

அவன் போய்க்கொண்டிருந்தபோது மயானத்தில் ஒரு மண்டை ஓடு வாய் பிளந்தபடி இருந்தது. அதைப் பார்த்த நகைமுகன் அதன் அருகில் சென்று,

"மண்டை ஓடே இந்த இடத்திற்கு எப்படி வந்தாய்?" என்று கேட்டான். ஒரு கணம் கூடத்தாமதிக்காமல் அந்த மண்டை ஓடு,

"வாயை அடக்காததால் வந்தேன்" என்று சொல்லி விட்டுத் தன் வாயை மூடிக் கொண்டது.

மண்டை ஓடு தன் கேள்விக்கு இப்படி பதில் சொல்லும் என்று நகைமுகன் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. அது பதில் சொன்னது அவனுக்கு ஆச்சரியத்தை அளித்தது. மீண்டும் அதே கேள்வியை மண்டை ஓட்டிடம் கேட்டான் அவன். அதுவும் முன்புசொன்ன பதிலையே சொல்லிற்று. மண்டை ஓடு பேசுவது என்பது சாதாரண விஷயமா என்ன? ஆச்சரியமானது. இவ்விஷயத்தை அரசரிடம் சொல்லி, அவர் பாராட்டைப் பெற வேண்டும் என எண்ணினான் நகைமுகன். உடனே அரண்மனையை நோக்கி ஓடினான்.

இவன் போன சமயம் ராஜா மார்த்தாண்டன் வேறு சில முக்கிய வேலைகளில் ஈடுபட்டிருந்தார். அதனால் அவரைப் பார்க்க மிகவும் கஷ்டமாக இருந்தது. எப்படியோ வாயிற்காவலனிடம் அனுமதி பெற்று அரசனிடம் சென்று விட்டான் நகைமுகன். அரசனிடம், தன்னோடு மண்டை ஓடு பேசிய விஷயத்தைச் சொல்லி, அவரை மயானத்திற்கு வரச்சொல்லிப் பலவந்தமாக அழைத்தான் நகைமுகன்.

"மண்டை ஓடாவது, பேசுவதாவது..? நீ சொல்வது பைத்தியக்காரத்தனமாக இருக்கிறது. என் நேரத்தை வீணாக்காதே...போ இங்கிருந்து" என்றார் ராஜா மார்த்தாண்டன்.

ராஜா கண்டிப்பாக வந்து, பேசும் மண்டை ஓட்டைக் காண வேண்டுமென்று மீண்டும் மீண்டும் வற்புறுத்தினான் நகைமுகன். அரச வையோர் 'வாயை அடக்கு' என்று நகைமுகனுக்கு சைகையால் சொன்னார்கள். அதை அவன் அலட்சியம் செய்து விட்டு, ராஜா மார்த்தாண்டனை வற்புறுத்தினான்.

அதனால் கோபங் கொண்ட அரசன்,

"வருகிறேன். அங்கே மண்டை ஓடு பேசினால் உனக்குப் பரிசும், பாராட்டும் கிடைக்கும். மண்டை ஓடு பேசாவிட்டால், உன் தலையை அங்கேயே வெட்டி விடுவேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார். கூட மந்திரி பிரதானிகள் எல்லாரும் அரசனோடு புறப்பட்டனர்.

அங்கே மண்டை ஓடு வாய் பிளந்தபடி கிடந்தது. மண்டை ஓட்டைப் பார்த்து நகைமுகன்,

"மண்டை ஓடே, மண்டை ஓடே இங்கே எப்படி வந்தாய்?" என்று கேட்டான்.

மண்டை ஓடு பேசாமல் மௌனமாக இருந்தது. மீண்டும் மீண்டும் அதனிடம் அதே கேள்வியைக் கேட்டான். அது பதிலே சொல்லவில்லை. அழாத குறையாகக் கூட மண்டை ஓட்டிடம் கேட்டான் நகைமுகன். அது மௌனம் சாதித்ததே தவிர பதிலே சொல்லவில்லை.

அரசன் உத்தரவுப்படி நகைமுகனின் தலை அந்த இடத்திலேயே வெட்டப்பட்டது.


அரசன் உட்பட எல்லோரும் சென்ற பின்னர் மண்டை ஓடு வெட்டப்பட்ட நகைமுகனின் தலையைப் பார்த்து "நீ எப்படி இங்கே வந்தாய்?" என்று கேட்டது.

"வாயை அடக்காததால்.." என்று பரிதாபமாகச் சொன்னது நகைமுகனின் வெட்டப்பட்ட தலை.

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:

பாப்பா முரசு
தினமுரசு
வாரமலர்
த.பெ.இல.
1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 22.07.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 99
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 96

பரிசுக்குரியவர்:
வடிவேல் சசீதரன்
மட்/கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம், கிண்ணையடி.


பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| செல்வன். த.சுதாகர்<br>பலாபத்வெல த.வி.மாத்தளை. | எம்.டபிள்யு.எம்.நபாஸ்<br>முஸ்லிம் வித்தியாலயம்,<br>துல்ஹிரிய. |
| இ.அரவிந்தன்<br>விவேகானந்தா வித்தியாலயம், அக்கரைப்பற்று-08. | கே.கிரிஸ்டி குமார்<br>நாவலப்பிடிய. |
| சந்திரசேகரம் சத்தியராஜ்<br>இ.கி.ச.இந்துக்கல்லூரி<br>திருகோணமலை. | செல்வி. எஸ்.அபிராமி<br>ராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-04. |
| கனிஷ்கா<br>புனித அன்னம்மாள் பாடசாலை<br>கொழும்பு-13 | கிஷோக்குமார்<br>பசுமலை கூட்டுறவு பாடசாலை, அக்கரப்பத்தனை. |
| எஸ்.அஸ்மர்<br>கொழும்பு-06. | |

## அறிவோம் மனதில் பதிவோம்



கனடாவில் அல்பேர்டா என்ற இடத்திலுள்ள விலங்குகள் சரணாலயம்தான் உலகிலேயே மிகவும் பெரியது. இதன் பரப்பளவு 45 ஆயிரம் சதுர கிலோ மீற்றர்.



அமெரிக்காவில் ஒஹையோ மாநிலத்தில் 1992 ஆம் ஆண்டு மைக்கேல் லியோனெட்டி என்பவர் ஏழு கால் தவளை ஒன்றைப் பிடித்தார்.

## சின்னத் தகவல்



எழுத்தாளர்களுக்கு பல புனைப் பெயர்கள் உண்டு. உலகிலேயே அதிக புனைப் பெயர்களை வைத்துக்கொண்டு எழுதிக் குமித்த எழுத்தாளர் யார் தெரியுமா?

அமெரிக்காவைச் சேர்ந்த 'வாரன் பெய்ன்' என்பவர்தான். மொத்தம் 75 புனைப் பெயர்களில் நாவல்களை எழுதியுள்ளார்.

திருமலை சுந்தரப்ரியா



## குடைப்பறவை

மத்திய, தென் அமெரிக்க பகுதிகளில் குடைப்பறவை என்ற ஒரு வகைப் பறவைகள் உள்ளன. இவற்றிற்குத் தலையில் குடைபோன்ற அமைப்பு இருக்கும். ஆண் பறவைகளுக்கு இவை பெரியதாகவும், பெண் பறவைகளுக்குச் சிறியதாகவும் இருக்கும்.

கழுத்திலிருந்து தாடிபோன்ற மெல்லிய சதைப்பகுதி நீண்டிருக்கும். இவற்றால் எவ்வித பயனும் இல்லை. மற்றப் பறவைகளிலிருந்து இவை வேறுபட்டுத் தெரிவதற்கும், அழகிற்காகவும் இவை அமைந்துள்ளன. உருவத்தில் இப் பறவைகள் காகத்தின் அளவை ஒத்திருக்கும்.

## வாரம் ஒரு நாடு

# செக் குடியரசு




**தலைநகர்:** பராகுவே.
**பரப்பளவு:** 78,864 சதுர கிலோ மீற்றர்.
**எழுத்தறிவு:** 99%
**சமயம்:** கிறிஸ்தவம்
**மொழி:** செக்
**நாணயம்:** செக் கிரவுண்
**தனிநபர் வருமானம்:** 7,700 டொலர்கள்.
**அமைவிடம்:** தென்மேற்கே ஜெர்மனியும்; வடக்கில் போலந்தும்; கிழக்கில் ஸ்லோவாகியாவும் தெற்கில் ஒஸ்ரியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.
**வரலாறு:** மத்திய ஐரோப்பிய நாடான செக்கோஸ்லோவாகியா, 1993 ஜனவரியில் செக் மற்றும் ஸ்லோவாகியா குடியரசுகளாகப் பிரிந்தது.

செக்கோஸ்லோவாகியா செக் 64%. மற்றும் ஸ்லோவாகியர் 31% கொண்டிருந்தது. இரண்டு நாடுகளின் கூட்டாட்சியாக 'செக்கோஸ்லோவாகியா சோஷலிஸ்ட் குடியரசு' முன்னர் உருவாகியிருந்தது. 1990 இல் இப்பெயர் செக் மற்றும் ஸ்லோவாக் பெடரேட்டிவ் குடியரசு என மாற்றம் பெற்றது. கம்யூனிஸ்ட் ஆட்சி நீங்கியது என்பதைக் குறிக்கும் விதத்தில் பெயரில் இருந்த 'சோஷலிஸ்ட்' என்ற சொல் நீக்கப்பட்டது. உள்நாட்டுக் கலவரங்களை அடுத்து, 1992ல் இரண்டு நாடுகளும் தனித்தனியாகப் பிரிவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

செக்கோஸ்லோவாகியாவில் 1946 தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும்பான்மை பெற்றது. சோவியத் யூனியன் 1969ல் செக்கோஸ்லோவாகியாவை ஆக்கிரமித்து, இதைக் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தது.

**பொருளாதாரம்:** தொழில் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளது. இயந்திரங்கள், வேதிப்பொருட்கள், கண்ணாடி போன்றவை ஏற்றுமதி செய்யப்படுகின்றன. விவசாயம் வளர்ந்து வருகிறது. கோதுமை, உருளைக் கிழங்கு என்பன முக்கிய விளை பொருட்களாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார் எழுதும் புதிய தொடர் 1

## ஒரு நிமிசம் நிசப்தம்

டைனிங் டேபிளுக்கு முன்புறமாய் உட்கார்ந்தபடி, பீங்கான் கோப்பையில் இருந்த உப்பில்லாத கோதுமைக் கஞ்சியை, மருந்து சாப்பிடுகிற உணர்வோடு ஸ்பூன் ஸ்பூனாய் உள்ளே தள்ளிக் கொண்டிருந்தார் சந்தானகிருஷ்ணன்.

அவருக்கு எதிரே உட்கார்ந்திருந்த அவர் மகள் அபிநயா சப்பாத்தியைப் பிய்த்து காரமான குருமாவில் தோய்த்து, கடைவாயில் அசக்கி சுவாரசியமாய் மென்று கொண்டிருக்க சந்தானகிருஷ்ணன் சொன்னார்.

"சொர்க்கம் நரகம்ங்கறது இது தாம்மா..செத்த பின்னாடி யாருமே சொர்க்கத்துக்கோ நரகத்துக்கோ போறதில்லை. உயிரோடு இருக்கிறப்பவே ஜனங்கள் சொர்க்கத்தோட சுகத்தையும், நரகத்தோட வேதனையையும் அனுபவிச்சுடறாங்க."

"எப்படியப்பா சொல்றீங்க?"

"உன்னையும் என்னையுமே எடுத்துக்கோம்மா அபிநயா! உப்பும் உறைப்பும் காரமுமா நீ சாப்பிட்றே... நான் ஒரு உப்புக் கல்லைக்கூட சேர்த்துக்க முடியாம இந்த சவசவா கோதுமைக்கஞ்சியை குடிச்சுட்டிருக்கேன். சொத்து பத்தைச் சேர்த்தும் ஒரு வாய் சோத்தை ஒழுங்காத் தின்ன முடியல்லேம்மா...இதுதான் ஒருத்தனுக்கு நரகம்..."

அபிநயா சப்பாத்தி விள்ளலை அடக்கிய வாயோடு சிரித்தாள். "அப்பா! இந்த டயட் கண்ட்ரோல் கொஞ்ச நாளைக்குத் தானே.? உடம்பு சால்ட் குறைஞ்சு நார்மலுக்கு வந்ததும் நீங்களும் வாய்க்கு ருசியாய்ச் சாப்பிடலாம்னு நம்ம டாக்டர் சொல்லியிருக்காரப்பா..." கஷ்டப்பட்டு ரெண்டு மாசம் எப்படியாவது பொழுதை ஓட்டுங்க..."

சந்தானகிருஷ்ணன் ஒரு குழந்தை மாதிரி சிணுங்கினார். "ரெண்டு மாசம் வரைக்கும் என்னால இந்த நாக்கை வெச்சுக்கிட்டு இருக்க முடியாதம்மா."

அவரையே கவலையோடு பார்த்தாள் அபிநயா.

கிட்டத்தட்ட எண்பது லட்ச ரூபாயை சேர்த்து வைத்திருக்கிற அப்பாவுக்கு இரண்டு இட்லியைக்கூட வாய்க்கு ருசியாய்ச் சாப்பிட முடியாத துர்ப்பாக்கியம் ஏற்பட்டுவிட்டதற்காக தன்னுடைய இருதயத்தின் ஓரம் லேசாய் கசிந்தாள்.

சந்தானகிருஷ்ணன் ஏற்கனவே டயபடீஸ்காரர்.

இனிப்பை மறந்து வெகு ாலமாயிற்று.

கடந்த ஆறு மாசமாய் ரத்தத்தில் சால்ட். கூடவே ப்ளட் பிரஷர். குடும்ப டாக்டர் மேனன் பிரிஸ்க்ரிப்ஷன் எழுதிக் கொடுத்தார்.

காலையில் உப்பில்லாத கோதுமைக் கஞ்சி இரண்டு கோப்பை. மத்தியானம் உப்பும் எண்ணெய்யும் கலக்காத சுட்ட சப்பாத்தி. உப்பில்லாமல் வேக வைத்த ஏதாவது ஒரு காய்கறி. ராத்திரி மறுபடியும் கோதுமைக் குஞ்சி.

"அம்மா....அபிநயா....?" சந்தானகிருஷ்ணன் கோதுமைக் கஞ்சி இருந்த பீங்கான் கோப்பையைத் தள்ளி வைத்துவிட்டு கூப்பிட்டார்.

"என்னப்பா...?"

"உன்னோட சப்பாத்தியில கொஞ்சம் போல பிச்சு- அந்தக் குருமாவில தோச்சு குடம்மா...சாப்பிடணும் போலிருக்கு...."

அபிநயா தட்டைத் தூக்கிக் கொண்டு எழுந்தாள்.

"நோ...நோ....டாக்டர்க்கு தெரிஞ்சா என்னைச் சத்தம் போடுவாரப்பா.... இனிமே உங்க முன்னாடி உட்கார்ந்து சாப்பிடறது மகாதப்பு....கிச்சனுக்கே போயிடறதுதான் பெட்டர்..."

"அபிநயா...ப்ளீஸ்...."

"ஸாரி...மைடியர் டாடி...."

"புது மோஸ்தர்ல ஒரு நெக்லஸ் வந்திருக்காம். கீர்த்திலால் நேத்தைச் சாயந்தரம் போன் பண்ணிச் சொன்னார்... சாயந்தரம் ரெண்டு பேரும் ஷாப்பிங் போலாம்....அந்த நெக்லஸை உனக்கு வாங்கித் தர்றேன்..."

"நோ....டாடி....இந்த இந்திய நாட்டு ஜனாதிபதியே கோலார் தங்கச் சுரங்கத்தை எம்பேர்க்கு எழுதி வெச்சாலும் சரி.....இந்த சப்பாத்தி விள்ளலை குரு மாவுல தோச்சு தரமாட்டேன். கண்ணை மூடிட்டு கஞ்சியைக் குடிச்சுடுங்க பார்க்கலாம்"

"என்னால முடியலைம்மா..... குமட்டுது...."

"நீங்க வ்வாந்தி பண்ணினாலும் பரவாயில்லை... குடிச்சு தான் ஆகணும்... இப்போ நீங்க குடிக்கலைன்னா டாக்டர் மேனனுக்கு போன் பண்ணி நீங்க சப்பாத்தியும் குருமாவும் கேட்டதைச் சொல்லிடுவேன்...."

"சொல்லிடாதேம்மா... மேனன் இஞ்செக்ஷனைத் தூக்கிவிட்டு வந்துடுவார்.. அந்த வலியைத் தாங்கிக்க முடியாது. சப்பாத்தி குருமாவையும் நீயே சாப்பிடு.. நான் அந்தக் கஞ்சியையே குடிச்சுடறேன்..." சந்தானகிருஷ்ணன் தீவிரமாய் சாப்பிட ஆரம்பித்தார்.

அபிநயா சிரித்துக்கொண்டே ஏதோ சொல்ல முயன்றபோது வாசலில் காலிங் பெல் "கிண் கிணார்" என்றது.

"மணி! அது யார்ன்னு போய் பாரு" சந்தானகிருஷ்ணன் தலையைத் திருப்பி உள்ளே பார்த்துச் சொல்ல சமையல் மணி தோளில் போட்ட துண்டோடு வாசலை நோக்கிப் போனான்.

ஒரு நிமிஷம் கழித்து வந்தான்.

"யாரு மணி....?"

"புரோக்கர் அய்யா வந்திருக்காரு..."

"சிவகுருநாதனா...?"

"ஆமாங்க.."

"உள்ளே வரச்சொல்லு...."

"என்னப்பா...இங்கேயேவா...? அபிநயா கொஞ்சம் திகைப்போடு கேட்க, சந்தானகிருஷ்ணன் புன்னகைத்தார். "அந்த சிவகுருநாதனுக்கு தனியா நேரத்தை ஒதுக்கி பேச முடியாதம்மா...சாப்பிடறப்பவே பேசி அனுப்பிச்சுடலாம்...மனுஷன் பேச ஆரம்பிச்சா ஓய மாட்டார்..."

"அவர் இப்ப எதுக்காக வந்திருக்கார்?"

"உன்னோட கலியாண விஷயமா ஏதாவது வரன் கொண்டுவந்திருப்பார்... பத்து நாளைக்கு முன்னாடி தான் அவர் கிட்டச் சொன்னேன். நல்ல வரனாயிருந்தா பார்க்கச் சொல்லி.....?"

அபிநயாவின் அழகான முகம் மாறியது.



"என்னோட கலியாணத்துக்கு இப்போ என்னப்பா அவசரம்..?"

சந்தானகிருஷ்ணன் சிரித்தார்.

"தமிழ் நாட்டில பொறந்த ஒவ்வொரு பொண்ணும் கல்யாணத்துக்கு முன்னாடி சொல்ற வார்த்தை இது. இன்னும் ரெண்டு மாசம் போனா உன்னோட இருபதாவது வயசு வருதும்மா...உங்கம்மா உயிரோடு இருந்திருந்தா இந்நேரம் உனக்கு கல்யாணமாகி ஒரு வருஷம் முடிஞ்சிருக்கும்..."

"அப்பா..."

"ம்.."

"நான் இப்பத்தான் படிப்பை முடிச்சுட்டு ஆறு மாசமா ப்ரீயா இருக்கேன். இந்த லைப் எனக்குப் பிடிச்சிருக்கு....ஒரு வருஷம் இப்படியே இருக்கேனே..?"

"நோ..நோ..நல்ல வரனா வந்தா கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு புருஷன் கூட ப்ரீயா இரேன்மா"

சந்தானகிருஷ்ணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே புரோக்கர் சிவகுருநாதன் ஒரு கல்யாண புரோக்கருக்குரிய சகல லட்சனங்களோடு வந்தார்.

"நமஸ்காரம்"

"என்னய்யா... இந்நேரத்துக்கே வந்துட்டீர்"

சிவகுருநாதன் 'இளித்தார்' நேத்தைக்கு நவமி. நல்ல விஷயத்தை நவமியிலே பேசக்கூடாதும்பாங்க...."

"உட்காரய்யா! டிபன் சாப்ட்றீரா..."

"வேண்டாம்... வர்றவழியிலதான் அன்னபூர்ணாவில நுழைந்து டிபனை முடிச்சுக்கிட்டு வர்ரேன். வேணுமின்னா ஒரு வாய் காபி சாப்பிடரேன்..."

அபி நயா தட்டை நகர்த்திவிட்டு எழுந்தாள்.

சந்தானகிருஷ்ணன் ஏறிட்டார் "என்னம்மா எந்திரிச்சுட்டே...ரெண்டு சப்பாத்தி தானே சாப்பிட்டே?"

"போதும்பா..வயிறு ரொம்பிடுச்சு"

அபிநயா சொல்லிக்கொண்டே வாஷ் பேசினை நோக்கி நடந்தாள். சந்தானகிருஷ்ணன் போகிற மகளையே ஒரு நிமிஷம் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு புரோக்கரிடம் திரும்பினார்.

"ம் நீர் சொல்லுமய்யா வந்த விஷயத்தை"

"ஒண்ணுமில்லை. நீங்க ஒங்க பொண்ணுக்கு வரன் பார்க்கச் சொன்ன நேரம் பேஷான நேரமா இருந்திருக்கணும் ஒரு அருமையான வரன் வாய்ச்சுருக்கு"

"மாப்பிள்ளைக்கு இதே ஊரா...?"

"மெட்ராஸ்....."

"குடும்பம் எப்படி?"

"சாதாரண குடும்பம்...பையனோட அப்பா ஸ்டேட் பேங்க் ஒப் இந்தியாவில ஆபீஸராய் இருந்து ரிடயரானவர். பேரு துளசிங்கம்."

"பையன் என்ன பண்ரான்....?"

"பையன் பி.ஈ எலக்ட்ரோனிக்ஸ் படிச்சுட்டு கோச் பாக்டரியில வேலைக்கு இருக்கான். மூவாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குறான். ஒரே பையன். கூடப் பொறந்தவங்க யாருமில்லை. அம்மாக்காரி அஞ்சு வருசத்துக்கு முன்னாடியே செத்துப்போயிட்டா.."

"சொத்து என்ன தேறும்?"

"உங்க கூட ஒப்பிட்டுப்பார்க்கிறப்போ அவங்க ஒண்ணுமில்லைதான். கிராமத்துல ஏதோ நிலம் நீச்சு இருக்கு"

"அந்த நிலம் நீச்சு எவ்வளவு தேறும்."

"பெரிய ரூபாய் ஒரு ரூபாய்க்குத் தேறும்"

"அதாவது ஒரு இலட்சம்"

"ஆமாங்க"

"சிவகுருநாதன்"

"சொல்லுங்க"

"என்னோட சொத்து மதிப்பு எவ்வளவுன்னு உமக்குத் தெரியுமோ?"

"சரியா..தெரியலீங்க"

"தெரியாட்டி கேட்டு தெரிஞ்சுக்க. இன்னிக்கு இருக்கிற நிலவரப்படி எண்பது இலட்சம் தேறும். எனக்கு வரப்போற மாப்பிள்ளை எனக்கு சமமா இருக்கணும்னு நான் சொல்லலை. எனக்கிருக்கிற சொத்து மதிப்புல பத்துல ஒரு பங்காவது இருக்கணும்னு நான் எதிர்பாக்கிறேன்."

"அப்போ இந்த சம்பந்தம் வேண்டாங்களா?"

"வேண்டாம்"

"பையனைப் பார்த்தா நீங்க வேண்டாம்னு சொல்ல மாட்டீங்க சேட்டு வீட்டுப் புள்ளை மாதிரி செவச் செவேன்னு இருக்கான். நல்ல உத்யோகம். பிரச்சனையில்லாத குடும்பம்."

"இதெல்லாம் சரிதான் சிவகுருநாதன். ஆனா நான் நினைக்கிற சொத்துல மதிப்பு இல்லையே? மத்ததுல கொஞ்சம் முன்னப்பின்ன இருந்தாலும் சொத்து மதிப்பு பத்து இலட்சம் கண்டிப்பா இருக்கணும். நீர் வரம் தேடப் போறப்ப இந்த குவாலிபிகேஷன் மொதல்ல இருக்கான்னு பார்த்துடும்."

சிவகுருநாதன் ஏமாற்றத்தோடு எழுந்தான்.

"இந்த சம்பந்தத்தை பேசி முடிச்சுடலாம்னு வந்தேன். ஆனா உங்க எண்ணம் வேறு விதமா இருக்கு. ஆகட்டும் நீங்க சொல்றபடியே பார்த்துடறேன்."

"அதுக்காக படிக்காத பையனாப் பார்த் துடாதேயும். பொண்ணு பி.எஸ்.சி. படிச்சிருக்கு. படிப்பு ஒரு படி அதிகமாக இருக்கணும். கௌரவமான குடும்பமாக இருக்கனும்."

"ம்..பார்த்துடறேன்..."

மணி கொண்டுவந்து வைத்த காபியை டபராவில் ஆற்றி சூட்டைக் குறைத்து வாயை அண்ணாந்து வயிற்றில் வார்த்துக் கொண்டு புரோக்கர் புறப்பட்டார்.

சந்தானகிருஷ்ணன் 'நாப்-கின்'னால் வாயை ஒற்றிக் கொண்டு தன் அறையை நோக்கி நடக்க முயல, அபிநயா பின்புறமிருந்து குரல் கொடுத்தாள்.

"அப்பா!"

"என்னம்மா...." என்றார்.

"நிஜமாவே எனக்கு கல்யாணம் பண்ணப்போறதா முடிவு பண்ணிட்டீங்களா?"

"அதிலென்னம்மா பொய் வேண்டிக்கிடக்கு. நிஜமாத்தான் ஸ்டெப்ஸ் எடுத்துட்டிருக்கேன். ஒரே மாசம் கலியாணம் செட்டிலாயிடும்..."

"புரோக்கர் கிட்டே என்னமோ நிபந்தனை போட்டிருந்தீங்களேப்பா? அது உங்க மனசுக்கு சரியாப்படுதாப்பா?"

"அந்த சொத்து மதிப்பு பத்து லட்சத்தை சொல்றியாம்மா?"

"ம்..."

"அது என்னோட பிரஸ்டீஜ் இஷ்யூ சம்பந்தப்பட்ட விஷயம் அபிநயா! எனக்கு சம்பந்தியா வரப்போறவங்களை பத்தி யாரும் ஏதும் பேசிடக்கூடாது. நான் கொண்டு வந்திருக்கிற மாப்பிள்ளையும் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர் தான்னு மத்தவங்க சொல்லணும்.."

அபிநயா ஏதும் பேசத்தோன்றாமல் எங்கோ பார்த்துக்கொண்டு நின்றாள். கண்களில் தீவிரமான சிந்தனை.

"என்னம்மா யோசனை பண்றே?"

"நீங்க சொல்ற நிபந்தனை என் மனசுக்கு சரியாப்படலைப்பா....."

சந்தானகிருஷ்ணன் சிரித்தார்.

"இதோ பாரம்மா அபிநயா! வர்ற மாப்பிள்ளையைப் பார்த்து உனக்கு பிடிச்சிருக்கா இல்லையான்னு சொல்றதுதான் உன்னோட வேலை மத்த விஷயங்களை நீ கண்டுக்காதே"

மனசுக்குள் ஒரு பிரளயம் சுழன்றது.

'சபரி! உங்களை அப்பா எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறார்?' ஒரு தனியார் கம்பெனியில்-


மாதம் ஆயிரம் ரூபாய் வாடகை வீட்டில் சீக்கான அம்மாவோடு நாட்களை தள்ளும் உங்களை?

அப்பா தன் மாப்பிள்ளையாக எப்படி அங்கீகரிக்கப்போகிறார்....?


அபிநயா சேலைத்தலைப்பால் வியர்வை யை ஒற்றிக்கொண்டு சேர்பாவில் ஆயாசமாய் சாய்ந்தாள். அடி வயிற்றில் சின்னதாய் ஒரு பயம் எழுந்து உட்கார்ந்து சோம்பல் முறித்தது.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: சேகர் மணிசேகரன்
வயது: 23
முகவரி: சி.எச். ஜனபுத்தய, இரட்டைப்பாதை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.




பெயர்: எம். றிஸ்வான்
வயது: 25
முகவரி: மன்னார் ரோட், இல. 69/10, முதலாவது லேன், புத்தளம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நாவல் படித்தல்.




பெயர்: கே. நிர்மலா
வயது: 17
முகவரி: தண்ணீர் கிணற்றடி வீதி, பாலமீன் மடு, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.



பெயர்: ஜெ. கனித
முகவரி: கோபாலபுரம், நுநிலாவெளி, திருகோணமலை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், வானொலி.



பெயர்: ஆர் முரளிதரன்
வயது: 25
முகவரி: 115,PUMA DRIVE, SCARBOROUGH, ONTARIO, MIVI G8, CANADA.
பொழுது போக்கு: பத்திரிகை,பேனாநட்பு.



பெயர்: அஸ்லம்
வயது: 24
முகவரி: P.O BOX. NO.29145 CODE 13152, SAFAT. STATE OF KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி., வானொலி

பெயர்: ஐ.எல். ஜலால்டீன்
வயது: 27
முகவரி: P.O. BOX-2381, CODE NO- 01026, JAHRA CENTRE, KUWAIT.
பொ.போ: பத்திரிகை, நாவல்.

பெயர்: வி.விக்னேஸ்வரன்
வயது: 29
முகவரி: ERLACH STR-39, 8003,ZURICH, SWITZERLAND.
பொ.போ: பத்திரிகை, தொலைக்காட்சி, சினிமா.

பெயர்: வி. ஜெயநாதன்
வயது: 18
முகவரி: 115, ஸ்ரீகுணானந்த மாவத்தை, கொழும்பு-13.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வாசித்தல்,

பெயர்: எம்.மன்சூர்
வயது: 18
முகவரி: 120/20, சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13..
பொ.போ: டி.வி., பேனாநட்பு.

பெயர்: ரி. வீரசிங்கம்
வயது: 29
முகவரி: தபாலகம், கல்முனை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: என். சாஹிர்
வயது: 19
முகவரி: மாங்குளம், நேரியகுளம், வவுனியா.
பொ.போ: பத்திரிகை ,வானொலி, தொலைக்காட்சி.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

33

# மக்சீம் கார்க்கி

# தாய்

"நிகலாயிடம் சொல்லி கொஞ்சம் விறகு கொண்டுவரச் சொல்ல வேண்டும். இங்கு விறகு அதிகமில்லை. அம்மா, உங்கள் பாவெலைக் கொஞ்சம் பாருங்களேன். புரட்சிக்காரர்களைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவர்ளை ஊட்டி வளர்த்துக் கொழுக்க வைத்திருக்கிறார்கள் அதிகாரிகள்."

தாய் தனக்குள் சிரித்துக் கொண்டாள். அவள் இன்னும் ஆனந்தத்தில்தான் திளைத்திருந்தாள்; அவளது இதயம் இன்பகரமாகத் துடித்தது என்றாலும் தன் மகனை அவனது வழக்கமான அமைதியில் பார்க்க வேண்டும் என்ற ஆர்வ உணர்ச்சி அவளுக்கு உந்தியெழுந்தது. எல்லாமே அவளுக்கு அதிசயமாக இருந்தது. அவளது வாழ்க்கையில் முதன் முதலாக ஏற்பட்டுள்ள இந்தப் பேரானந்தம் என்றும் எப்போதும் இன்றிருப்பது போலவே, வலிவும் வனப்பும் பெற்று நிலைத்திருக்க வேண்டும் என அவள் விரும்பினாள். அந்தப் பேரானந்தம் எங்கே கரைந்தோடிவிடப் போகிறதோ என்று பயந்து அவள் அந்த ஆனந்தத்தை வெளியிடாமல் தன்னுள்ளேயே அடக்கி சிறை செய்ய முயன்றாள். அபூர்வமான பறவையொன்று எதிர்பாராதவிதமாகக் கண்ணியில் சிக்கி விட்டால், ஒரு பறவை பிடிப்பவன் அது பறந்து போய் விடாமல் எப்படி பிடித்து அடைப்பானோ அந்த மாதிரி இருந்தது அவளது பரபரப்பு.

"சரி, நாம் சாப்பிடலாம், நீ இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லையே, பாஷா?" என்று பரபரப்போடு கேட்டாள் அவள்.


"இல்லை. நேற்றுச் சிறையதிகாரி என்னை விடுதலை பண்ணப் போகும் செய்தியைச் சொன்னார். அதிலிருந்து எனக்குச் சாப்பாடும் செல்லவில்லை; தண்ணீர்கூட இறங்க வில்லை" என்றான் பாவெல்.

"சிறையை விட்டு வெளியே வந்ததும் முதன் முதல் நான் சந்தித்தது சிஸோவைத்தான்" என்று தொடர்ந்து பேச ஆரம்பித்தான் பாவெல். "என்னைக் கண்டவுடன் வரவேற்றுப் பேசுவதற்காக அவன் தெருவைக் கடந்து வந்தான். நான் அவனை எச்சரிக்கையாய் இருக்கும்படி சொல்லி வைத்தேன். 'இப்போதுதான் நான் ஒரு பயங்கர ஆசாமியாச்சே! அதிலும் போலீஸ் கண்காணிப்பிலுள்ள ஆசாமி.' 'சரி, அந்தக் கவலை வேண்டாம்' என்றான் அவன். அவனது மருமகனைப்பற்றி அவன் விசாரித்ததை நீ கேட்டிருக்க வேண்டும். 'பியோதர் ஒழுங்காக இருக்கிறான் அல்லவா?' என்று கேட்டான். 'சிறையில் எப்படியப்பா ஒழுங்காக இருப்பது? என்றேன் நான். 'சரி, அவன் தன் தோழர்களுக்கு எதிராக ஏதாவது உளறிக் கொட்டுகிறானா?" என்று கேட்டான் சிஸோவ். பியோதர் ரொம்பவும் நல்லவன், யோக்கியன், புத்திசாலி என்று நான் சொன்னேன். உடனே அவன் தன் தாடியைத் தடவிக் கொடுத்துக் கொண்டு: 'எங்கள் குடும்பத்தில் மோசமானவர்கள் பிறப்பதில்லை!' என்று பெருமையோடு சொல்லிக் கொண்டான்."

"அந்தக் கிழவனுக்கும் மூளை இருக்கிறது" என்று தலையை அசைத்துக் கொண்டே சொன்னான் ஹஹோல். "அவனோடு நான் எத்தனையோ முறை பேசியிருக்கிறேன். ரொம்ப நல்லவன். சரி, அவர்கள் பியோதரையும் சீக்கிரம் விடுதலை செய்யப் போகிறார்களா?"

"எல்லோரையுமே விட்டுவிடுவார்கள் என்றுதான் நினைக்கிறேன். அந்தக் கிழட்டு இஸாய் சொல்லும் சாட்சியத்தைத் தவிர, அவர்களுக்கு எதிராக எந்தச் சாட்சியமும் கிடையாது. அவன்தான் அப்படி என்ன சொல்லிவிடப் போகிறான்.

மகனின்மீது தன் பார்வையைச் செலுத்தியவாறே தாய் அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருந்தாள். அந்திரேய் தன்னிரு கைகளையும் பிடரியில் கோத்துக் கொண்டு ஜன்னலுக்கு நேராக நின்று பாவெல் சொல்வதையெல்லாம் கேட்டுக்



கொண்டிருந்தான். பாவெல் அங்குமிங்கும் உலவினான். அவனுக்குத் தாடி அதிகம் வளர்ந்து போயிருந்தது. அழகான கருமயிர்ச் சுருள்கள் கன்னம் இரண்டிலும் சுருண்டு வளர்ந்து அவனது கரிய சருமத்தை இதப்படுத்திக் காண்பித்தன.

"உட்காருங்கள்" என்று சாப்பாட்டைக் கொண்டுவந்தவாறே சொன்னாள் தாய்.

சாப்பிடும்போது அந்திரேய் பாவெலிடம் ரீபினைப் பற்றிச் சொன்னான்; அவன் பேசி முடித்ததும், பாவெல் வருத்தத்தோடு பதிலுரைத்தான்:

"நான் மட்டும் இங்கிருந்தால், அவனை நான் போக விட்டிருக்கமாட்டேன். அவன் செல்லும்போது என்னத்தைக் கொண்டு போனான்? மனக்கசப்பையும் மனக் குழப்பத்தையும் தான் சுமந்து சென்றான்."

"சரி. ஆனால் ஒரு மனிதன் நாற்பது வயதை எட்டிய பிறகு, அத்தனை காலமும் தன் இதயத்துக்குள்ளே வேண்டாத விஷயங்களோடு முண்டி முண்டிப் போராடிக் கொண்டிருந்த பிறகு, அவனைச் சீர்திருத்தி வழிக்குக் கொண்டு வருவது என்ன, லேசுப்பட்ட காரியமா?" என்று சிரித்துக் கொண்டே சொன்னான் ஹஹோல்.

அவர்கள் விவாதிக்க ஆரம்பித்தார்கள். அந்த விவாதத்தில் வார்த்தைகள்தான் மலிந்திருந்தனவாகத் தோன்றியதே ஒழிய, அதிலிருந்து எந்த விஷயத்தையும் தாயால் கிரகித்துக் கொள்ள இயலவில்லை. சாப்பாடு முடிந்தது. என்றாலும் அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் தடபுடலான வார்த்தை யலங்காரத்தோடு வாதாடிக் கொண்டிருந்தார்கள். சில சமயங்களில்தான் அவர்கள் தெளிவாகவும் எளிமையாகவும் பேசினார்கள்.

"நாம் நமது கொள்கையில் ஓரடி கூடப் பின்வாங்காது நிலைத்து நின்று முன்னேற வேண்டும்" என்று உறுதியோடு சொன்னான் பாவெல்.

"ஆமாம் நம்மையெல்லாம் தங்களது எதிரிகள் என்று கருதும் பல்லாயிரங்கோடி மக்களிடையே நாம் கண்மூடித்தனமாக முன்னேற வேண்டும். இல்லையா?..... "

அவர்கள் விவாதித்துக் கொள்வதைக் கேட்ட தாய்க்கு, ஒன்று, மட்டும் புரிந்தது. விவசாய மக்களால் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லையென்பது பாவெலின் கட்சி. எது உண்மை, எது நியாயம் என்பதை முஜீக்குகளுக்கும் கற்றுக் கொடுக்க முயலத்தான் வேண்டும் என்பது ஹஹோலின் கட்சி. அவளுக்கு அந்திரேயின் வாதம் தான் புரிந்தது. அவன்தான் உண்மையோடு ஒட்டி நிற்பதாக அவளுக்குத் தோன்றியது. எனவே, அவன் பாவெலிடம் பேசத் தொடங்கும் போதெல்லாம் அவள் ஆர்வத்தோடும் பாதுகாப்புணர்ச்சியோடும் அவன் பேச்சைக் கவனித்துக் கேட்டாள். ஹஹோலின் பேச்சு பாவெலைப் புண்படுத்தி விடவில்லை என்பதைத் தன் மகனது பதிலைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள முடியும் என்று கருதி, மகனது பதிலுக்காக மூச்சுக்கூட விடாமல் காத்திருந்து பார்த்தாள் தாய். ஆனால் அவர்கள் இருவரும் ஒருவர் பேச்சை ஒருவர் விபரீதமாகவோ குற்றமாகவோ கருதாமல் காரசாரமாக இருவரும் கத்திக் கொண்டிருந்தார்கள்.

சமயங்களில் தாய் தன் மகனைப் பார்த்துச் சொல்லுவாள்:

"அப்படியா பாவெல்?"

அவனும் ஒரு சிறு புன்னகையோடு பதிலளிப்பான்:

"ஆமாம். அப்படித்தான்."

"ஆஹா, என் அன்பே" என்று சிநேக பாவமான கிண்டலோடு பேசத் தொடங்கினான் ஹஹோல். "கனவானே, நீங்கள் வயிறு மூட்டச் சாப்பிட்டு இருக்கிறீர்கள் ஆனால், நன்றாக அசைபோட்டுத்தான் தின்னவில்லை. அதனால் தொண்டைக் குழியில் ஏதோ கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கிறது; முதலில் அதைக் கழுவி துடைத்துவிட்டு வருக."

"என்னை அசடாக்கப் பார்க்காதே" என்றான் பாவெல்.

"விளையாட்டில்லை அப்பனே!"

தாய் சிரித்தவாறே, தலையை ஆட்டிக் கொண்டாள்.

□□

வசந்தம் வந்தது; பனிப்பாறைகள் உருகிவழிந்தோட ஆரம்பித்தன; மீண்டும் சேறும் புழுதியும் நிறைந்த தரை மட்டும் மிஞ்சியது. நாளுக்கு நாள் மிகத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது; அந்தக் குடியிருப்பு முழுவதுமே கழுவப் பெறாமல், கந்தல் கந்தலாகிப் போன துணிகளால் போர்த்தப்பட்டிருப்பது போலத் தோன்றியது. பகல் நேரங்களில் கூரைச் சரிவுகளிலிருந்து தண்ணீர் சொட்டும்; பாசி படிந்து அழுக்கேறிப் போன சுவர்களில் வேர்வை பூத்து வடிவதைப் போல், நீர் ஆவியாக மாறிப்பரவும். இரவு நேரங்களில் துளித் துளிப் பனித்துண்டுகள் வெள்ளை வெளேரென்று மின்னிக் கொண்டிருக்கும். சூரியனை அடிக்கடி பார்க்க முடிந்தது. வழக்கம் போல் சாக்கடைச் சிற்றோடைகள் குட்டைகளை நோக்கி முணு முணுத்துக் கொண்டு ஓட ஆரம்பித்தன.

மே தினக் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

அந்த புதிய தினத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் குடியிருப்பிலும் தொழிற்சாலையிலும் சிதறிப் பரவின. அந்தப் பிரச்சாரத்தால் பாதிக்கப்படாமலிருந்த இளைஞர்கள் கூட, அந்தப் பிரசுரங்களைப் படித்து விட்டுத் தமக்குள் பேசிக்கொண்டார்கள்:

"ஆமாம். நாமும் ஏதாவது செய்யத்தான் வேண்டும்."

"நாள் நெருங்கிவிட்டது!" என்று வரட்டுப் புன்னகையோடு சொன்னான் வெஸோவ்ஷிகோவ்; "நாம் ஒருவருக்கொருவர் கண்ணாமூச்சி விளையாடியது போதுமப்பா, போதும்."

பியோதர் மாசின் ஒரே உத்வேக சித்தனாயிருந்தான். மிகவும் மெலிந்து போயிருந்த அவனது நடுக்கம் நிறைந்த அசைவுகளும் பேச்சுக்களும் கூண்டிலே அடைபட்டுள்ள வானம் பாடியை நினைவூட்டின. மௌனமே உருவான யாகவ் சோமவும் அவனோடு எப்போதும் சுற்றித் திரிந்தான்; அவனிடம் காணும் அழுத்தம் வயதுக்கு மீறியதாய்த் தோன்றியது. சிறைவாசத்தால் தலைமயிரில் பழுப்புக் கண்ட சமோய்லவ், வசீலி கூஸெவ், புகின், திராகுனவ் முதலியவர்களும் வேறு சிலரும் ஆயுதம் தாங்கிய ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என வற்புறுத்தினார்கள். ஆனால் பாவெல், ஹஹோல், சோமவ் முதலியவர்கள் அந்த யோசனையை நிராகரித்தார்கள்.

களைத்துச் சோர்ந்து விதிர் விதிர்த்துக் கொண்டிருந்த இகோர் வேடிக்கைப் பேச்சை ஆரம்பித்து விட்டான்.

"தோழர்களே! இன்று அமுலிலிருக்கும் சமுதாய அமைப்பை மாற்றியமைப்பது ஒரு மகத்தான சாதனைதான். ஆனால், அந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு அறிகுறியாக, நான் ஒரு ஜோடி புது பூட்சுகள் வாங்கப் போகிறேன்" என்று நனைந்து கிழிந்து பழசாய்ப் போன தனது செருப்புக்களைக் காட்டிக்கொண்டே பேசினான் அவன். "என்னுடைய ரப்பர் செருப்புக்களும் செப்பனிட்டுச் சீர்படுத்த முடியாத அளவுக்குப் பிய்ந்து போய்விட்டன; எனவே தினம் தினம் என் கால்கள் ஈரமாவதுதான் மிச்சமாயிருக்கிறது. பழைய சமுதாய அமைப்பை பகிரங்கமாக எதிர்த்துப் போராடுகிற வரையிலும் நான் சாகமாட்டேன். நான் செத்து மண்ணோடுமண்ணாகப் போக விரும்பவில்லை. எனவே நாம் ஆயுதம் தாங்கி ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும் என்ற தோழர் சமோய்லவின் ஆலோசனையை நான் நிராகரிக்கிறேன். அதற்குப் பதிலாக, நான் ஒரு திருத்தப் பிரேரனை கொண்டுவருகிறேன். முதன் முதலில் நான் என் கால்களில் ஒரு ஜோடி புது பூட்சுகளை ஆயுதம் போலத் தரித்துக் கொள்கிறேன். நாமெல்லோரும் கண்மூடித் தனமாகப் போராட முனைவதைவிட, இப்படிப்பட்ட நடவடிக்கை அதாவது நான் பூட்ஸ்தரித்துக் கொள்ளும் நடவடிக்கை சோஷலிசத்தின் வெற்றியைத் துரிதப்படுத்தும் என்பது எனது அசைக்க முடியாத, தீர்மானமான நம்பிக்கை!"

இந்த மாதிரியான வேடிக்கை பேச்சோடு பேச்சாய், அன்னிய நாடுகளில் மக்கள் எப்படித் தங்கள் வாழ்க்கையைச் சுலபமாக்கிக் கொள்ளப் போராடுகிறார்கள் என்பதையும் அவன் அவர்களுக்கு எடுத்துச் சொன்னான். அவனது பேச்சு தாய்க்கு மிகவும் பிடித்திருந்தது. அவள் மனத்தில் ஏதோ ஒரு அதிசயப் பற்றுதல் உண்டாயிற்று. பொறாமையும், குரோதமும் வஞ்சகமும், கொடுமையும் நிறைந்து தொந்திதள்ளிப் போன சிவந்த மூஞ்சிக்காரர்கள் தம் மக்களைக் கொடுமைப்படுத்தி, அவர்களை ஏமாற்றி பிழைத்து வரும் பரம வைரிகள் என்று அவளுக்குத் தோன்றியது. ஆட்சியாளரின் கொடுமையால் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களை அவர்கள் மன்னனுக்கு எதிராகத் தூண்டி விடுவார்கள். மக்கள் மன்னனை எதிர்த்துப் போராடிக் கவிழ்த்தவுடனே இந்தக் குள்ள மனிதர்கள் மக்களைச் சாமர்த்தியமாக ஏமாற்றி அதிகாரத்தைத் தாங்களே கைப்பற்றிக் கொள்வார்கள். மக்களை விரட்டியடிப்பார்கள்; மக்கள் எதிர்த்துப் போராட முனைந்தால் அவர்களை ஆயிரம் ஆயிரமாகக் கொன்று குவிப்பார்கள்.

*(தொடர்ந்து வரும்.)*

# சபலம்

வி.எஸ். பாலா பாலச்சந்திரன்

கிழக்கே வானம் சிவந்திருந்தது. நேற்றிரவு பெய்திருந்த பனியினால் புல்லினங்கள் எல்லாமே புதுப் பொலிவு பெற்று பூரித்து நின்றது. மரஞ் செடி கொடிகள் எல்லாமே இதமான இளங் காலை வேளை இனிமையான தென்றலதை ஸ்பரிசம் செய்து கொண்டு மெல்லிதமாய் ஆடி அசைந்து கொண்டு



நின்றது. நானும் எனது அலுவலக விடயமாக தலைநகர் செல்வதற்கு வீட்டில் இருந்து பஸ் எடுப்பதற்காக பிரதான பாதையினை நோக்கி நடக்கின்றேன்.

தென்றலது எனது தேகத்தினையும் தழுவிச் சென்றது. ஒரு வித இனிய சுகம் உள்ளத்தினுள் ஊற்றெடுத்தது. நான் பிரதான பாதையினை அடைவதற்கும் பஸ் வருவதற்கும் சரியாக இருந்தது. பஸ்ஸினுள் ஏறிக்கொண்டேன். நடத்துநர் எனக்கு சற்று அறிமுகமானவர். அவரது முகத்தில் புன்னகை இலேசாக பூக்கின்றது. பதிலுக்கு எனது முகத்திலும் கட்டாய புன்னகை நன்றியினை நல்குவதற்காக,("கொய்த யன்னே") நடத்துநர் சகோதர மொழியில், நானும் "கலுகல" என்கின்றேன். டிக்கெட் பெறுவதைவிட பஸ்ஸினுள் ஆசனங்கள் ஏதும் காலியாக இருக்கின்றதா? என்பதனை நோக்குவதிலே நான் பெரிதும் கவனம் செலுத்துகின்றேன்.

அது எமது பகுதியின் பிரதான ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமை புரியும் பெண்களுக்கென்று தினசரி சேவையில் ஈடுபடும் பஸ்வண்டி ஒன்று. பஸ் வண்டியினுள் ஒரேயொரு ஆசனத்தின் ஒரு பகுதி காலியாக இருந்தது. வலது புறத்தில் ஒரு இளம் பெண் அமர்ந்திருந்தாள். நானும் அவள் அருகில் சென்று அமர்ந்து கொண்டேன். எனக்கு பரிச்சயமற்ற அவள் நன்கு பரிச்சயமானவள் போல் பாவனை காட்டினாள்.

இப்போது எனக்குள் நான் ஒரு ஹீரோ. பஸ் தொடர்ந்து இரண்டு மூன்று நிறுத்துமிடங்களில் நிறுத்தி மேலும் பல பெண்களை ஏற்றி சுமந்து கொண்டு வளைவு! நெளிவு! கொண்ட பாதையின் ஊடே வெகு லாவகமாக சென்று கொண்டிருந்தது. பஸ் வண்டியின் இரைச்சலையும் முந்திக் கொண்டு அந்தக் கலர்கலரான பெண்களின் மிதமான பேச்சுக்களும் சிரிப்பொலிகளுமே அதிகமாக ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

"அய்யா கொய்த வெட கரண்னே" கேள்வியினைத் தொடுத்தாள் எனதருகில் இருந்த பெண். (எனக்கு சரளமாக சிங்கள மொழியினை பேச முடியும்) நானும் எனது தொழில் அலுவலகத்தைப் பற்றியும் மற்றும் எனது தொழில் அந்தஸ்து போன்றவற்றை பெருமையோடு கூறுகின்றேன். அவள் தொடர்கின்றாள்.. "எத்தத? ஏனங் அய்யாகே கம கொய்த?" "மஹநுவர" பொய் சொல்கின்றேன்.

இப்போது எனது அன்பு மனைவி, ஆசைக்குரிய இரு பிள்ளைகள் மூவரையும் முற்றாகவே நான் மறந்து போய்விட்டேன். தற்போது நான் அவள் மிக அந்யோனிய பட்டு விட்டோம். அவள் எனது காதருகே மெதுவாக மெதுவாக கிசுகிசுக்கின்றாள். "ஏனங் அய்யாகே அட்ரஸக்க தென்ட புளுவந்த" நானும் எனது பொக்கற்றினுள் கையை விடுகின்றேன். கையினுள் ஒரு சிறு துண்டு காகிதம். அதில் உதயகுமார் ஆகிய நான் 'உதயகுமார' வாகி அவளது மென்மையான கைக்குள் திணித்து விடுகின்றேன். அவளது கண்களில் ஒரு வித ஆனந்தம் சற்றெனத் தோன்றி சடுதியாய் மறைகின்றது. இதற்கிடையில் பஸ் வண்டி யும் ஆடைத் தொழிற்சாலையினை அண்மித்து விட்டது. "ஏனங் அய்யாடலியுமக் எவானங்" மெல்லிதமாய் கூறிய அவள், பஸ் வண்டியினை விட்டு இறங்கி சென்று விட்டாள்.

இப்போது நான் எனது கண்களை இறுக மூடிக் கொள்கின்றேன். அந்த நளினமான இள நங்கையவள் என்னுள் வந்து சில்மிஷம் செய்கின்றாள். திடீரென ஒரு கரம் என்னைத் தட்டுகின்றது. விழித்துக் கொள்கின்றேன், "கோ! மகத்தையா டிக்கெட்டெக்க பொட்டகட தெனவத?" ஓ! டிக்கெட் பரிசோதகர் என்று நான் சற்றென உணர்ந்து கொண்டு, பொக்கற்றினுள் இருந்த டிக்கெட்டை எடுத்து அவரிடம் நீட்டுகின்றேன். அவரது முகம் சற்று சுருங்கியது.

"மகத்தயா! மேக பரண டிக்கெட்டெக்கநே மட மே பஸ்ஸக்க கத்த டிக்கெட்ட தெண்ட" நான் எனது எல்லா பொக்கெற்களிளும் கையை விட்டு அலசி ஆராய்கின்றேன். டிக்கெட் கிடைக்கவில்லை. அப்படியானால் உதயகுமார் ஆகிய நான், "உதயகுமார" வாகி விலாசம் கொடுத்தது அந்த 'டிக்கெட்டிலா'? பஸ்வண்டியினுள் இருந்த பிரயாணிகள் எல்லோருமே ஒருவித நையாண்டிப் பார்வையினை என் மீது வீசுகின்றனர்.

நானும் உள்ளுக்குள் வெட்கி தலைசாய்கின்றேன். ஆனால் எனது மனக்கண்களின் முன் எனது அன்பு மனைவியும் ஆசை செல்வங்களும் புன்னகைத்து நிற்கின்றனர்.

**கதையில் வரும் சிங்கள உரையாடலின் அர்த்தங்கள்.**

*கொய்தயண்ணே? எங்கே போகிறீர்கள்?*

*அய்யா கொய்த வெடகரன்னே? அண்ணே எங்கே வேலை செய்கிறீர்கள்?*

*எத்தத? ஏனங் அய்யாஹே கம கொய்த? அப்படியா? அண்ணே உங்க ஊர் எங்கே?*

*ஏனங் அய்யாஹே அட்ரஸ்ஸக்க தெண்ட புளுவந்த? அண்ணே உங்க அட்ரஸ்ஸ தரமுடியுமா?*

*ஏனாங் அய்யாட லியூமக் எவானங்- உங்களுக்கு கடிதம் அனுப்புகிறேன்.*

*கோ மகத்தையா டிக்கெட்ட தெனவதா? ஐயா, எங்கே டிக்கட் கொஞ்சம் தாறீங்களா?*

*மகத்தையா மேக பரண டிக்கட்டெக்கநே, மட மே பஸ்ஸெக்க கத்த டிகெட்ட தெண்ட-ஐயா, இது பழைய டிக்கட், எனக்கு இந்த பஸ்ஸில் எடுத்த டிக்கட் தாங்க.*

# என்னுயிரே... என்னுயிரே

## கிண்ணியா சபருள்ளா

மூச்சுத்திணறியது

என்ன கூட்டம் இது. காற்று தன் கால்களை உதைத்துக் கொண்டிருந்தது. இடைவெளி இல்லாத இடத்தை நினைத்து சுவாசம் பதைத்தது. ஒரு நெருக்கமான சகோதரத்துவத்தைக் காணவேண்டுமென்றால் ப்ளீஸ்..... இந்த பஸ்ஸை வந்து கொஞ்சம் எட்டிப் பாருங்கள். இலங்கையின் இனங் களுக்கிடையேயான இன ஒற்றுமை இங்கே பளிச்.... பளிச். (இனி மேல் யாரும் என்காதுபட 'இந்த நாட்டில் இன ஒற்றுமை இறந்தா போனது' என்று கேள்விக் குறியைத் தூக்கி நின்றால் காலில் கிடக்கும் தேய்ந்த செருப்பை எடுத்து.... ஒண்ணும் செய்ய மாட்டேன்..... ஹி.... ஹி... பயந்தான்)

திருமலை நோக்கி வரகாபொலயிலிருந்து புறப்பட்ட பஸ். நானும் நண்பண் சர்ஜுனும் கல்லூரியில் தந்த லீவுக்காக ஊர் போக, கையில் தொங்கிய பாரமான கனத்துடன் பாய்ந்தேறினோம். முதலில் இருக்க சீட் கிடைக்காதா என்று ஏங்கிய மனம் பின்னர் நிலைமையைப் பார்த்து நிற்கவாவது ஒரு நிலையான இடம் கிடைக்காதா என அழுது தீர்த்தது. ஒற்றைக் கையால் பஸ்ஸின் உட்கம்பியைப் பிடித்துக் கொண்டு இன்னுமொரு கையால் பாரமான பயண பேக்கை தூக்கிக் கொண்டு–

சே... இதைவிட ஒரேயடியாய் கழுத்தை நெரித்திருக்கலாம். பஸ் அவஸ்தையுடன் மெல்ல மெல்ல குருணாகல், மெல்சிரிபுர, இப்பாகமுவ, கலேவெல என கடந்து கொண்டு தம்புள்ளையில் தரைதட்டியது. (விமானம் என்ற நினைப்பா? கொக்கா..... ஒரு அறுவைதான்). தம்புள்ளையைக் கடந்து ஹபரனையை நெருங்கிக் கொண்டிருந்தது..... ஓ... யெஸ் அந்த (திக்....திக்) இடம் மெல்ல மெல்ல ஓடிவந்து கொண்டிருந்தது.

பயணிகள் உஷாராகினர். தங்கள் பேக்குகளை திறந்து கவனித்து மடியில் தயாராக வைத்திருந்தனர். பொக்கற்றை சரிசெய்து தங்கள் பாதுகாப்பை பலப்படுத்திக் கொண்டிருந்தனர். நானும் அவசரமாய் (மூச்சு வாங்கவும் விற்கவும் முடியாத சந்தை) பேக்கை சரிசெய்து ரவுசர் பொக்கற்றை நோக்கினேன்.

இடி... மின்னல்..... அடி... பூகம்பம்... எரிமலை.... புயல்....

பயம் பற்றிக் கொள்ள சேர்ட் பொக்கற்றையும் ரவுசர் பொக்கற்றையும் ஆராய்ந்து ஆராய்ந்து அவதிப்பட்டேன். ...ம்..வரகாபொலயில் வைத்து ஹொஸ்டலில் இருந்து வரும் போது ரவுசர் பொக்கற்றில் தானே வைத்தேன். நன்றாக நினைவிருக்கிறது. 'ஆனா ஆனா.... இப்ப எப்படி காணாமல் போனது..... அதுக்குள்ள 500 ரூபா இருந்தது. காசு வேணாம்...ஆனா அது.. அது என்ட அல்லாஹ் இந்த நெருக்கத்துக்குள்ள எப்படித் தேடிக் கண்டுபிடிக்கிறது.

என் மேனியில் நைல்நதி சேர்ட்டைக் கழுவிக் கொண்டிருந்தது. மெய்மறந்து போனேன். என் ஒவ்வொரு தோள் பட்டையும் ஒரு பிணந்திண்ணிக் கழுகால் தோண்டப் பட்டுக் கொண்டிருந்தது. அதிகபட்சமாய் வியர்த்து பீதியை விழிகளில் வாசித்து அவஸ்தையை சுவாசித்தேன்.

அந்த இடம்வர இன்னும் இருபது நிமிடங்கள்.

'யா அல்லாஹ் என்னைய காப்பாத்து' நேர்த்திக் கடனில் மிதந்தேன். நண்பர் சர்ஜுன் என்னைக் கவனித்திருக்க வேண்டும் "டேய் என்னடா" கேள்விக் குளம் கண்ணில் நிறைந்திருந்தது.

நான் விஷயத்தை விளக்க "அடப்பாவி என்னடா செய்யுறது. நல்லாத் தேடிப்பார்ரா. படிச்சுப் படிச்சு சொன்னேன் . கொஞ்சம் இதுல கவனமா இர்ரான்னு. இப்ப நாடு இருக்குற நிலைமையில.... ம்... நம்மட கத முடிஞ்ச மாதிரிதான்" தேடுதல் வேட்டையில் தீவிரமானான்.

என் காதலி என்னை ஏமாற்றட்டும். துக்கப்படுவேன்தான். ஆனால் இப்படி இந்த விஷயத்துக்கு அழுவதுபோல் சோகம் கொள்ள மாட்டேன். என் வீட்டைக் கொள்ளையடிக்கட்டும். கவலைப்பட மாட்டேன். ஆனால் இப்போது நெருப்பில் செருப்பில்லாமல் அல்லவா நி(செ)ன்று கொண்டிருக்கிறேன். கண்ணை மூடித் தியானித்தேன். 'யா அல்லாஹ் தொலைஞ்சு போனத கிடைக்கச் செய்' என் கழுத்தைப் பிடித்து இரும்புமனிதன் 'டேய் நட்ரா' சித்ரவதைக்கூடத்துள் இழுத்துச் செல்வது தெரிந்தன. மனசுக்குள் வீரிட்டேன். என் உடம்பு இருக்குற நிலைமையில்....

கண்களில் கண்ணீர் கசிந்தது. அழுதேன்.



சத்தியமாய் சூழ்நிலையை மறந்து ஊமைக் குயிலாய் அழுதேன். 'இந்த நேரத்துல இப்படி ஆயிட்டுதே யா அல்லாஹ் என்னையக் காப்பாத்து' நெஞ்சுக்குள் கலிமாவை ஓதிக் கொண்டேன்.

நேரம் கரைந்து கொண்டிருந்தது.

மீண்டும் தேடுதல் வேட்டையை நானும் நண்பன் சர்ஜுனும் பஸ்ஸுக்குள்ளே பலப்படுத்தினோம். 'ம் ஹும் கிடைக்கவே இல்லை "டேய் உனக்கு நல்லா ஞாபகமிருக்கா ஹொஸ்டல்லே இருந்து வரும்போது பொக்கற்றுல எடுத்துவச்சியா" திடீர் சந்தேகம்.

நான் உடைந்து போனேன் "ஆமாடா நல்லா ஞாபகமிருக்கு ரவுஸர் பொக்கற்றுல தான் வச்சேன். பாரு இப்ப காசுமில்ல ஒன்றுமில்ல" ஆத்திரம் எட்டிப்பார்த்தது (எல்லாம் இயலாமைதான்).

கண்டக்டர் கத்துவது காதுக்குள் குத்தியது 'எல்லோரும் ரெடியாயிருங்க'

இன்னும் ஐந்தே நிமிடங்கள்

எவ்வளவு ஆசையுடனும் கனவுகளுடனும் இந்த பஸ்ஸில் ஏறினேன். மூன்று மாதத்தின் பிறகல்லவா கிண்ணியாவுக்கு (சொந்த ஊர்) போகிறேன். ஆனால் இந்த நிலைமையில் நான் கிண்ணியா போய்ச் சேருவேனா. ஹன்ட்ரட் பேசன் சந்தேகம்தான்

முட்டி பெயர்ந்தது... ஹைற(அடி)

கண்ணுக்குள் என் பேரன்ட்ஸ்சும் ரிலேசன்ஸும் அதிலும் சின்னக் குட்டிகளான ரிகாசும் பாஹிமும் பயாசும் ....நஸ்புல்லாவும். ரைஷும்...

இவர்களை நான் சந்திப்பேனா.

எதிரே ஒருத்தி என் முன்னால் இளமையை இடுக்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தாள். இதுவே என் பொக்கற்றிலிருந்த இந்த நாளின் உயிர் தொலைந்து போகாதிருந்தால் நன்றாக ரசித்திருக்கலாம். (மனசு எப்போதும் ஒரு தினுசுதான்) நொந்து கொண்டேன்.

தூரத்தே அந்த இடம் நெஞ்சுக்குள் திருஷ்டி கழித்தது!

மயக்கமா கலக்கமா மனதில நடுக்கமா (யூ... ப்ளடி சௌந்தர்....)

"இது யாருடைய பேர்ஸ்" ஒரு கிழட்டுக் குரல்.

காற்றைப்போல திரும்புகிறேன். 'சந்தேகமேயில்லை என்னுடையது தான். இப்போது உயிர் மெல்ல மெல்ல உறவாட வந்த மாதிரி தெரிந்தது

"என்னோடது" கத்திவிட்டேன்

பரீட்சித்து என் கையில் அந்தப் பெரியவர் தந்தார். "தம்பி கீழே விழுந்து கிடந்தது. உதைபட்டு மிதிபட்டு இங்கே கிடந்திச்சு. இனிமேலாவது கவனமாயிருங்க" நான் அவரது கைக்கு ஒரு இச் கொடுத்தேன் வாயில் ஒரு பரல் தேன்.

"எப்படி நன்றி சொல்றதுன்னே".. காந்தி, சுதந்திரம் இந்தியாவுக்கு கிடைத்த போதுகூட இப்படி ஆனந்தக்கண்ணீர் வடித்திருக்கமாட்டார்.

மணிபேசை திறக்கின்றேன். எனது உயிர் என்னைப் பார்த்து சிரித்தது.

பஸ் குலுங்கிநின்றது.

எல்லோரும் பயணப் பொதிகளுடன் இறங்க நானும் பொதியைத் தூக்கிக் கொண்டு கையில் தொலைந்து போன (இந்த நாள் வடக்கு-கிழக்கு மக்களின் உயிர்) எனது ஐடென்டி கார்டை பிடித்தவாறு ஒரு துள்ளலுடன் பஸ்ஸுக்குள் நின்றுகொண்டிருந்த அந்த இளசை ரசித்துக் கொண்டே நடக்கின்றேன். (ஹை.... புத்தி வேலை செய்யுது)

செக்கிங் பொயின்ரில் நின்று கொண்டிருந்த இராணுவ அதிகாரிகள் எல்லோரையும் துரிதமாயும் கடுமையாகவும் சோதனை பண்ணிக் கொண்டிருந்தனர்.

# சித்திரச் சிட்டுக்கள்!

"ஊர்வசி ஊர்வசி டேக் இற் ஈசி ஊர்வசி" என்று பாடிக் கொண்டே சந்திரன் அந்த மாணவியரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தான். சற்றுத் தூரம் போன போது "புஸ்ஸ்...ஸ்...ஸ்..." என்று ஒரு சப்தம். பைசிக்கிளின் பின் சில்லுக்குக் காற்றுப் போய் விட்டது.

## நிந்தவூர் உஸனார்ஸலீம்

"சே... தரித்திரம் புடிச்ச முள்ளுக் குத்திடுச்சே... நிலாவும் பிரான்சுகளும் போயிடுவாள்களே... ம்.." சைக்கிளில் நின்றவாறே தனக்குள் சொல்லிக் கொண்டவன் சைக்கிளைத் தள்ளியவாறு அவர்களின் பின்னால் போனான். அவர்களோ சந்திரனின் கதியைப்பார்த்து நக்கலாக சிரித்துக் கொண்டே நடந்தார்கள்.

சற்றுத்தூரம் போனதும் நீச்சல் தடாகம் வந்தது. நிலாவும் பிரன்சுகளும் புத்தகங்களை ஒரு புறமாக வைத்தார்கள். மறுகணம் எதையுமே சிந்திக்காமல் ஆடைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கலைந்து விட்டு 'நிக்கர்' உடன் நின்று ஒருவர் உடலை ஒருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள்.

சந்திரன் சற்றுத் தொலைவில் நின்று பார்த்துக் கொண்டே நிற்கும் போது நிலா முதலில் தடாகத்தில் குதிக்க மற்றப் பெண்பிள்ளைகளும் தடாகத்தில் ஒன்றாக குதித்து நீந்தி விளையாடத் தொடங்கினார்கள். சந்திரனுக்கோ அது கண்கொள்ளாக் காட்சியாகத் தெரிந்தது.

தனக்கும் அவர்களோடு அதே தடாகத்தில் ஒன்றாக நீந்தி விளையாடி அவர்களோடு புரண்டு விளையாடிக் குதூகலிக்க ஆசை பிறந்தது. மறுகணம் தானும் ஆடைகளைக் களைந்து விட்டு அவர்களுடன் நீச்சல் தடாகத்தில் குதித்தான்.

மறுகணமே நீச்சல் தெரியாத அவன் நீரினுள் மூழ்கத் தொடங்கினான். "நி...லா....நி...லா..ம்...." மூழ்கிக் கொண்டே சப்தமிட்டான். நிலாவும் நண்பிகளும் ஓடி நீந்திச் சென்று அவனைக் கரை சேர்த்தார்கள்.

"ஏய் சந்திரன்.... டீச்சர் சொன்னாங்கதானே.... நீ நேத்திக்குத்தான்... நேசரி ஸ்கூலில் சேர்ந்திருக்கே.... மத்தப் பிள்ளைகள் தடாகத்துல நீந்துறப்போ நீ பார்த்துக்கிட்டு நிக்கணும், இறங்கக் கூடாதுண்ணு



சொன்னாங்கதானே.... எங்களுக்கு டீச்சர் பழக்கித் தந்ததால நாங்க நீந்துறம்... உனக்கு டீச்சர் இப்பவந்து பழக்கிக் காட்டுவாங்க.... நீ கரையில உட்கார்ந்து எங்களைப் பார்த்துக் கொண்டிரு...." நிலா என்ற அந்த நான்கு வயதுச் சின்னஞ் சிறுமி சொல்லி விட்டுக் கலகலவெனச் சிரித்தவாறே தண்ணீரில் குதித்தாள். அவளைப் பார்த்துக் கரையில் நின்று குதூகலித்துக் கைதட்டினான் சந்திரனென்ற அந்த நான்கு வயதுப் பையன்!

# சுமைகள்


கையெழுத்தைப் பார்த்தவுடனேயே புரிந்துவிட்டது சந்திரனுக்கு "அம்மா கணேஷ் கடிதம் போட்டிருக்கிறான்."

அந்தப் பத்து வயதுச் சிறுவனின் சந்தோச அலறலில் அந்த குச்சுவீடே ஒரு கணம் அதிர்ந்து போய் பார்த்துக் கொண்டிருந்தது. கடிதத்தைப் படிப்பதும் முத்தமிடுவதுமாக உலகத்தின் மொத்தப் பூரிப்பையெல்லாம் தன் முகத்திலே கொட்டிக் கொண்டிருந்த மகனைப் பார்க்க கனகத்திற்குப் பெருமை பிடிபடவில்லை. இந்த ஓலை வீட்டுக்கு வந்த முதலாவது வெளிநாட்டுக்கடிதம்–சந்தோசம் இருக்காதா என்ன!

"என்னவாமடா எழுதியிருக்கிறான்?"

"என்னைப் பார்க்க ஆசையாம், நினைத்துக்கொண்டே இருக்கிறானாம். பதில் எழுதட்டாம்." சந்திரனின் முகத்தில் பெருமிதம் வழிந்தது."பின்ன இருக்காதா என்ன?" தனக்குள் முணுமுணுத்துக் கொண்டு அடுப்படிக்குள் நுழைந்துவிட்டாள் கனகம். இவன் பேனையையும் பேப்பரையும் தூக்கிக்கொண்டு தனது அருமையான நண்பனுக்கு பதில் வரையத் தொடங்கிவிட்டான்.

மூன்று மணித்தியாலம் இருந்து எழுதியதில் இடுப்பு



## வளன்முகி

பிடித்துக் கொண்டது. கடிதத்தை அழுத்தி மடித்து புத்தகத்தால் பாரமேற்றிவிட்டு அம்மாவிடம் வந்தான்.

"அம்மா 'என்வலப்' முத்திரைக்கு காசு தாங்கோ". அக்கா கேலியாகச் சிரித்தாள்.

"நானே நூல்வாங்க கேட்டிட்டு இருக்கிறனடா. உனக்கு உதைதான் கிடைக்கும்."

தமக்கையை முறைத்து சின்னதாய் ஒரு இடி கொடுத்து விட்டு அடுப்படிக்குள் நுழைந்தான்.

"அம்மா காசு"

"என்னட்ட இல்லையப்பன்"

"கட்டாயம் வேணும் அம்மா"

"இல்லையென்டெல்லே சொல்லுறன்."

"இருபது ரூபாய் தானே"

"இருந்தால் தானே தாறதுக்கு என்ர கடவுளே! நான் படுகிற கஷ்டம்... எல்லாப் பக்கத்தாலையும் கடன், மாவிடிக்கிறது உனக்கு கொப்பி வாங்கவே காணாது. போதாக்குறைக்கு இதுக்கும் நீ கேட்டால் நான் என்னடாப்பா செய்கிறது. இப்படி எத்தின தரம் கேக்கப் போறாய்"

மௌனமாக இருந்த மகனைப் பார்க்க அவளுக்கு இரக்கமாக இருந்தது.

"பிறகு காசு கிடைக்கேக்க தாறன் என்ற குஞ்செல்லா" நாடியைத் தடவி சமாதானப் படுத்தினாள். இவனுக்கு அழுகை வந்தது. 'பிறகு தாறாவாம்.' பிறகு என்றால் அது எத்தனை பிறகு ஆகும் என்று அவனுக்குத் தெரியும். சினந்து கொண்டு வெளியே வந்தான்.

தமக்கையைப் பார்த்தான். அவள் பேசாமல்தான் இருந்து தைத்துக்கொண்டிருந்தாள். அவளது மௌனம் அவனை கேலி செய்வது போல் பட்டது.

"எல்லாம் உன்ர கரி நாக்குத்தான்" என்று ஆத்திரம் தீர முதுகில் ஒரு உதை கொடுத்துவிட்டு தமக்கையின் அலறலை அலட்சியம் செய்து தனது புத்தகங்களுக்கிடையில் குப்புறப்படுத்து முகம் புதைத்துக் கொண்டான்.

தனது அன்பு நண்பன் கணேசுடன் பள்ளிக்கூட வாழ்க்கையும், தன் பெற்றோருடன் வெளிநாடு போகும் போது இவனை கட்டி அணைத்து விம்மி அழுததும் கண்முன்னே விரிந்தது.

'கணேஷ் என்னைப் பற்றி என்ன நினைப்பான், பாவம் என் கடித்தைப் பார்த்துக் கொண்டிருப்பான்' மனம் புலம்பியது. எல்லோர் மீதும் எல்லாவற்றின் மீதும் கோபம் வந்தது.

புத்தகத்தின் சுமையால் அழுத்திப் போயிருந்த கடிதத்தை மெதுவாக இழுத்து எடுத்தான். 'கணேஷ் உனக்கு எழுத ஆசையடா. என்னைப் பற்றி பிழையாக நினைக்காதடா' கலங்கிக் கலங்கி இருந்த கண்களில் இருந்து பொட்டென்று ஒரு துளி துள்ளி விழுந்தது.. கட்டுப்படுத்த முடியவில்லை. தமக்கை பார்க்க முடியாமல் முகத்தை மறைத்துக் கொண்டு இரகசியமாய் அழுதான். அந்தச் சின்னவனின் மனதில் ஏகப்பட்ட சுமைகள் கொஞ்சம் கொஞ்சமாக ஏறிக்கொண்டிருந்தது.

# தூது!

## ஜெ. பௌரான்ஸ்

வழியும் விழி நீரை துடைத்துக் கொண்டு அமர்ந்தாள் துர்கா...இப்படியும் ஒரு மனுஷனா....இவனுக்காகவா நான் தூது போனேன்....தானியா அக்காவின் இதயத்தை நொறுக்கி விட்டேனே...நினைக்க நினைக்க அவள் உள்ளம் வேதனையால் வெதும்புகிறது.

அன்றொரு நாள்....

"தானியா அக்கா உங்களுக்கு. ஒரு நியூஸ் சுதன் அண்ணா சொன்னாரு"

"ம்...சுதன் அண்ணாவா என்ன சொன்னாரு"....'மனசில அன்பை மூடி வைக்க வேண்டாமாம்-வெளியே சொல்லட்டாம்.... தானியா அக்கா அவரது மனசில நீங்க இருக்கீங்க..... உங்க மனசில அவர் இல்லையா... மனசில இருப்பதைச் சொல்லுங்க"...

"துர்கா சாதி, மதம், இப்படி எத்தனையோ பிரச்சனைகள் இருக்கிற இடத்தில இது சரிவருமோ? மனதில் இருக்கலாம்...வெளியே விட்டா கடினம்..... யோசிப்போம்" என்ற வாறே விட்டு விட்டாள்.

நாட்கள் உருண்டன. தினம் துர்கா தானியாவிடம் தூது வருவாள்....

முடிவில் தானியாவின் மனமும்



இளகியது. சரியென சொல்வது என முடிவு செய்தாள். துர்காவிடமும் கூறினாள். பின்னர் பார்வைகள் ஒன்றாகக் கலந்தன...புன் சிரிப்புகள்....கண்கள் மௌன பாஷை பேசின...

மாதமும் ஒன்றானது... இன்று சுதனிடம் தன் மனதிலுள்ளதை கூறிவிட தயாரானாள் தானியா. தனியாக சந்தித்து சுதனுடன் பேசினாள்.

"சுதன் நீங்க விளையாட்டாக செய்ய நினைக்கிறீங்களா?....

'எதை' என வினவுகிறான் சுதன்.

"நீங்க துர்காவிடம் சொல்லி அனுப்பியது பொய்யா"

"நான் துர்காவிடம் எதையும் சொல்லவில்லையே" என்ற சுதனின் வார்த்தைகள் முள்ளாய்த் தைக்க திரும்பிப் பாராது நடக்கிறாள்.

விடயமறிந்த துர்கா வினவிய போதும் "நான் உங்களிடம் என்ன சொன்னேன்" என்று துர்காவிடமே கேட்டான் சுதன்...

அந்த விஷயத்தை ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறாள் துர்கா...

"துர்கா என்ன யோசனை" என்றவாறே வந்த தானியா "துர்கா எனக்கு உன் மேல கோபமில்ல. இது சில ஆண்களின் விளையாட்டு ....பரவாயில்லை காலம் பதில் சொல்லும். இனிமேலும் தூது சொல்ல மட்டும் போகாதே....இது உனக்கு மட்டுமல்ல பல பெண்களுக்கும் பாடமாக அமையட்டும்"... வழியும் விழி நீரை துடைத்தவாறே செல்கிறாள்.



"நாம் இருக்கிறோம் மன்னவா"

என்றார்கள் அவர்கள் மூவரும் ஒரே குரலில்.

மூவரும் மன்னவனின் நண்பர்கள். மன்னன் என்று முடிசூட்டப்பட்டபின்னர் நண்பர்களாகியவர்கள்.

மன்னவன் மீசைக்குள்ளாக புன்னகைத்தான். அது காட்டுக்குள் மின்னல் பளிச்சிட்டது மாதிரி இருந்தது.

"நண்பர்களே! என் முன்னாள் நண்பர்களுக்கு என் அகமும் பிடிக்கவில்லை. என் முகமும் பிடிக்கவில்லையாம். விலகி விலகிப் போகிறார்கள். ஆனால் நீங்களோ என்னை விட மாட்டோம் என்று வியூகமாய் நின்று தாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். வியக்கிறேன். உங்கள் நட்பை மெச்சுகிறேன்."

என்றான் மன்னவன். நண்பர்களில் ஒருவன் தன் கண்களை இடுக்கிச் சிரித்தபடி,

"ஆலமரம் அன்றோ தாங்கள். தரித்திருந்த பறவைகள் சென்றுவிட்டால் ஆலமரத்திற்கு அதனால் நஷ்டமோ? நிழலுக்குள் ஒதுங்கத் தெரியாமல் உச்சி வெயிலில் நின்று தவிப்பதே இஷ்டமென்று அடம்பிடிப்பவர்களால் ஆலமரத்திற்கோ நஷ்டம்?" என்றான்.

மன்னவன் குளிர்ந்து போனான். 'என்னே புத்திசாலித்தனம்?' தன் நண்பனை நினைத்து வியந்து போனான்.

□□

**அ**ந்தப்புரத்தில் தந்தக் கட்டிலில் சொர்க்க சுந்தரி.

அவளின் சொர்ப்பனவிழிகளுக்குள் மன்னவன் தன் தொலைந்த இயத்தை தேடிக்கொண்டிருந்தான்.

நயன விழிகளில் காமன் வில். அவள் சிரித்தால் போதும் அதுவே சொர்க்கம். சில்லென்று அணைத்தாள் என்றாள் அது தான் மோட்சம்.

அப்படித்தான் நினைத்தான் மன்னன். நினைத்தது மட்டுமா?

மன்னவன் என்றாலும் மதன மேடையில் அடிமை வேசம்தான். இறைஞ்சும் குரலில் கேட்டவனுக்கு, வெடுக்கென்று பதில் வீசினாள்,

"வெறுப்பால் வந்த மறுப்பு. நெஞ்சு வேகும் போது கொஞ்ச மனம் வருமோ?"

"வெறுப்பா!?"

மன்னவன் பதறிப்போனான்.

"வள்ளல் அவன் கர்ணன் கூட கேட்டால்தானே கொடுப்பான். அடியே! கேட்காமல் கொடுக்கிறேனே நான் உனக்கு! பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா? இந்தப் புவி வேண்டுமா? கேளடி கண்மணி; கொடுப்பதற்கு இருக்கிறேன் நானடி!"

அழகி குளிரவில்லை.

"கோபம் உங்கள் மீதல்ல, உங்கள் நண்பர் மணியரசன் மீது!"

"அவன் மீது உனக்கேன் கோபம்?"

"அழைத்தீர்கள் வந்தேன். அணைத்தீர்கள் தந்தேன். படித்தீர்கள் விரிந்தேன். ஆரம்பித்தது எல்லாமே நீங்கள் தானே;

மன்னவன் மீசை துடித்தது. மணியரசன் வசை பாடியது கூட பெரிய குற்றமாகப் படவில்லை, 'பள்ளியறையில் இன்று இசைபாட முடியாமல் கெடுத்துவிட்டானே பாவி' அதுதான் நினைக்கவே நெஞ்சில் தீ வளர்த்தது.

"கொஞ்சும் புறாவே! கோபப்படாதே! நஞ்சென்று எவன் சொன்னான் உன்னை, என்னோடு ஒட்டியிருந்த பஞ்சன்றோ அவன். ஊதிவிடுகிறேன்! நீ வா கண்ணே, நெஞ்சினிக்க இதழமுது ஊட்டிவிடு!"

மணியரசன் இருந்தால் மன்னவனை விழிக்க வைத்துத் தொலைத்து விடுவானே பாவி. கஜானாவையே காலி செய்ய வந்த கூட்டம் காவலுக்கு ஒருவன் இருந்தால் பொறுக்குமா?

அந்த எண்ணம்தான் நெருப்பு. அதனால் தான் புகை வந்தது பொற்சிலை மேனியால் சித்து விளையாட்டுக்காட்டும் அழகியிடமிருந்து.




# இலக்கிய நயம்

"ஆருயிர் நீயடி. அருவியும் நீயடி. நனைவது நானடி. சுகம் தருவது உன் மடியடி! அந்தப்புரத்தினில் உன் திருவடி பட்ட நாள் எதுவடி? என் நெஞ்சுக்குள் ஆனந்த திருநாள் அதுவடி!"

என்றெல்லாம் புலம்பினான். ஒரு நாள் சிணுங்கினாள். முத்தம் சிந்த மோகத்தோடு முகம் குனிந்தவன், அவள் முகம் திருப்பியதும் பதம் தவறிவிட்டதே என்று கலங்கினான்.

"ஏன் இந்த மறுப்பு?"

ஆனால் அந்த மணியரசன்..."

"மணியரசன்?"

"வஞ்சகி என்கிறான். தாழம்பூவுக்குள் இருக்கும் நச்சுப்பாம்பு நான் என்கிறான். பூஜைக்கு வந்த மலர் புவியாள்பவன் முடியில் இருக்க நினைப்பதா என்றெல்லாம் எள்ளி நகையாடுகிறான்"

"யார் மணியரசனா?"

"வேறு யார்? அவனேதான்!"

"இதுவரை தராத இன்ப விருந்து! திகட்டாமல் நீ அருந்து; ஆனால் இன்றல்ல, மணியரசனை இந்த மாளிகையில் இருந்து மட்டுமல்ல, உங்கள் மனதில் இருந்தும் என்று வெளியேற்றுகிறீர்களோ அன்று!"

செம்மாங்கனி இதழ்களில் தீர்க்கமான வார்த்தைகள்! 'மணியரசா, கனிப்பாவையின் சரசங்களை கெடுத்துவிட்டாயே பாவி' மன்னவன் கோபமாக வெளியேறிப்போனான்.

□□

**யு**த்தம் மூண்டது.

## தருவது ரசிகன்

பள்ளியறையில் கலைஞனாகிவிட்ட மன்னவனால் படுகளத்தில் வீரனாக போரிட முடியவில்லை.

போரில் தோல்வி. மறுநாள் மீண்டும் போர் தொடரும்.

ஓய்வு பெற மாளிகைக்கு வந்தான் மன்னன்.

உடலில் இரண்டு இடங்களில் விழும்புண். விழும்புண்களுக்கு வேல் விழியாள் தன் கரத்தால் மருந்திட்டால் வலிக்காது இனிக்கும்.

அத்தோடு இதழ் அமுதம்; உற்சாகம் தலைக்கேறும்.

மன்னவன் நடையில் துள்ளல். ஆனால் மாளிகை வெறிச்சோடிக் கிடந்தது.

"எங்கே அழகி?"

அவளும் அந்த மூன்று பேரும் அப்போதே போய் விட்டார்கள் என்று பணியாட்கள் சொன்னர்கள்.

"எப்போது போனார்கள்?"

"போர் நிலவரம் எப்படி இருக்கிறது என்று கேட்டார்கள்!"

"சரி!"

"நமக்குப் பாதகமாக இருக்கிறது என்று சொன்னேன்"

"சரி!"

"அவ்வளவுதான் மன்னா, மூட்டை முடிச்சுக்களோடு நால்வரும் புறப்பட்டு போய்விட்டார்கள்."

மன்னவன் உடைந்து போனான்.

இரண்டாம் நாள் போரில் மன்னவன் மார்பில் அம்பு தைத்தது.

அத்தோடு போர் நிறுத்தப்பட்டது.

மண்ணில் கிடந்த மன்னவன் முகத்தில் வருத்தம்-வேதனை.

"ஏன் வருந்துகிறீர்கள் மன்னா; சாகப்போகிறேனே என்று சங்கடமா?"

கேட்டவன் தேர் சாரதி.

மன்னன் அதற்குப் பதில் சொன்னான்.

"சமர் என்றால் சாவும் வரும் என்று தெரிந்துதான் வந்தேன். நான் வருந்துவது சாவை நினைத்தல்ல!"

"வேறு எதை நினைத்து வருத்தம் மன்னா?"

**"கூட இருந்து விட்டு கேடு வரும்போது கைவிட்டு தூர ஓடினார்களே துரோகிகள்; எமன்கொல்லும் இந்த நேரத்தில்கூட அவர்களை நினைத்து விட்டேன். அதுதானப்பா என் உள்ளம் வருத்தம் கொள்கிறது!"**

வருத்தம் மறையாத முகத்தோடு மன்னவன் உயிர் மறைந்து போனது.

மன்னவன் சொன்ன கருத்தை தெரிவிக்கும் திருக்குறளின் ஒரு பாடல் இதோ;

**"கெடுங்காலை கைவிடுவார்**
**கேண்மை அடுங்காலை**
**உள்ளினும் உள்ளம் சுடும்."**

நட்பாராய்தல்-அதிகாரம்-80
பாடல்-799.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-109

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | 3 | | |
| 4 | | | | | ■ | ■ |
| ■ | ■ | | ■ | ■ | 5 | |
| 6 | 7 | | | 8 | | ■ |
| | | ■ | 9 | | | |
| | 10 | | | | ■ | ■ |
| | | ■ | ■ | 11 | | |

### இடமிருந்து வலம்

02. உடன் பிறந்தவன் இவன்.
04 இதனை ஆண்களும், பெண்களும் வித வித ரகங்களில் வைத்திருப்பர்.
05. கடல் இருக்கும் வரை இது இருக்கும்.
06. செருக்கு என்றும் சொல்லலாம்.
09. உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றான இது எகிப்தில் உள்ளது.
10. இரும்பைக் கண்டால் இழுத்துக் கொள்ளும்.
11. கொள்ளு இதற்குப் பிடித்தமான உணவு.

### மேலிருந்து கீழ்

01. கர்ணன் இதில் பெயர் பெற்றவன்.
02. இது பார்ப்பதும் ஒரு மூடப் பழக்கம்தான்.
03. ஒருவரது முன்னேற்றத்திற்கு இது வரலாகாது.
05. சமையலறையில் உபயோகிக்கப்படும் ஒரு பொருள்.
06. நாடகம், நாட்டியம் போன்றவை இங்கு இடம்பெறும்.
07. அவுஸ்திரேலிய நாட்டின் தேசிய மிருகம்.
08. இது உயர்ந்தால் நீர் உயரும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 22.07.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-109
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-107ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ப | ர | ம் | 2 ப | ரை | ■ | 3 த |
| ம் | ■ | ■ | ரி | ■ | 4 தே | ர் |
| 5 பா | 6 த | ர | ச | ம் | ■ | க் |
| ய் | பு | ■ | ல் | ■ | 7 நு | க |
| ■ | தா | ■ | ■ | 8 நா | ள | ம் |
| 9 சி | ர | ச் | சே | த | ம் | ■ |
| ■ | ன் | ■ | 10 அ | ம் | பு | லி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 107இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. செல்வி. என். தனலட்சுமி, கொழும்பு-13.
2. செல்வி. லதீஜா காதர், மருதானை.
3. எஸ். முத்துக்குமரன், பண்டாரவளை.
4. எம். ஜவ்பர், வெல்லம்பிட்டி.
5. செல்வி. நளினா பீரீஸ், தலைவில்கோயில்.
6. திருமதி. மர்ழியா மன்சூர், காத்தான்குடி-4.
7. கே. மனோரஞ்சன், திருகோணமலை.
8. எம். சிறீமலி, வத்தளை.
9. திருமதி. ஏ.தேவராணி, இரத்தினபுரி.
10. ஜெஸீமா நஸார், அநுராதபுரம்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

**முரசின் வளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கா.வேணுகோபால்-நுவரெலியா.

முரசை தழுவுவதற்கு எத்தனைபேர் தமக்குள் போட்டிபோடுகிறார்கள் என்பது தெரியாதா வேணுக்கோபால். (நான் வாசகர்களை சொல்லவில்லை)



**அரசியல்வாதிகள் எப்படிமிருக்க வேண்டும்?**

எம்.கணேசமூர்த்தி-வவுனியா

எப்படியிருக்கக்கூடாது என்று சொல்கிறேனே; நடிகர்களாக இருக்கக்கூடாது. நடிகர்களும் அரசியலுக்கு வரலாம். அவர்களும் தமது தொழில் திறமையை அரசியல் அரங்கில் காட்டக்கூடாது.

□□

**அரசியல் தீர்வை முன்வைக்கப் போவதாக அரசு கூறியிருக்கிறதே விடிவு பிறக்குமா?**

கே.ஜவாஹர்-கொழும்பு .6

எனக்கு பேராசையெல்லாம் கிடையாது ஜவாஹர்.

□□

**ஸ்டெபி கிராப் வெற்றி குறித்து உமது அபிப்பிராயம் என்னவோ?**

பா.தமிழ் செல்வி-நீர்கொழும்பு.

விட்ட இடத்தை பிடித்ததோடு மேலும் ஒரு கிராண்ட் ஸலாம் விருதையும் வாங்கி வைத்துக்கொண்டார். இது பதினேழாவது கிராண்ட்ஸலாம் விருது. சுருக்கமாகச் சொன்னால் அசத்தும் பெண்!

□□

**'வில்லாதி வில்லன்' பார்த்தீர்களா? தூள்தானே?**

வி.நவ்சாத்-மருதானை

யார் நக்மாதானே? தூள்தான்! இன்னும் கொஞ்சம் போயிருந்தால் நக்மா ஜுஸாகியிருப்பார். சத்யராஜுக்கு நாம் ஒரு பட்டம் கொடுக்கலாமோ, சரசராஜ் !(என்ன தலைவா ஓ.கேயா?)

□□


**கொழும்பைக் கலக்கிய பிணங்கள் விவகாரத்தில் கொலையாளிகளைக் கண்டு பிடித்து விடுவார்களா?**

கு.சுமதி-மண்டூர்.

கொல்லப்பட்டவர்கள் தமிழர்களே என்பது சின்னதாக ஒரு சந்தேகம்கூட இல்லாமல் பளிச்சென்று தெரியவந்துள்ளது. எனவே - சட்டம் கண்டுபிடிக்கிறதோ இல்லையோ, சுமதி நீங்கள் புத்திசாலி! கண்டுபிடித்திருப்பீர்கள் தானே!

□□

**எழுத்தாளர்களிடம் இருக்க வேண்டியது எது?**



ஐ.முகமட்-கல்முனை

கண்டிப்பாக எழுதுகோல், (இப்போது கம்பியூட்டரிலேயே கதை எழுதுகிறார்களே தெரியாதா? சிந்தியா?)

□□

**காற்று வாங்க கடற்கரைக்குப் போன துண்டா?**

சி.லதா-கொழும்பு-15

பிரமாதமான கேள்வி (சிறந்த கேள்விக்கு முரசு பரிசளிப்பதில்லையே) இப்போதெல்லாம் கடற்கரைக்குப் போகும் பலர் காற்று வாங்கப்போவதில்லையாமே! வேறேதோவெல்லாம் வாங்குகிறார்கள் என்று கேள்விப்பட்டேனே லதா, உண்மையா?

□□

**காதல் கசக்காமல் இருக்க என்ன செய்யலாம்?**

என்.நூர்ஜஹான்-காத்தான்குடி

அடிக்கடி இனிப்புச் சேர்த்துக் கொள்ளலாம்.

□□

**தமிழ் படவுலகுக்கு நக்மா ஒரு வரப்பிரசாதம் என்கிறேன் நான்; நீர் என்ன சொல்கிறீர்?**

ஏ.மதிவாணன்-குருநாகல்

சரியான நக்மா பைத்தியமாக்கும் நீர். ஆனாலும் ஒரு சிறு திருத்தம், சதைப் பிரசாதம்.

□□

**மனிதன் இறக்காமல் இருந்தால் என்னவாயிருக்கும்?**

ஆர்.ரொபின்சன்-கண்டி

'முரசு' எவ்வளவு அச்சிட்டாலும் காணாது போயிருக்கும். சனத்தொகை அதிகமாக இருந்திருக்குமல்லவா.(**முரசை இழுக்காமல் பதில் சொல்ல மாட்டீரோ?**)

□□

**சரியான நேரத்தில், சரியான தருணத்தில் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிக்கப்படும் என்கிறாரே அமைச்சர் பீரிஸ்?**

எம்.விஜயராகவன்.-பதுளை

பேராசிரியரும் அரசியலில் ஊறிவிட்டார் என்பதை வெளிப்படுத்தும் சூப்பரான கருத்து அது.

□□

**பணம் இல்லாதவனால் வாழவே முடியாதா சிந்தியா?**

மா. ஊர்மிளா-மட்டக்களப்பு

என்ன செய்வது ஊர்மிளா? எதுவும் இலவசமாகக் கிடைப்பதில்லையே, விலைவாசிகள் வேறு சிக்கு புக்கு ரயிலே என்று நீண்டு கொண்டே போகின்றன. போனால் கிடைக்காது; உடனே பிடிக்க கையில் பணம் வேண்டுமே!

□□

**கவியரசு கண்ணதாசனின் இடத்தை யாரும் இன்னும் நிரப்பவில்லையே-ஏன்?**

சா.அம்பிகாபதி-வவுனியா

கண்ணதாசனை விடுங்கள், அவருக்கு முன்னரும் சில வெற்றிடங்கள் இருக்கின்றனவே! (கம்பன், இளங்கோ, பாரதி) நிரப்பப்பட்டு விட்டனவா என்ன?

# மகாபாரதம்

அங்கம் 86

**இவ்வாரம் (16.07.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

காலத்தின் குரல்:
பாரதவம்சத்தில் ஒளிவிளக்காம் பீஷ்மரவர்
கௌரவரின் படைத்தலைமையென ஏற்றவுடன்
போர்க்களத்துக்கான பொதுவிதிகள் பலவற்றை
ஆர்வமுடன் எடுத்தியற்றி அனைவருக்கும் கொடுத்துவிட்டார்!
கௌரவரோ விதிகள் தமை காற்றினிலே பறக்கவிட்டு
அசுரர்போல் சாதகமாய் கொடுமைகளைத்தான் புரிந்தார்!
பார்த்தனவன் சிந்துமன்னன் தலையதனை கொய்தவனைச்
சாய்த்து விட்ட பின்னர்தான் சூரியனும் தான் மறைந்தான்.
பாரதப் போர்தொடங்கி பதினாலு பொழுதுகளும்
ஓடோடிச் சென்றபின்னும் போர்ச் சங்கேன் முழங்கவில்லை...?
மறந்துவிட்டார் சங்கொலிக்க மாய்ந்துவீழும் வீரர்களின்
நிர்க்கதியா நிலைபெருகி நீட்டிழிவு தொடர்கிறதே.....!

**—காட்சி தொடக்கம்—**

போர்க்களத்தில் இருள் சூழ்ந்தபின்னரும் சங்கொலிக்கவில்லை என்பதனால் போர் தொடர்கிறது. பீமனுக்கும் இடும்மை என்ற அரக்ககுலப் பெண்ணுக்கும் பிறந்தவனான கடோற்கஜன் களத்தில் புகுந்து கவுரவப் படைகளை சங்காரம் செய்கிறான். அவனுடைய ஒவ்வொரு தாக்குதலுக்கும் நூற்றுக்கணக்கான கவுரவ வீரர்கள் வீழ்கின்றனர். நெருப்புப் பந்தங்களினால் கடோற்கஜனைத் தாக்கியும் அவனைப் பின்வாங்க வைக்க முடியவில்லை.

**துரி:** ஆச்சாரியார் அவர்களே....! நமது படைகளுக்கு என்ன நடந்து விட்டது? இப்படி பாண்டவர்கள் படை திடீர் சக்தி பெறக் காரணம் என்ன.......?

**துரோ:** இது ஓர் அசுர சக்திப் போராட்டம் போல் அன்றோ தோன்றுகின்றது!

**துரி:** அசுரரா......? அவர்கள் எங்கேயிருந்து இப்போது வந்து குதித்தார்கள்?

துரோணர், கிருபர் துரியோதனன் மற்றும் கர்ணன் ஆகியோர் கடோற்கஜனைக் கண்டு தாக்கியும் அவனை ஒன்றும் செய்யவில்லை.

**துரி:** மின்னல் தாக்குவதுபோல் எனது படைவீரர்கள் அனைவரையும் தாக்கி நிர்மூலம் செய்யும் இந்த வீரன் யார் குருவே......?

**கிருபா:** இளவரசர் துரியோதனரே......! இவன் பீமசேனரின் மகன் கடோற்கஜனாகத் தானிருக்க வேண்டும்......!

அனைவரும் தொடர்ந்து தாக்குகின்றனர். கடோற்கஜன் அம்பினைப் பிடுங்கி முறித்து எறிந்து விடுகிறான். கர்ணன் முன்வருகிறான்.

**கடோற்:** தானசூர கர்ணன் அவர்களே.....!வணக்கம்! தாங்கள் மாபெரும் வீரர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பீமசேனரின் மகனான என்னுடைய பரிசினை இதோ ஏற்றுக் கொள்ளுங்கள்....!

கர்ணன் வீசிய கணையினையே பிடித்து அதனை கர்ணனுக்கே வீசுகிறான்.

**துரி:** ஆச்சாரியார் அவர்களே! சங்கினை ஊதுங்கள். அல்லாவிட்டால் பீமனின் மகன் எல்லோரையும் கொன்று விடுவான்......!

துரோணாச்சாரியார் சங்கினை ஊதி அன்றையப்போரினை முடிவுக்குக் கொண்டு வருகிறார்.

**—காட்சி மாற்றம்—**

பீமனின் பாசறை-தனது மகன் கடோற் கஜனை அழைத்து வந்து தனது சகோதரர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறான்.

**பீமன்:** வா மகனே.....! அண்ணா.....! தம்பிமாரே....! இவன் தான் என் மகன் கடோற்கஜன்.....!

**யுதிஷ்:** வா மகனே.......பெரும் புகழீட்டி வாழ்வாயாக.....!

**கிருஷ்:** பெரும் புகழோடு வாழ்வாயாக.......!

**அர்ச்:** ஆண்டவன் உனக்கு நீடித்த ஆயுளைத் தருவானாக மகனே......!

**கடோ:** தம்பி அபிமன்யுவால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பக்கூடியவனாக நான் இல்லாதிருக்கலாம், இருப்பினும் என்னையும் உங்கள் சேவகனாகவாவது ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

**அர்ச்:** அபிமன்யுவின் அண்ணன் அல்லவா நீ......? உனக்குரிய இடத்தை நீ ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும் மகனே.....!

**கடோ:** (யுதிஷ்டிரரை நோக்கி) அப்படியானால் பெரிய தந்தையே .....! நமது குடும்பத்தில் இத்தகையானதொரு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் போது எனக்கேன் அறிவிக்காதிருந்து விட்டீர்கள்? என்னுடைய தாயார் ஒரு சத்திரியாயினி அல்ல என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்......இருப்பினும்......!

**கிருஷ்:** மகனே.....! பிறப்பால், எவனும் பிராமணனாகவோ அல்லது சத்திரியனாகவோ ஆகிவிட முடியாது... உன்னைப் போன்ற ஒரு சிறந்த வீரனைப் பெற்றமையினால் உன் தாயாரும் ஒரு சத்திரியாயினிதான் மகனே.....!

**கடோ:** ஓ சக்கரதாரி கிரிதரா...! அப்படியானால், திரௌபதி மற்றும் சுபத்திரையான பெரியம்மா சித்திமார்களின் பிள்ளைகளைப் போல் என்னை ஏன் படை அணிகளிலிருந்து ஒதுக்கி வைத்து விட்டீர்கள்......?

**கிருஷ்:** மகனே....! எந்தச் சம்பவமும் அதற்குரிய வேளையில்தான் நடந்தேறும். இன்று நீ சரியான வேளையில்தான் வந்திருக்கிறாய்.....! ஓ மாவீரனே! நீ எப்போதும் பாரத சமுதாயத்தின் போற்றுதற்குரியவனாகவே இருப்பாய்...! உன்னை ஈன்றெடுத்தவரும் போற்றுதற்குரியவளே....!

**—காட்சி மாற்றம்—**

இடும்பவனத்தில் இடும்பி காளி தேவதைக்குப் பூஜை செய்கிறாள்.

**இடும்பி:** ஏ காளிமாதா......! எனது மகனுக்கு புகழும் பெருமையும் சேர அருள் புரிவாயாக. அவனுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டும் என்று நான் கோரவில்லை. ஏனைய வீரர்கள் பார்த்துப் பொறாமைப் படும்படியான ஆற்றலைக் கொடுப்பாயாக.

மற்றுமோர் அசுரன் உள்ளே வந்து இடும்பியை வணங்குகிறான்.

**இடும்பி:** என்ன தகவல் கொண்டு வந்திருக்கிறாய்.....?

**அசுர:** எல்லாவற்றையும் எடுத்துக் கூற என்னால் முடியவில்லை அம்மா.....! ஆனால் வாசுதேவ கிருஷ்ணன் கூறிய



சில வார்த்தைகள் அசுர சமுதாயத்துக்கு என்றும் பெருமை தரும். 'மகனே! உன்னைப் போன்ற ஒரு வீர மகனை ஈன்ற தாய் சத்திரியாயினியாக இல்லாவிட்டாலும் அவள் போற்றுதற்குரியவளே! என்று அவர் கூறினார். கடோற்கஜனைப் பார்த்து நீ எப்போதும் வீரர்கள் வரிசையில் இடம்பெற வேண்டியவன்' என்றார். அத்துடன் 'எந்தச் சம்பவமும் அதற்குரிய வேளை யில் தான் நடந்தேறும். இன்று நீ சரியான வேளையில்தான் வந்து சேர்ந்தாய்' என்று கூறினார். அதன் அர்த்தம்தான் எனக்குப் புரியவில்லை.....!

**இடும்பி:** (மகிழ்ச்சியாக) ஆகா அப்படியா சொன்னார்? தாயே...! எனது கோரிக்கைக்கு செவிசாய்த்து உன் பக்தையை ஆதரித்து விட்டாய் அம்மா! என் மகனுக்கு உரிய இடத்தை அளித்து அவனைப் பெற்ற தாயை ஏனைய பாரத சமுதாயப் பெண்களில் ஒருத்தியாக்கி விட்டாய் அம்மா.....!

**பின்னணிப் பாடல்**

பிறப்பினால் எவரும் பெரும் பேற்றினையே
பெறுவதேயில்லை, பெருமைகளெல்லாம்
செயற்கரிய செயல் செய்வதனாலே
சேர்ந்தே வளர்ந்திடும் சீரும் செம்மையும்!

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரம்- இறந்து கிடக்கும் வீரர்களின் உடல்களையும் காயப்பட்டுக் கிடக்கும் வீரர்களையும் பல வீரர்கள் சேகரித்துக் கொண்டுள்ளனர். அம்புப்படுக்கையில் கிடக்கும் பீஷ்மரிடம் காந்தாரியும் குந்தியும் வருகின்றனர்.

**காந்தா:** குந்தி! இங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது?

**குந்தி:** இறந்துகிடக்கும் வீரர்களின் சடலங்களைச் சேகரித்துக் கொண்டுள்ளார்கள் அக்கா....

**காந்தா:** வீரர்களே......! நீங்கள் எந்த முனையில் நின்று போரிட்டீர்களோ தெரியாது. உங்கள் அனைவருக்கும் இந்த பாரதவம்சத்தின் மருமக்களான நாங்கள் எங்கள் வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்!

வீரர்களுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு பீஷ்மரை நோக்கிச் செல்லும் போது குந்தி அழுகிறார்.

**காந்தா:** என்ன குந்தி.....? ஏன் அழுகிறாய்?

**குந்தி:** அதோ பிதாமகர்.......வணக்கம் பிதாமகர் அவர்களே....!

**பீஷ்ம:** எத்தகைய ஆசியை உங்கள் இருவருக்கும் வழங்கட்டும்....? இன்றைய சூழ்நிலைக்கு நானும் ஒரு காரணம் என்பதால் உங்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது மக்காள்...!

**குந்தி:** (அழுத வண்ணம்) பாரத வம்சத்துக்கு இத்தகைய நிலை ஏற்பட வேண்டும் என்ற நியதி இருக்குமானால் அதற்காக தாங்கள் ஏன் பழியினை ஏற்க வேண்டும்...?

**பீஷ்ம:** மனிதர்களுடைய நடவடிக்கைதான் விதியினை ஏற்படுத்துகின்றது என்பதை அறிய மாட்டாயா மகளே...? இன்று நடப்பவையெல்லாம் அன்று நான் ஏற்றுக் கொண்டபிரதிக்ஞையின் பயனாக ஏற்பட்ட பக்க விளைவுகள்தாம்! அதற்கான தண்டனையைத்தான் நான் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். அந்தச் சபதத்தின் காரணமாகத்தான் நான் இன்று உயிரினையும் விட முடியாதநிலையிலுள்ளேன் மகளே!

**காந்தா:** தங்களுடைய நிலையினை நானும் நன்கு உணர்கிறேன் தாத்தாஸ்ரீ அவர்களே! என்னைப் பொறுத்தவரை வாசுதேவ கிருஷ்ணனை ஒரு போதும் மன்னிக்க மாட்டேன்! அவன் நினைத்திருந்தால் இந்தப் போரினைத் தடுத்திருக்க முடியும். இன்று துரியோதனனோ அல்லது யுதிஷ்டிரனோ- யார் இறந்தாலும் தாய்மாராகிய நாங்களிருவரும்தான் பெருங் கவலைப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்!

**பீஷ்ம:** தவறாக எடை போடாதீர்கள் பிள்ளைகாள்! வாசுதேவனுடைய சித்தம் பாரத சமுதாயத்துக்கு வெகு தூரம் அப்பாற்பட்டதம்மா.....!

**குந்தி:** இருப்பினும் நாம் அனைவருமே காலத்தின் பிடியில் சிக்கி திண்டாடுபவர்கள்தான் பிதாமகர் அவர்களே....! எங்களுக்குரிய பாகங்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். நாங்கள் அனைவருமே ஒரே சங்கிலியில் கோர்க்கப்பட்டவர்களே! கடந்த காலத்துக்கும் எதிர் காலத்துக்கும் பொறுப்புடையவர்களாக இருக்கும் அதே வேளையில் நிகழ்காலத்தையும் பிரதிபலிக்கிறோம். தாங்கள் அம்புப் படுக்கையில் கிடந்து வேதனைப்படுவது நிதர்சனமாகத் தோன்றலாம். ஆனால் நாங்களோ வெளிப்படையாகக் காண முடியாத வேதனைகளால் வெதும்பிக் கொண்டிருக்கின்றோம். எங்கள் வேதனைகளிலிருந்து விடுபட மார்க்கம் தேடி தங்களிடம் வந்திருக்கிறோம் தாத்தாஸ்ரீ! வாசுதேவனைப் பொறுத்த மட்டில் அவர் இன்பதுன்பங்களுக்கு அப்பாற் பட்டவர்தான்; ஆனால் இதோ அக்காவும் நானும் வாசுதேவ னல்லவே....! (அழுகிறார்) எங்களால் துயரத்தைத் தாங்கிக் கொள்ள முடியவேயில்லை தாத்தாஸ்ரீ! இப்போது நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தயவு செய்து கூறுங்கள் பிதாமகர் அவர்களே.....!

**பீஷ்ம:** ஒரேயொரு வழிதானுண்டு.... பொறுத்திருங்கள்.

**காந்தா:** பொறுத்திருப்பதா....? யாருக்காகப் பொறுத்திருக்க வேண்டும் தாத்தாஸ்ரீ?

**பீஷ்ம:** போர் முடியும்வரைதான் காத்திருக்க வேண்டும்! ஒன்றை மட்டும் நினைவில் வைத்திருங்கள்.......! நமது நாடு அஸ்தினாபுரம் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அர்ச்சுனனோ, துரியோதனனோ அல்லது நானோ இங்கு பிரதானமல்ல மகளே....! யார் வெற்றி பெறப்போகிறார்கள்....யார் தோல்வியை அணைக்கப் போகிறார்கள் என்பது முக்கியமல்ல. அஸ்தினாபுரம்தான் பிரதானமானது. நாடு பாதுகாப்பாக இருக்கும் நிலை ஏற்பட்டால் சகல துன்பங்களும் பறந்தோடிவிடும் மக்காள்......!

**பின்னணிப்பாடல்**

தாய்நாட்டுப் பற்று தன்னையே மேலென
தூயவன் பீஷ்மன் துணிந்துமே ஏற்றவன்!
தன்னலந் தன்னைத் துறந்துமோர் தியாகத்
தழும்பினை ஏற்று துடிக்கிறான் துயரிடை!

**—காட்சி மாற்றம்—**

காந்தாரியின் கூடாரத்துக்குள் துரியோதனன் வருகிறான்.

**துரி:** வணக்கம் அம்மா.....!

**காந்தா:** ஆண்டவன் நீடித்த வாழ்வை அருள்வானாக......

**துரி:** நீண்ட ஆயுளை நான் யாசிக்கவில்லை தாயே....! எனக்கு வேண்டியதெல்லாம் வெற்றிக்கான வாழ்த்தே...! உங்களுடைய மைந்தர்களில் நீங்கள் எத்தனைபேரை இழந்துவிட்டீர்கள் என்ற கணக்காவது தங்களுக்குத் தெரியுமா தாயே.....? தங்களுடைய பிள்ளைகளில் இன்னும் ஆக இருவர் மட்டும்தான் உயிருடன் இருக்கின்றனர்!

**காந்தா:** எந்தத் தாயும் தமது இறந்த பிள்ளைகளைக் கணக்கில் வைத்துக் கொள்வது கிடையாது மகனே! அதே வேளை வெற்றிபெறுவாயாக என்ற வாழ்த்தினையும் நான் உனக்குத் தரப்போவதில்லை....! என்னால் தரக் கூடியதாகவிருந்த வாழ்த்தினைத் தந்து விட்டேன். அத்துடன் திருப்தி அடைவாயாக...! நமது நாடான அஸ்தினாபுரம் பாதுகாப்பாக இருக்கும் மட்டும் தான் நமது வாழ்க்கையும். அந்நாடு இல்லாவிட்டால் நமது அடையாளமும் தொலைந்து போய்விடும்..... ஆகவே இப்போதாவது சமாதானத்துக்கான முயற்சியைச் செய்து பார்!

**துரி:** (கோபத்துடன் குறுக்கிடுகிறான்) முடியாது...! சகோதரர்கள் என்ற அடிப்படையில் என்னிடம் ஏதாவது கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன்! அவர்கள் உரிமை கொண்டாட முன்வந்திருக்கிறார்கள்! எத்தகைய உரிமைகளையும் அவர்களுக்கு நான் தர ஆயத்தமாயில்லை! தாங்கள் உடனடியாக அஸ்தினாபுரம் செல்லுங்கள். இதுவே எனது கோரிக்கை!

**காந்தா:** இல்லை மகனே.... போர் முடியும்வரை நான் இங்கேதான் தங்கியிருப்பேன்!

இப்பொழுது ஒரு தாதி அங்கே வந்து காந்தாரியை வணங்குகிறாள். காந்தாரியை பாண்டவர்கள் பார்க்க வந்திருப்பதாகவும், அனுமதி கோருவதாகவும் கூறுகிறாள். அவர்களை வரவேற்க துரியோதனனும் இருக்க வேண்டும் என்று காந்தாரி கேட்கிறாள்.

**காந்தா:** மகனே....! அவர்கள் உன்னுடைய சகோதரர்கள். கோல்கொண்டு அடித்து நீரைப்பிரிக்க முடியாதல்லவா?

**துரி:** நீர் எப்போதோ பிரிக்கப்பட்டுவிட்டது அம்மா.....இருப்பினும் அவர்கள் வரும்வரை நிற்கிறேன்.....!

பாண்டவர்கள் ஐவரும் வருகின்றனர்.

**துரி:** வணக்கம்!

**யுதிஷ்:** ஆண்டவன் அருள்பாலிப்பானாக... வணக்கம் பெரியம்மா.....!

ஐவரும் ஒவ்வொருவராக வந்து காந்தாரியை வணங்கி ஆசி பெறுகின்றனர்.

**யுதிஷ்:** பெரியம்மா....! எங்கள் சகோதரர்கள் 98 பேரும் இறந்தமைக்கான அனுதாபங்களைத் தெரிவிக்க வந்துள்ளோம். அத்துடன் தங்களது பேரனான அபிமன்யுவும் மாண்டு போனான் என்ற துயரமான செய்தியையும் பகிர்ந்து கொள்ளுகிறோம்!

**துரி:** பெரியண்ணா.....அத்தோடு தம்பி துச்சாதனனுடைய என்னுடைய புதல்வர்களுடைய மறைவுக்கும் சேர்த்துத் துக்கம் கொண்டாடிவிட்டுப் போங்கள்! ஏனென்றால் அதற்கானதோர் சந்தர்ப்பம் இனிமேல் ஏற்படுமோ தெரியாதல்லவா? ஆனால் ஒன்றை மட்டும் மறந்து விடாதீர்கள்.....இன்னும் யுத்தம் முடிந்து விடவில்லை......!

**பீமன்:** துரியோதனா! பாஞ்சாலியின் அவிழ்ந்து கிடக்கும் கூந்தலும் எனது சபதமும் சுலபமாக இந்த யுத்தம் முடிந்துவிட முடியும் என்ற நினைப்பை எமக்கும் ஏற்படுத்தவில்லை!

**காந்தா:** மகனே பீமா.....!

**பீமன்:** மன்னித்துக் கொள்ளுங்கள் பெரியம்மா......! துரியோதனனையும் துச்சாதனனையும் பார்க்கும் போதெல்லாம் அன்று அஸ்தினாபுரி சூதாடு மண்டபத்தில் நடைபெற்ற கேவலமான சம்பவங்கள் நினைவுக்கு வந்து கொண்டிருக்கின்றன தாயே!

***துரியோதனன் சிரிக்கிறான்.***

**யுதிஷ்:** கோபத்தை அடக்க கற்றுக் கொள் தம்பி!

**அர்ச்:** இல்லை அண்ணா.....தர்ம யுத்தத்துக்கு கோபம் எப்போதும் இருந்தாக வேண்டும். அது ஒரு சக்திவாய்ந்த ஆயுதம். அன்புக்குரிய பிதாமகர் இன்று அம்புப் படுக்கையில் படுத்திருப்பதை, எமது சகோதரர்கள் 98 பேர் இறந்ததை, எனது அன்பு மகன் அபிமன்யு அநீதியாகக் கொல்லப்பட்டதை எவ்வாறு மறக்க முடியும்.....? இவற்றுக்கெல்லாம் யார் காரணம் என்பதை எவ்வாறு மறக்க முடியும்.....?

**துரி:** அன்புத் தம்பி அர்ச்சுனா..... உலகில் எங்கணுமே ஒரு சத்திரியன் தன்னுடைய மனைவியையே பணயமாக வைத்த சம்பவம் நடைபெறவில்லை என்பதையும் மறக்கத்தான் முடியுமா?

**நகுல:** அண்ணா துரியோதனா.....! இங்கு எம் பெரியதாயார் இல்லாதிருந்தால் இந்த வார்த்தைகளுக்காகவே உன்னுடைய நாக்கை வெட்டிப் பொசுக்கியிருப்பேன்....!

**யுதிஷ்:** நகுலா......இந்த வார்த்தைகளுக்காக முதலில் பெரியம்மாவிடமும் அண்ணன் துரியோதனனிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்.....!

**நகுல:** பெரியம்மாவின் காலடியில் வீழ்வதற்கு நான் ஆயத்தமாக இருக்கிறேன் அண்ணா....! ஆனால் இவனிடமிருந்து எனக்கு மன்னிப்போ வாழ்த்தோ தேவையில்லை...!

**யுதிஷ்:** அப்படியானால் இந்தக் கூடாரத்தை விட்டு வெளியே போய்விடு!

**காந்தா:** யுதிஷ்ரா....! இந்த முகாமைவிட்டு அன்பு நகுலனை வெளியே போகச் சொல்ல உனக்கு உரிமை இல்லை....!

**யுதிஷ்:** மன்னித்துக் கொள்ளுங்கள் தாயே.....!

**துரி:** அம்மா எனக்கு விடை கொடுங்கள்.. ஆச்சாரியாரைப் பார்த்துப் போர் பற்றி ஆலோசிக்க நான் போயாக வேண்டும். வணக்கம் பெரியண்ணா......!

**யுதிஷ்:** நாங்களும் போயாக வேண்டும் தாயே.....! இன்னும் அம்மாவை நாங்கள் போய்ப் பார்க்கவில்லை..... பாரத சமுதாயத்தை போர் அபாயத்திலிருந்து காத்துக் கொள்ள எவ்வளவோ முயன்றோம் முடியாமற் போய் விட்டது. அனுமதி தாருங்கள்......!

**காந்தா:** வெற்றிக்கான வாழ்த்தினை நான் உனக்கு அளிக்கலாமல்லவா.....?

**யுதிஷ்:** வேண்டாம் தாயே .....என்னுடைய பெரிய தாயாருக்கு அத்தகைய சிக்கலினை ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை பெரியம்மா.....!

ஐவரும் விடை பெற்றுச் செல்கின்றனர்.

**—காட்சி மாற்றம்—**

குருச்சேத்திரத்தில் குந்தி இருக்கும் கூடாரத்தில் பாண்டவர்கள்.

**குந்தி:** மக்களே...! இந்த நிலையில் உங்கள் பெரிய தாயாரை தனியாக விட்டு விட்டு உங்களுடைய கூடாரத்துக்கு நான் வருவது முறையல்ல... தனது 100 புதல்வர்களையுமே போரில் இழக்கும் ஒரு தாய் எத்தகைய துன்பத்தைச் சுமந்து கொண்டிருப்பாள்? நீங்கள் போய் உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்! நான் உங்கள் தாயாவதற்கு முன்னர் பாரத வம்சத்தின் மருமகளாக வந்து சேர்ந்தேன்! ஆகவே அஸ்தினாபுரத்துடனான எனது பிணைப்பு மிக ஆழமானது! போர்க் களத்தில் மகன் சகாதேவனை நன்றாகக் கண்காணித்துக் கொள்ளுங்கள்!

**யுதிஷ்:** பாஞ்சாலி தங்களை வந்து பார்க்க விரும்புகிறாள் அம்மா.....!

**குந்தி:** வேண்டாம்! பாஞ்சாலி என்னை இங்கு வந்து பார்ப்பது நல்லதல்ல. போர் முடிந்த பின்னர் பார்த்துக் கொள்ளலாம். என் வாழ்த்துக்களைக் கூறுங்கள்......அர்ச்சுனா....! இந்த யுத்தம் எப்போதப்பா முடியப்போகிறது.....?

**அர்ச்:** என்னால் அதனைக் கூற முடியாதம்மா...! துரியோதனன், துச்சாதனன், காந்தார மன்னன் சகுனி மற்றும் அந்த தேரோட்டி மகன் கர்ணன் ஆகியோரில் ஒருவர் தானும் உயிருடனுள்ளவரை நடக்கவே செய்யும்! இத்தகைய தீய சக்திகள் அனைத்தும் ஒழித்துக்கட்டப்பட வேண்டியவைகளே...!

**குந்தி:** கர்ணனை இவர்களுடன் ஏன் சேர்க்க வேண்டும். அவன் துரியோதனனுக்குப்பட்ட கடனைத் தீர்க்கவே முனைகிறான்...!

**அர்ச்:** தன்னுடைய கடனை அடைக்கக் கடமைப்பட்டவன் பாஞ்சாலியை ஒரு தாசி என்று அழைக்க அவசியம் இல்லையே அம்மா.....!

**—காட்சி மாற்றம்—**

**துரோணாச்சாரியாரின் பாசறை.**

**துரோ:** கடோற்கஜனைப் பற்றி நினைத்தே என் சிந்தனைகள் எல்லாம் சிதறிப் போய் விட்டன. அவன் பாண்டவர் கையில் மிகவும் பாரதூரமான ஆயுதமாகி விட்டான். முதலில் அவனை அழித்தாக வேண்டும். இதற்கு நிச்சயமாக தெய்வீக சக்தி வாய்ந்த ஆயுதம் ஒன்றுதான் பயன்படுத்தப்பட வேண்டும்! (இருவரும் கர்ணனைப் பார்க்கின்றனர்)

**கர்ண:** என்னை ஏன் எல்லோரும் பார்க்க வேண்டும்? என்னிடமுள்ள திவ்யாஸ்திரத்தை அர்ச்சுனனுக்கு எதிராகப் பாவிப்பதற்காகத்தான் பாதுகாத்து வைத்திருக்கிறேன்! கடோற்கஜனைத் தீர்த்துக்கட்ட வேறு ஏதாவது வழி பாருங்கள்.

**—காட்சி மாற்றம்—**

போர்க்களத்தில் கடோற்கஜன் கவுரவப் படைகளைத் துவம்சம் செய்கிறான் ஆயிரக் கணக்கில் வீரர்கள் கொல்லப்படுகின்றனர். கர்ணன், துரியோதனன்ஆகிய அனைவரையும் காயப் படுத்துகிறான். வாயினால் தீயினை ஊதுகிறான். வானில் தாவி கற்களை எறிகிறான். துரியோதனன் இரத்தம் சொட்டச் சொட்ட கர்ணனிடம் வருகிறான்.

**துரி:** நண்பனே! பார்த்தாயா உன் நண்பனின் கோலத்தை....? இவ்வாறே விட்டு விட்டால் உன் நண்பனும் இல்லை; படைகளும் மிஞ்சமாட்டார்கள்! அர்ச்சுனன் தான் உனக்குப் பெரிதா? உன் நண்பனின் மானம் காக்கப்பட வேண்டாமா?

**கர்ண:** போதும் நண்பனே.....! அவ்வாறு எதுவும் வேண்டாம்.....!

கர்ணன் கண்களை மூடிய வண்ணம் தியானிக்க, அவன் மடியில் திவ்யாஸ்திரம் வந்து சேர்கிறது. அதனைக் கடோற்கஜன்பால் ஏவுகிறான். அவனுடைய மார்பினை திவ்யாஸ்திரம் பிளக்கிறது. பீமனும் ஏனையோரும் இக்காட்சியைக் கண்டு கலங்குகின்றனர்.

**பீமன்:** மகனே....உன்னுடைய விஸ்வரூபத்தை எடு....எதிரிகளின் படை மீது விழுந்து விடு!

கடோற்கஜன் தன் உடலைப் பருக்க வைத்து கவுரவப் படைகள் மீது வீழ்ந்ததும் மேலும் படை வீரர்கள் நசுங்குண்டனர்.

**கடோற்:** வணக்கம் தந்தையே....! எனது இறுதி வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்!

தன் மகனின் இறுதியைக் கண்டு பீமனும் சகோதரர்களும் கலங்குகின்றனர். கிருஷ்ணனும் கண்கலங்கிய பின்னர் சிரிக்கிறார். பீமனும் இதனைக் காண்கிறான்.

**பீமன்:** எனது வீர மகனின் முடிவைக் கண்டு கிருஷ்ணா....! நீ ஏன் சிரிக்கிறாய்?

**கிருஷ்:** உன் மகனின் முடிவைக் கண்டு நான் சிரிக்கவில்லை மைத்துனா..! அர்ச்சுனனின் உயிர் உன்னுடைய மைந்தனின் தியாகத்தால் பாதுகாக்கப் பட்டுவிட்டதை எண்ணித்தான் நான் மகிழ்ச்சியடைகிறேன்! தெய்வேந்திரனால் கர்ணனுக்கு அளிக்கப்பட்ட திவ்யாஸ்திரம் கர்ணனின் கையில் இருப்பதனால் தான் அர்ச்சுனனும் கர்ணனும் மோதக் கூடாதே என்று பயந்து கொண்டிருந்ததேன். இப்போ உனது மகன் கர்ணனின் திவ்யாஸ்திரத்தை தானே வாங்கி அர்ச்சுனனைக் காப்பாற்றி விட்டான்- அபிமன்யுவின் தியாகத்தைவிட கடோற்கஜனின் தியாகம் உயர்ந்து நிற்கிறது. அவனுடைய புகழ் என்றும் நிலைத்திருக்கும் பீமா.....!

**பின்னணிப் பாடல்:**

கர்ணன்கைவசமிருந்த கொடியதொரு கணைதனையே
கடோற்கஜன் பாலேவித்தன் கனசக்தி தனை இழந்தான்!
பார்த்தனவன் தனைப் போரில் மாய்த்திடவே இனி எவரும்
ஆர்த்தெழவே முடியாதென கார்வண்ணன் தான் சிரித்தான்!

(தொடரும்)

எம்.ரீ.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்
4363331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு



வீட்டுக்கு வீடு வாசல்படி என்பதோடு முரசையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வீட்டுக்கு வீடு நதானி -இனிய வீடு நதானியல்லவா முரசு. வீடு நதானியை வெளியே விட மனசில்லை. அதனால் விசேஷ இடம் கொடுத்து பத்திரமாக வைத்திருக்கிறார்கள். படத்தில் இருப்பவர் ஷர்மிளா அஸ்ரப் அலி. புதிய காத்தான்குடியைச் சேர்ந்தவர். வீட்டுல் அனைவருக்கும் முரசில் பிரியம். அதுதான் ஷர்மிளா அஸ்ரப் அலியின் பிறந்தநாள் புகைப்படத்தை முரச புடைசூழ எடுத்திருக்கிறார்கள்.


# என் முரசே! அட..என் முரசே!

Kala JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
4336886
61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

மலை உச்சியில் கலை நயத்தோடு அழகான சின்ன மாளிகை. ஆனால் உள்ளேயிருப்பவர்கள் துறவிகள். புத்த துறவிகள். அப்படியானால் இது இலங்கையில்தான் இருக்கிறது, எங்கே? என்று கேட்பீர்கள். தப்பு.

இந்த மலையுச்சி மாளிகை இருப்பது கிரேக்க நாட்டில் உள்ள மெற்றெயாரா மாநிலத்தில்.

துறவிகளுக்கு தியானம் செய்ய மலையுச்சிதான் தோதான இடம். தென்றல் தடங்கல் இல்லாமல் வீசிச் செல்லும். மனிதர்களின் தொல்லைகளும் அதிகம் இருக்காது. அது மட்டுமல்லாமல் கிரேக்க நாட்டில் 14ம் நூற்றாண்டில் பௌத்த துறவிகளுக்கு எதிரிகளும் இருந்தார்கள். எதிரிகளிடம் இருந்து தப்பிக் கொள்ள, அல்லது தாக்குதலை முறியடிக்க மலை உச்சிதான் மகா வசதி.




சீனா போன்ற நாடுகளில் மலைகள்தான் கெரில்லாப் போருக்கு கூடுதல் வசதி. எப்படித் தெரியுமோ? காடுகளுக்குள் இரு தரப்புமே தம்மை மறைத்துக் கொண்டு பதுங்கி இருக்கலாம். மலையில் என்றால் ஏற்கனவே மலையில் உள்ள தரப்புக்கு தமது எதிரிகள் வருவதை மேலிருந்தே கண்டுகொள்ள முடியும். எதிரிகள் மலையில் ஏறிக்கொள்ள முன்னரே தாக்குதல் நடத்தி அவர்களை உருட்டித்தள்ளிவிடலாம்.

கியூபா புரட்சியிலும் கெரில்லாக்கள் மலையை பயன்படுத்தி தளம் அமைத்து தங்கியிருந்தார்கள். இலங்கையில் வடக்கு-கிழக்கில் மலைகள் எதுவும் கிடையாது. அதனால்தான் அங்கு கெரில்லாப் போர் புத்திசாலித்தனமாகுமா என்று ஆரம்பத்தில் சந்தேகப்பட்டது.

ஏதோ சொல்ல வந்து எங்கோ போய்விட்டோம். விஷயத்திற்கு வருவோம். கிரேக்க பௌத்த துறவிகளும் கெரில்லாப் போருக்கு தயாராகத்தான் இருந்திருக்கிறார்கள். எதிரிகளின் தொல்லையும் இல்லை. எழில்மிகு இயற்கையையும் ரசிக்கலாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் இந்த மலையுச்சி மாளிகை.

# பூ-ஆடும்!-புயலாக!



இலண்டன் 'ஓவிய கூடம்' ஒன்றில் சுவாரசியமான ஆராய்ச்சி. சுவர் இல்லாமல் சித்திரம். சிறப மேனியில் தூரிகை இயங்கி சூரியகாந்திப் பூக்களை உற்பத்தி செய்தது. இரண்டு மணிநேர முயற்சியால் பூவையின் மேனியில் பூத் தோற்றம் வரைந்து முடித்து விட்டு சிரிப்பவர் ஓவியர் 'கிரிஸ் டேர்டன்'.

# சுவரில்லாச் சித்திரம்



ஸ்டெபி கிராப் 26 வயதான ஜெர்மன் இளம் மங்கை. வெள்ளையாய் ஒரு முறை புன்னகைப்பார். ஆனால் வெகுளியான விசயமுள்ளவர்.

ஆனால் ஸ்டெபிகிராப்புக்கு முன்னர் சரியான போட்டி மோனிகா செலஸ். ஸ்டெபிக்கு போட்டி இருக்கலாமா? கூடாதல்லவா என்று நினைத்த ஸ்டெபி கிராபின் தீவிர ரசிகர் ஒருவர் மோனிகாவை கத்தியால் குத்திவிட்டார். காயம் ஆறிய போதும் மோனிகாவால் முன்பு போல் ஆடமுடியவில்லை.

இப்போது ஸ்டெபிக்கு போட்டியாகச் சதிகொடுப்பவர் பெயர் சன்செஸ். அவருக்கு 23 வயது. துடிப்பான பெண். ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். ஸ்டெபிக்கு போட்டியாக சன்செஸ் வளருவதால் அவருக்கு பலத்த பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. ஸ்டெபிமீது பைத்தியமாகவுள்ள ரசிகர்கள் சன் செல்ஸ்மீதும் பாய்ந்துவிடுவாரோ என்ற பயம்.

ஆக, ஸ்டெபி ஆடுகிறார், தனது ரசிகர்களை ஆட்டுவிக்கிறார்.



[illegible]